Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/1325)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 24 வெள்ளிக்கிழமை (06.04.2012) பக்கங்கள் 20 ஓசை – 189



கல்வியில் பின்னடைவு (03)



முடிந்தால் முட்டுங்கள் (17)

கிண்ணியாவில் பாம்புகள் படையெடுப்பு (06)



இணையத்தில் வெள்ளை மாளிகை (11)






வீரர்களின் போர் இன்று (08)

# தெரிவுக்குழு மூலமாகவே தீர்வு



## தலையீடுகளுக்கு இங்கு இடமில்லை

(கொழும்பு)

பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியாக இருக்கிறது. இதற்கு சகல கட்சிகளையும் உள்ளடக்கும் விதத்தில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலமே பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப்பட வேண்டும் என்பதையும் அரசாங்கம் உறுதியாக நம்புகிறது. ஆனால், எந்தவொரு வெளிநாட்டின் தலையீடுகளுக்கும் இடமளிக்க முடியாது. இதுவே அரசாங்கத்தின் நிலைப்பாடு என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. எனினும், உலகில் எந்தவொரு நாட்டிலும் ஆணைக்குழுக்களினால் முன்வைக்கப்படும் பரிந்துரைகளை முழுமையாக நூறுவீதம் அமுல்படுத்தியதில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார். ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவந்த பிரேரணை நிறைவேற்றப்பட்டமை தொடர்பாக நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற சபை ஒத்திவைப்பு விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசும்போதே பேராசிரியர் மேற்கண்டவாறு கூறினார்.

நாடாளுமன்றத்தில் இரண்டாவது நாளாக நேற்று விவாதம் நடைபெற்றது. அமைச்சர் தொடர்ந்தும் பேசுகையில், அமெரிக்கா கொண்டுவந்த பிரேரணை ஊடாக இலங்கைக்கு பாதிப்பு உள்ளது. அதனை ஏற்றுக்கொள்கிறோம். இந்தியா அதற்கு ஆதரவு வழங்கியதாலும், பாதிப்புக்கள் ஏற்பட்டது. அதனையும் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

எமக்கு எதிராக பிரேரணை கொண்டு வந்தார்கள் என்பதற்காகவும், எமக்கு எதிரான பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தார்கள்

19 ஆம் பக்கம் பார்க்க

## அரச ஊழியருக்கு நீல வர்ண சீருடை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஒரே வர்ணத்திலான சீருடை வழங்கப்படவுள்ளது.

இதற்காக பெண்களுக்கான சேலைகள் அடங்கிய ஒரு தொகுதி சீருடைகள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் புதுவருடத்திலிருந்து இவர்கள் கடமையின் போது கட்டாயம் இதனையே அணிந்திருக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின்

19 ஆம் பக்கம் பார்க்க

# வாகன இறக்குமதி ஸ்தம்பிக்கும் ஆபத்து

(கொழும்பு)

இறக்குமதி வரி அதிகரிப்பைத் தொடர்ந்து வாகனங்களின் இறக்குமதியுடன் தொடர்புடைய தொழிற்துறை மிகுந்த ஸ்தம்பித நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக வாகன வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

வாகனங்கள் மீதான அதிகரித்த இறக்குமதித் தீர்வை மற்றும் வேறு நிபந்தனைகள் தொடர்பான தீர்மானத்தை அரசாங்கம் மாற்றாவிடின் தமக்கு இந்த வியாபாரத்தை கைவிடுவது தவிர வேறு வழியில்லை என மீளமைக்கப்பட்ட வாகனங்களை இறக்குமதி செய்வோர் கூறியுள்ளனர்.

வாகனங்கள் மீதான வரியை அதிகரித்தமையை விட அவற்றின் பாவனைக் காலம் குறைக்கப்பட்டமையே பெரிய பிரசசினையாக உள்ளது. முன்னர் இரண்டு

19 ஆம் பக்கம் பார்க்க

# வடக்கில் கடன் கொடுக்கிறது மத்திய வங்கி

(கொழும்பு)

வடமாகாண மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் பல தரப்பட்ட வங்கிக்கடன் உதவிகளை வடமாகாண மத்திய வங்கி வழங்கி வருவதாக வங்கியின் பிரதி முகாமையாளர் பா.சிவதீபன் தெரிவித்தார்.

2009 ஆம் ஆண்டு பிற்பகுதியிலிருந்து இதுவரை மத்திய வங்கி இலகுகடன் திட்டத்தின் மூலம் 6.5 பில்லியன் ரூபா கடன்களை வடமாகாணத்திற்கென வழங்கியுள்ளதாகவும் இதன் மூலம் ஏராளமான மக்கள் பயனடைந்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். விவசாயக் கடன், கால்நடைகள் வளர்ப்பதற்கான கடன், வடக்கின் வசந்தம் கடன் திட்டம், (இரண்டாம் கட்டம்) சுயதொழில் கடன் சௌபாக்கியா கடன், வறுமை ஒழிப்புக் கடன் ஆகிய கடன் வழங்கல் திட்டங்கள் தற்போது நடைமுறையில் காணப்படுகின்றது. அத்துடன் உயர்கல்வியை மேற்கொள்வதற்கான கடன் உதவியாக தகுதி அடிப்படையில் 50 ஆயிரம் ரூபா தொடக்கம் வழங்கப்படுகின்றது.

மேலும் மக்களுக்கு இந்தக் கடன் திட்டங்கள் தொடர்பான நிதியியல் விழிப்புணர்வு கருத்தரங்குகளை வடமாகாணத்திற்கான

19 ஆம் பக்கம் பார்க்க

# இந்தியக் குழுவில் தமிழக எம்.பி.க்கள் புறக்கணிப்பு

(சென்னை)

கொழும்புக்கு வரவிருக்கும் இந்திய எம்.பி.க்கள் குழுவில் தமிழகத்தைச் சேர்ந்த முக்கிய அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

மேற்படி இந்திய நாடாளுமன்ற குழுவில் தமிழகத்தைச் சேர்ந்த அரசியல் கட்சிகளான அண்ணா திராவிட முன்னேற்ற கழகம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம், மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சிகள் என்பவற்றின் உறுப்பினர்களுக்கு இதன் போது சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைப் பயணம் தொடர்பில் தமக்கு எந்தவித தகவலும் வழங்கப்படவில்லை

19 ஆம் பக்கம் பார்க்க

# சிறையில் நடந்த கலப்புத் திருமணங்கள்

(கொழும்பு)

புலிகள் இயக்கத்துடன் தொடர்புபட்டவர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டிருக்கும் ஒருவர் உள்ளிட்ட இருவர் நேற்று வெலிக்கடைச் சிறையில் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டனர்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மீதான தற்கொலைக் குண்டுத்தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புபட்டு குற்றவாளி என நிருபிக்கப்பட்டு 35 வருடகால சிறைத் தண்டனை பெற்றுள்ள

19 ஆம் பக்கம் பார்க்க



# தெற்காசியாவுக்கான ஆசிரியர் பயிற்சி நிலையம்

## கொழும்பில் அமைக்க யுனெஸ்கோ தீர்மானம்

(கொழும்பு)

ஆசிரியர்களின் செயற்பாடுகளை மேம்படுத்த தெற்காசியாவில் ஆசிரியர் மேம்பாட்டு மையம் ஒன்றை அமைக்க ஐ.நா.வின் யுனெஸ்கோ அமைப்பு இலங்கையை தெரிவு செய்துள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அமைச்சர் பந்துல, அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார். இலங்கையிலும் தெற்காசியாவிலும் கல்வியின் தரத்தை உயர்த்த இந்த ஆசிரியர் மேம்பாட்டு மையம் பெரிதும் துணைபுரியும் என்

19 ஆம் பக்கம் பார்க்க

# அமெரிக்காவின் செனற் சபையில் இலங்கை விவகாரம்

(வொஷிங்டன்)

இலங்கையின் களநிலவரம் தொடர்பான விசேட அறிக்கை ஒன்று அமெரிக்க செனற் சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின், சர்வதேச போர்க் குற்ற விவகாரங்களுக்கான உயர்நிலை அதிகாரி ஸ்ரீபன் றப்பினால் தயாரிக்கப்பட்ட இலங்கை தொடர்பான அறிக்கை, அமெரிக்க செனற் சபையில்

19 ஆம் பக்கம் பார்க்க

# ஜனாதிபதிக்கு பலம் சேர்த்தவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

## பீலிக்ஸ் பெரேரா பாராட்டு



(கொழும்பு)

மக்கள் சேவைக்காக தன்னையே அர்ப்பணித்து செயற்பட்டு வருபவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா என சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்தார். நேற்றைய தினம் கம்பஹா ஏக்கல பகுதியில் வாழ்வெழுச்சித் திட்டத்தினூடாக பயனாளிகளுக்கு கைத்தொழில்கள் சார்ந்த உபகரணங்களை வழங்கும் நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் பல தடவைகள் பயங்கரவாதிகளின் கொலைத் தாக்குதல்களிலிருந்து உயிர் தப்பிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மனிதாபிமானம் மிக்கவர். களுத்துறைச் சிறைச்சாலையில் அரசியல் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களைப் பார்க்கச் சென்ற போதும் பலத்த தாக்குதலுக்கு உள்ளானார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீது மிகுந்த அன்பு வைத்திருப்பவர். வடபகுதியிலே எவருமே இல்லாத ஒரு காலத்தில் ஜனாதிபதி அவர்களுக்கு பக்கபலமாக நின்றவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அதுமட்டுமல்லாது வடபகுதியிலே எமது ஜனாதிபதிக்கு பாரியதொரு வரவேற்பை உண்டு பண்ணியவர். சர்வதேச நாடுகளுக்குச் சென்று ஜனாதிபதி அவர்களுக்கு பக்க பலம் சேர்த்தவர் என்றும் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# மின் மார்க்கத்தில் திடீர் ஒழுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிவன் பண்ணை வீதியில் நேற்றுக்காலை இலங்கை மின்சார சபையின் உயர் அழுத்த மின்விநியோகக் கம்பத்தில் பொருத்தப்பட்டிருந்த மாபிள் ஒன்று திடீரென வெடித்துச் சிதறியதால் மின்சாரக் கேபிள் ஒன்று அறுந்து வீழ்ந்து வீதியில் மின் ஒழுக்கு ஏற்பட்டதன் காரணமாக அவ் வீதியூடாக போக்குவரத்துக்கள் தடைப்பட்டிருந்தது.

நேற்றுக்காலை 8.45 மணியளவில் குறித்த வீதியில் யாழ். மாவட்ட உள்ளூராட்சி திணைக்களத்திற்கு முன்பாகவே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

உடனடியாகவே இலங்கை மின்சாரசபையினருக்குத் தகவல் கொடுக்கப்பட்டதன் பிரகாரம் ஸ்தலத்திற்கு விரைந்த அவர்கள் அதனூடான மின்சாரம் துண்டிக்கப்பட்டு அப்பகுதியில் மேலதிக அனர்த்தம் ஏற்படாதவாறு நிலைமை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது.

இவ்வாறு யாழ்.நகரில் மின் விநியோக மார்க்கங்களில் திடீர் திடீரென ஏற்படும் விபத்துக்களின் காரணமாக இலங்கை மின்சார சபையினர் மிகுந்த விழிப்புடன் இருக்கவேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறான விபத்துக்களின் போது நகரின் மின்விநியோகம் துண்டிக்கப்படுவதுடன், மின்சாரம் இன்றி மக்களும், நிறுவனங்களும் மிகுந்த சிரமங்களுக்குள்ளாகும் நிலையும் ஏற்பட்டிருக்கின்றது. (பா)

# வீதி விபத்தில் இளைஞர் காயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளுடன் பிக்கப் வாகனம் மோதியதில் இளைஞர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

டேவிட் வீதியில் நேற்று மதியம் 1.40 மணியளவில் டெனிஸ் மிதிவெடி அகற்றும் நிறுவனத்திற்குச் சொந்தமான பிக்கப் மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் குருநகர்ப் பகுதியைச் சேர்ந்த எஸ்.ஜெயப்பிரகாஷ் (வயது-20) என்ற இளைஞரே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

பிக்கப் மற்றும் மோட்டார் சைக்கிள் சேதமடைந்த நிலையில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது. (எஸ்)

# தொடரும் கஞ்சா வேட்டை

(யாழ்ப்பாணம்)

கஞ்சா வைத்திருந்த இரு நபர்களுக்கு 20 ஆயிரம் ரூபா அபராதம் யாழ்.நீதவான் நீதிமன்றம் விதித்துள்ளது.

யாழ்.நகரப் பகுதியில் யாழ். பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போது பண்டாரவளையைச் சேர்ந்த இருவரில் ஒருவர் 8014 மில்லிக் கிராம் கஞ்சா வைத்திருந்த குற்றத்திற்காக 10 ஆயிரம் ரூபா அபராதமும், 668 மில்லிக் கிராம் கஞ்சா வைத்திருந்த மற்றைய நபருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டமும் செலுத்துமாறு யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா உத்தரவிட்டார். (எஸ்)

# நீர்வேலியில் மணி ஏற்றுதல்

நீர்வேலி கந்தசுவாமி கோவிலின் இராஜகோபுரத்திற்கு தெற்குப் பக்கமாக அமைந்துள்ள மணிக்கோபுரத்தில் மணி ஏற்றி அடிக்கும் வைபவம் இன்று காலை 7.00 மணியளவில் உள்ள சுபவேளையில் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

அனைத்து அடியார்களும் வருகை தந்து இஷ்ட சித்திகளைப் பெற்றுச் செல்லுமாறு பரிபாலன சபையினர் அழைப்பு வித்துள்ளனர்.

## புத்தாண்டு கொண்டாட்டம்

# 51ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

2012 தமிழ் சிங்களப் புத்தாண்டைக் கொண்டாடும் முகமாக 51 ஆவது படைப்பிரிவுத் தலைமையகத்தின் அதிகாரிகள், இராணுவ வீரர்கள் மற்றும் 51 ஆவது படைப்பிரிவிற்குட்பட்ட செல்வபுரம் மற்றும் யோகபுரம் கிராமங்களின் மக்களது பங்கு பற்றுதலுடன் மாபெரும் சித்திரைப் புத்தாண்டு விழா 2012 எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 6.00 மணியிலிருந்து 1.00 மணிவரை 51 ஆவது படைப் பிரிவுத் தலைமையக விளையாட்டு மைதானத்தில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பிரதாயபூர்வ விளையாட்டுகளுக்கு முன்னுரிமை அளித்து எதிர்வரும் 10 ஆம் திகதி இடம்பெறும் சித்திரைப் புத்தாண்டு விழாவில் -

திறந்த சைக்கிளோட்டப் போட்டி (ஆண்கள்), திறந்த சைக்கிளோட்டப் போட்டி (பெண்கள்) கிராமத்தை ஊடறுத்து ஓடும் திறந்த போட்டி (ஆண்கள்), கிராமத்தை ஊடறுத்து ஓடும் பெண்களுக்கான திறந்த போட்டி. ஆண்களுக்கான கிறீஸ் மரம் ஏறும் திறந்த போட்டி, கயிறு இழுத்தல் ஆண்களுக்கான திறந்த போட்டி, கயிறு இழுத்தல் திறந்த போட்டி (பெண்கள்), தலையணைச் சமர் போட்டி (இராணுவ வீரர்கள்), தலையணைச் சமர்ப் போட்டி (சிவில்), யானைக்கு கண் வைத்தல் திறந்த போட்டி, குருடன் பானை உடைத்தல் திறந்த போட்டி, தடை தாண்டல் ஓட்டப் போட்டி (இராணுவ சிவில் அதிகாரிகள்), பணிஸ் சாப்பிடுதல் (12 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கானது), பலூன் உடைத்தல் போட்டி (12 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கானது) முட்டை பிடித்தல் திறந்த போட்டி, விநோத உடை (திறந்த போட்டி), சித்திரை அழகி (திறந்த போட்டி), சங்கீதக் கதிரை (திறந்த போட்டி) என்பன நடைபெறும்.

மேலும் ஆண்களுக்கான சைக்கிளோட்டப் போட்டி எதிர் வரும் 09 ஆம் திகதி காலை 6.00 மணிக்கும், பெண்களுக்கான சைக்கிளோட்டப் போட்டி திர் வரும் 09 ஆம் திகதி காலை 7.00 மணிக்கும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# சுகாதார தின விசேட நிகழ்வு

கோண்டாவில் பொது நூலகம் நடத்தும் உலக சுகாதார தினமும், புத்தாண்டு விழா நிகழ்வும் நாளை காலை 9.30 மணிக்கு கோண்டாவில் பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூர் பிரதேசசபையின் செயலாளர் மேரி ஜோசப் சாந்தசீலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், வடமாகாண உள்ளூராட்சித் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் திருமதி சுஜீவா சிவதாஸ் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். இந்த நிகழ்வில், பட்டிமன்றம், நடனம், சுகாதாரக் கருத்தரங்கு, வாசகர்களின் பாட்டுக்குப் பாட்டு ஆகிய நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

# கருத்தரங்கு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்றம் சாவகச்சேரி பொது நூலகத்தினருடன் இணைந்து நடத்தும் க.பொ.த (உ.த) மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

தென்மராட்சி கலாசார மண்டபத்தில் உள்ளூராட்சி உதவியாளர் திருமதி ஐ.யேமமாலினி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், முதன்மை விருந்தினராக சாவகச்சேரி நகராட்சி மன்ற நகரபிதா ஐ.தேவசகாயம்பிள்ளை கலந்து கொள்ளவுள்ளார். (11)

# வருடாந்த மஹோற்சவம்

(யாழ்.நிருபர்)

காரைநகர் வாரிவளவு அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழா பத்து நாட்கள் சிறப்பாக நடைபெறும்.

எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை புதுவருடப் பிறப்பன்று பிற்பகல் இரதோற்சவமும், மறுநாள் சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (10)

**ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**Media Resources and Training Centre**
**University of Jaffna**

**விசேட மீள் பரீட்சைகள் (பழைய பாடத்திட்டம்)**
**இதழியல் டிப்ளோமா கற்கைநெறி (முழுநேரம், பகுதிநேரம்)**

இதழியல் டிப்ளோமா கற்கைநெறி முழுநேரம் அணி III (2008/2009), பகுதி நேரம் அணி II (2008/2010) கல்வியாண்டு மாணவர்களுக்கான விசேட மீள் பரீட்சை எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப் படிவங்களை ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் பணிப்பாளர் / ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் ஊடாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 15.04.2012

பதிவாளர். (C/1367)

## சிறு விளம்பரங்கள்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1350)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்



அன்புடையீர்,

கடந்த 08.03.2012 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

**அமரர் வாரி கிருஷ்ணன்**

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கல்வளை வீதி,
சண்டிலிப்பாய். (C/1368)

இங்ஙனம்,
குடும்பத்தினர்.

**வெற்றியோ தோல்வியோ எதுவரினும் கடமையைச் செய்வோம். யார் பாராட்டினாலும், பாராட்டாவிட்டாலும் கவலை வேண்டாம். நமது திறமையும், நேர்மையும் வெளியாகும்போது பகைவனும் நம்மை மதிக்கத் தொடங்குவான்.**

**- அம்பேத்கார்.**

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## எப்போதும் வாழும் கோடை!

"கோடைக்கு நான் நல்ல வீரன். குளிர் காற்று மழை வந்தால் குடிலை விட்டு எழும்பேன்" என்று பழைய நகைச்சுவைப் பாடல் ஒன்றுண்டு. இப்போதெல்லாம் கோடையில் வீட்டை விட்டு வெளியே வருவதுதான் சிரமமாக இருக்கிறது. ஏப்ரல், மே என்றால் வீட்டுக்கள் இருப்பது கூட கஷ்டமாகி வருகிறது.

நமது கோடைகள் முன்பைவிட அதிகம் சூடாகி வருகிறது. இதுபோல் வெக்கை இதற்கு முந்தைய ஆண்டுகளில் இருக்கவில்லை என்றே பலரும் அலுத்துக் கொள்கிறோம். இந்தத் துன்பத்தோடு மற்றொரு துன்பச் செய்தியும் சேர்ந்து கொள்கிறது. கோடை இவ்வளவு வரட்சியாக இருந்தால் நீர்வீழ்ச்சியும் வற்றி இந்தாண்டு மின்சாரமும் பழையபடி பற்றாக்குறையாகி விடப் போகிறது என்பதுதான் அது.

குளிர்சாதனக் கருவிகளை நிறுத்தி வைப்பதுதான் நல்லது என்று மின்சக்தி அமைச்சர் அறிவித்திருக்கிறார். குளிரூட்டிகளால் கிடைக்கும் குளிர்ச்சிக்குப் பெரும் விலை கொடுக்க வேண்டும். கோடை கால மின்சாரக் கட்டணம் எக்கச்சக்கமாக உயருவதற்கு இது காரணம். பெரிய நகரங்களில் அலுவலகங்கள் மற்றும் தனியாரும் குளிர்சாதனங்களைப் பெருமளவில் உபயோகிப்பதால், மின்சாரம் அதிகளவு செலவாகிறது. கணினி போன்ற புதிய இலத்திரனியல் உபகரணங்களும் விரைவில் சூடாகிப் பழுதடைந்து விடுவன என்பதால் குளிரூட்டிகள் தொடர்ந்து இயங்க வேண்டியுள்ளன.

இதனால் மின்சாரப் பற்றாக்குறை உண்டாகிறது. இதைத் தாக்குப் பிடிக்க மின்வெட்டு கொண்டு வரப்படுகிறது. மொத்தத்தில் மின்சார உற்பத்தியும் குறைவு, உபயோகமும் அதிகமாக இருப்பதால், கோடையில் அனைவரின் பாடும் கஷ்டமாகி விடுகிறது.

ஏன் குளிர்சாதனப் பெட்டிகள் அதிகம் மின்சாரத்தை உறிஞ்சுகின்றன? குளிர்ச்சிக்கு பிரதானமான காற்றமுத்தி செயற்திறன் குறைந்த ஒரு அமைப்பு. காற்றமுத்திக்கு பதில் வேறு ஒரு வழி இல்லையேல் பெரும்பாடுதான் என்றிருந்தது. இப்போது இதற்கான ஆராய்ச்சியில் விஞ்ஞானிகள் வெற்றி கண்டுள்ளனர். காந்த சக்தியுடைய சில விசேஷ உலோகங்களை ஆராய்ந்து இவர்கள் புதிய வழி ஒன்றைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

பொதுவாக, பல உலோகங்கள் காந்த சக்திக்கு உட்பட்டால் சூடேறும். காந்த சக்தி நீக்கப்பட்டால் சூடு நீங்கி விடும். விஞ்ஞானத்தில் இது பலரும் அறிந்த ஒரு விஷயமானாலும், அதிக உபயோகம் இல்லாத ஒரு செய்தியாகத் தூங்கிக் கொண்டிருந்தது.

1997 ல் விஞ்ஞானிகள் கடோலினியம், சிலிக்கன், மற்றும் ஜெர்மானியம் கொண்ட உலோகக் கலவை, வெப்பத்தை சாதாரண வெப்ப அளவில் காந்த சக்தியால் கட்டுப்படுத்த முடியுமெனக் காட்டினார்கள். இதன் பின், பல புதிய உலோகக் கலவைகளில் இவ்வகை நடத்தை இருப்பதை ஆராய்ந்து வெளியிட்டார்கள்.

2013 ல் சந்தைக்கு 1,000 சதுர அடி வீட்டை குளிர் செய்ய காற்றமுத்தி இல்லாத குளிர்சாதனப் பெட்டியைக் கொண்டு வரும் முயற்சியில் இருக்கிறார்கள். வழக்கமான குளிரூட்டியை விட, மூன்றில் ஒரு பங்கு மின்சாரம் போதுமாம். அத்துடன், இன்று காற்றமுத்திகள் உபயோகிக்கும் இரசாயனங்களைத் தவிர்த்து வெறும் தண்ணீரை உபயோகப் படுத்துமாம். இந்த இரசாயனங்கள் மோசமானவை என்றபோதும் வேறு வழியில்லாமல் உபயோகித்து வருகிறோம்.

வருங்காலத்தில் குளிரூட்டிகள் இன்றி யாருமே இருக்க முடியாத சூழ்நிலை ஏற்படும் போலவே தோன்றுகிறது. இத்தகைய புதிய கண்டுபிடிப்புச் செய்திகள்தான் முதலில் நம் மனங்களைக் குளிர்விக்க வேண்டும்.

- ஆசிரியர்

# பொருத்தமற்ற செயற்பாடுகளே கல்வியின் பின்னடைவுக்கு காரணம்

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர்

(திருநெல்வேலி)

அண்மையில் வெளியான க.பொ.த.(சா/த)தர பெறுபேற்றில் வடமாகாணம் 7 ஆம் இடத்திலிருந்து 9 ஆம் இடத்திற்குத் பின்தள்ளப்பட்டுள்ளது. இதற்குப் பொருத்தமற்ற ஆசிரிய இடமாற்றங்கள் போன்ற செயற்பாடுகள் காரணமாக அமைகின்றன என இலங்கை தமிழர் ஆசிரிய சங்க பொதுச் செயலாளர் இரா.புவனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக குறிப்பிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது, வட கிழக்கு மாகாணங்களில் கல்வி அபிவிருத்தியில் அக்கறையில்லாத, கல்வியின் உயர்வைப் பொறுத்துக் கொள்ள முடியாத ஒரு சிலர் தொழிற் சங்கம் என்ற போர்வையில் மாணவர்களின் கல்வியைச் சீர்குலைக்க முயல்கின்றனர். இதனை நாம் ஒரு போதும் அனுமதிக்க முடியாது.

தேசிய நடைமுறைக்கு ஒவ்வாத ஆசிரிய இடமாற்றங்களை வற்புறுத்தல், வலயத்துக்கு வெளியே அதிபர்களை இடமாற்றம் செய்ய வரிந்து கட்டுதல், 7 வருட இடமாற்றம் என்னும் பாடசாலையின் கட்டுக்கோப்புகளை குலைத்தல், பொருத்தமில்லாத காலங்களில் அவற்றை நடைமுறைப்படுத்தல் போன்ற நடவடிக்கைகள், கல்வி முன்னேற்றத்தில் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்துகின்றன. பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் சிறிதளவேனும் அக்கறையில்லாமலும், பொறுப்பில்லாமலும் செயற்படுவோரின் இச்செயற்பாடுகளை இனிமேலும் அனுமதிக்கமுடியாது.

அதிபர்களையும் மதிக்காமல் நடைபெறுகின்ற இந்த ஒழுங்குபடுத்தப்படாத நடைமுறைகளை நாம் ஒன்றுபட்டு எதிர்க்க வேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். தெற்கில் பாடசாலைகளை சுமுகமாக இயங்கவைத்து வட, கிழக்கில் பாடசாலைகளை ஸ்தம்பிக்க செய்யும் இந்த நடைமுறையை முற்றாகக் கைவிட வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (131)

## சுகாதாரமற்ற உணவங்களுக்கு நீதிமன்றத்தால் அபராதம் விதிப்பு

(வடமராட்சி)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனையினரால் உணவு செய்யும் நிலையத்தின் மீது நடத்தப்பட்ட திடீர் சோதனையின் போது பல உணவகங்கள் சுகாதாரத்திற்கு மாறாக செயற்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனைக்கு உட்பட்ட பருத்தித்துறை நகர பகுதியில் ஒரு உணவக நிலையமும் புலோலிப் பகுதியில் ஒரு உணவகமும் திடீர் பரிசோதனை செய்யப்பட்டது.

மேற்படி பரிசோதனையில் காலாவதியான உணவுப் பொருட்களும், உடல் நலத்திற்கு ஒவ்வாத நிலையில் சுகாதாரத்திற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் உணவு தயாரித்து வழங்கியமையால் இரு நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக உணவுச்சட்டத்தின் கீழ் பருத்தித்துறை நீதி மன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

இவர்களுக்கு எதிரான விசாரணையின் பின் நீதிமன்றத்தினால் புலோலி பகுதி உணவக உரிமையாளருக்கு 3 ஆயிரம் ரூபாவும், பருத்தித்துறை பகுதி உணவக உரிமையாளருக்கு ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஏனைய உணவு விற்பனை நிலையங்களும் சோதனை செய்யப்பட்டு ஆலோசனைகளும் வழங்கப்பட்டதுடன் மேற்படி உணவு கையாளும் அனைத்து கடைகளும் சட்ட ஒழுங்கைப் பேணும்படியும் அதனை மீறும் பட்சத்தில் அத்தகைய உணவகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இச் சோதனையின் போது சுகாதார வைத்திய அதிகாரி, மேற்பார்வை சுகாதார பரிசோதகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (116)

## வடக்கின் வசந்தத்தினால் பயன்தரு மரக்கன்று வழங்கல்

(வடமராட்சி)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் வடக்கின் துரித மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்டு கட்டடங்கள் அமைக்கப்பட்ட இடங்களில் உலக வங்கியின் ஆலோசனைக்கு இணங்க சுற்றுச்சூழலை அபிவிருத்தி செய்யும் பொருட்டு 10 பயன்தரும் மரக்கன்றுகள் இத்திட்டத்தின் ஊடக இலவசமாக வழங்கப்படவிருக்கின்றன.

வடக்கின் துரித மீட்சித்திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்ட கட்டடங்கள் அமைக்கப்பட்ட இடங்களில் நடுகை செய்வதற்கு பொருத்தமான 10 பயன்தரு மரங்களின் வகையினை உடனடியாக அறியத்தருமாறும் இப் பயன்தரும் மரங்களை நடுகை செய்து பராமரிக்கும் பொறுப்பு அவ் அவ் திணைக்களத்தை சார்ந்ததாகும் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, வடக்கின் துரித மீட்சித்திட்டப் பணிப்பாளர் சா.சுதர்சன் அறிவித்துள்ளார். (70)

## இலங்கை வங்கிக் கிளையால் கால்நடை வளர்ப்புக்கு உதவிகள்

(வடமராட்சி)

பருத்தித்துறை இலங்கை வங்கி அம்பன் பகுதி மக்களுக்கு கால்நடை வளர்ப்பிற்கான கடன் வழங்கும் நடவடிக்கைகளை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் எஸ்.தர்மராஜா தெரிவித்தார்.

இக் கடன் வழங்கும் நடவடிக்கை வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் 2 ஆம் கட்ட நடவடிக்கையாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

தொடர்ந்து வடமராட்சி கிழக்கில் மீள் குடியமர்ந்த மக்களுக்கு இந்த வங்கிக் கடன் வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் முகாமையாளர் மேலும் தெரிவித்தார். (100)

## வினாடிவினாப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநரால் நடத்தப்பட்ட 12 வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான புதிர்ப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட யாழ். வலய பாடசாலை மாணவர்களுக்கான வினாடி வினாப்போட்டி இன்றும், நாளையும் யாழ்.வலய கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காலை 8 மணி முதல் மதியம் 2 மணிவரை நடைபெறவுள்ள இப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களை கலந்து கொள்ளுமாறு யாழ்.வலயபிரதிக்கல்விப் பணிப்பாளர் த.இராசலிங்கம் அறிவித்துள்ளார். (எஸ்)

## குற்றச்சாட்டிலிருந்து நீக்க பொன்சேகாவை விடுவியுங்கள்

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை விடுதலை செய்வதன் மூலம் இலங்கை மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் மற்றும் உலக அனர்த்தத்தில் இருந்து தப்பிக்க சிறந்த சந்தர்ப்பம் கிடைக்குமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகா வெளியில் இருந்தால், இலங்கைக்கு எதிராக சர்வதேச குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வரும் இந்த சந்தர்ப்பத்தில், அதற்கு எதிராக அவர் குரல் கொடுத்திருப்பார் எனவும் ஜயசூரிய கூறியுள்ளார்.

சரத் பொன்சேகாவின் நலன் அறியும் நோக்கில், வெலிக்கடை சிறைச்சாலைக்கு சென்ற போது, அங்கிருந்த ஊடகவியலாளர்களிடம் பேசும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். சித்திரைப் புத்தாண்டு காலத்திலேனும் பொன்சேகாவிற்கு ஏதேனும் நன்மை கிடைக்கும் என தாம் எண்ணுவதாகவும் அரசியல் கைதிகளை தொடர்ந்தும் சிறைக் கூண்டில் அடைத்து வைக்க முடியாது எனவும் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

## இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் - பாணன்குளம் நாச்சியம்மன் ஆலய வருடாந்த இரதோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதில் காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து காலை 8 மணிக்கு அம்பாள் தேரில் ஆரோகணிக்கும் காட்சியும் இடம்பெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை காலை 7 மணிக்குத் தீர்த்தோற்சவமும் மாலை 5 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது.

## குத்தகைக்கு காணி

(யாழ்ப்பாணம்)

தென்னிந்தியத் திருச்சபை வேலணைப் பிரதேச சபைக்கு தனது காணியை நீண்டகாலக் குத்தைக்கு வழங்கியுள்ளது.

50 மில்லின் ரூபாய் செலவில் நெல்சிப் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படவுள்ள நவீன வசதிகளைக் கொண்ட இரு மாடிக் கட்டடத் தொகுதிக்கு வங்களாவடிச் சந்தியில் அமைந்துள்ள தென்னிந்தியத் திருச் சபையின் காணி நீண்ட காலக் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இக்காணியினை வழங்கிய பேராயர் டானியல் தியாகராஜாவுக்கு வேலணைப் பிரதேச சபையின் தவிசாளா சி.சிவராசா நன்றியைத் தெரிவித்துள்ளார். (85)

# வடமாகாண சுகாதாரத்துறை யுத்தத்தின் பின் பாரிய முன்னேற்றம்

## வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சுகாதாரத்துறை 30 வருடகால யுத்தத்தின் பின் சகல உத்தியோகத்தர்களது அர்ப்பணிப்பான சேவையினால் இரண்டரை வருட குறுகிய காலத்தினுள் பாரிய அபிவிருத்தி அடைந்துள்ளதாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.



வடமாகாணத்திலுள்ள அரச மருத்துவ அதிகாரிகள் சங்கங்களின் பிரதிநிகள், வைத்திய அதிகாரிகள், வடமாகாண வைத்தியசாலைகளின் பொறுப்புவாய்ந்த வைத்திய அதிகாரிகள் ஆகியோர்களுடனான கலந்துரையாடல் வடமாகாண ஆளுநரின் தலைமையில் கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திலுள்ள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இடம்பெயர்வு, மீள்குடியேற்றம் என்பன பெருமளவில் இடம்பெற்ற போதும் குறிப்பிடும்படியான பாரிய அளவிலான தொற்று நோய்கள் எதுவும் ஏற்படாதவாறு வடமாகாண சுகாதாரத்துறையினர் சேவையாற்றியுள்ளனர். அத்துடன் வடமாகாணத்தில் டெங்கு நோய்த் தாக்கம் சிறந்த முறையில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

பாராட்டத்தக்க வகையில் வடமாகாண சுகாதாரத்துறை காணப்படுகின்ற போது அதனது இலக்கினை அடையச் சகலரும் குறிப்பாக வடமாகாண வைத்திய அதிகாரிகள் சங்கங்களும் ஒற்றுமையாக பொறுப்புடன் செயற்படவேண்டும். அத்துடன் எதிர்வரும் காலங்களில் மருத்துவ உத்தியோகத்தர்களின் தற்காலிக இடமாற்றம், பதில் கடமை, இணைப்பு என்பன எனது மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படும். ஏதாவது குறைபாடுகள் அல்லது பிரச்சினைகள் ஏற்படின் உரிய உயர் அதிகாரிகளை அணுகி அவற்றைத் தீர்த்துக் கொள்ளுமாறும் ஆளுநர் கேட்டுக் கொண்டார்.

இதன்போது கருத்து தெரிவித்த வடமாகாணத்திலுள்ள அரச மருத்துவ அதிகாரிகள் சங்கங்களின் பிரதிநிகள் கடந்த காலங்களில் தமது சங்கப் பிரதிநிதிகள் சிலர் தனிப்பட்ட ரீதியில வெளியிட்ட கருத்துக்களுக்காக தமது வருத்தத்தினைத் தெரிவித்துக் கொண்டனர். எதிர்வரும் காலங்களில் இவ்வாறான செயற்பாடுகள் நடைபெறாது இருக்க தமது உறுதி மொழியினை வழங்கினர்.

இந்நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகான சுகாதார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி எஸ்.ஆர்.யூட், வடமாகணத்திலுள்ள பிராந்திய சுகாதார சேவைகள் ஆணையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திரைப்பட விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தன் எம்ஆர்.ரி.சி. ஆவணத் திரைபட விழா -02 நாளை சனிக்கிழமை பயிற்சி மையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் 'பர்மா வி.ஜே' என்ற ஆவணத் திரைப்படமும், 'மண்டேலா ஆபிரிக்காவின் தந்தை' என்ற திரைப்படமும் திரையிடப்படவுள்ளன.

இந்த இரண்டு திரைப்படங்களும் பல சர்வதேச திரைப்பட விருதுகளைப் பெற்றுள்ளது. காலை, மாலை என இரண்டு அமர்வுகளாக இந்தத் திரைப்பட விழா நடைபெறவுள்ளதுடன் காலை அமர்வு காலை 10 மணிக்கும், மாலையமர்வு பிற்பகல் 2 மணிக்கும் ஜும்மா பள்ளி ஒழுங்கை, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

திரைப்பட ஆர்வலர்கள், ஊடகத்துறை மாணவர்கள் இந்தத் திரைப்பட விழாவில் பங்குபற்ற முடியும் என பயிற்சி நிலையப் பணிப்பாளர் தே.தேவானந்த் தெரிவித்துள்ளார்.

## வசந்தம் ரி.வி.யின் புதுவருட நிகழ்வு

(ஆனைக்கோட்டை)

வசந்தம் தொலைக்காட்சி சித்திரைப் புத்தாண்டை இம்முறை மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் ஆலய முன்றலில் கொண்டாவுள்ளது.

இதனை முன்னிட்டு மரதனோட்டம், சைக்கிள் ஓட்டம், கலாசாரப் போட்டிகள், படகோட்டம் போன்ற பல போட்டி நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டியில் கலந்துகொள்ள விரும்புவோர் சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (104)

# கறுக்காய்த்தீவு மக்கள் தண்ணீரின்றி அவலம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலகத்திற்குட்பட்ட கடற்கரைப் பிரதேசமான கறுக்காய்தீவுப் பிரதேச மக்கள் தண்ணீரைப் பெறுவதில் நாளாந்தம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் தண்ணீர் வசதி குறைந்து காணப்படும் நிலையில் பொதுக் கிணறுகள் ஒரு சில அமைக்கப்பட்ட போதிலும் அவை திருத்தி அமைக்கப்படாத நிலையில் காணப்படுகிறது.

இதேவேளை, இக்கிணற்று நீரும் உப்பு நீராக எதற்கும் பயன்படுத்த முடியாது இருப்பதாகவும் இதனால் வேறு இடங்களுக்குச் சென்றே நீரைப் பெறுக்கொள்வதுடன், குடிநீரையும் தாம் அவ்வாறே பெற்றுக்கொள்வதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே தண்ணீர்த் தேவையை ஓரளவேனும் நிவர்த்தி செய்யும் வகையில் இப்பிரதேசத்திலுள்ள பொது அமைப்புக்கள் இங்குள்ள கிணறுகளைத் திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்குமாறு இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# ஆரம்பப்பிரிவு மாணவர்களின் சித்திரப் போட்டி முடிவுகள்

(வடமராட்சி)

கரவெட்டி கல்விக் கோட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட ஆரம்பப் பாடசாலைகளுக்கு இடையேயான சிறுவர் சித்திரப் போட்டி முடிவுகள் கோட்டக் கல்வி அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு:

**தரம் - 1, கிறுக்கல் சித்திரம**

ச.தக்ஷா - நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை, றோ.தர்மிகா - அல்வாய் சின்னத்தம்பி வித்தி, சி.அபிஷாந் - துன்னாலை காசிநாதர் வித்தி.

**தரம் - 2 அச்சுப்பதித்தல்**

இ.அஜந் -கரணவாய் வேதராணீஸ்வரா வித்தி, ஜெ.அபிநயா - நெல்லியடி மெ.மி.த. க.பாடசாலை, தி.தேனுஜா - வல்வெட்டி விநாயர் வித்தி.

**தரம் - 3, கொலாஜ் சித்திரம்**

வி.திலக்ஷன் - உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி, ச.அபினா - கரவெட்டி தாமோதரா வித்தி, பு.பிரணவன் - அல்வாய் சின்னத் தம்பி வித்தி.

**தரம் -4**

**தரப்படும் காட்சிகளில் ஒன்று**

லோ.ஜனோஷன் - தேவரையாளி இந்துக் கல்லூரி, செ.சந்தோஸ் - கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி, ர.அபித்தா - கரணவாய் மணியகாரன்தோட்ட வித்தி.

**தரம் -5**

இ.யூட்திவ்யராஜ் -கட்டைவேலி மெ.மி.த.க.பாடசாலை, ச.றெனோஜன் - வல்வெட்டி இ.த.க.பாடசாலை, ந.சங்கீர்த்தனன் - உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.

(116)

## திருமுறை முற்றோதல்

(நல்லூர்)

அகில இலங்கை திருமுறை மன்றம் மாதாந்த பூரணைத்தினத்தில் நடத்திவரும் 'அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல்' 'பன்னிரு திருமுறைப் பாராயணம்' இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் தேரடிக்கு முன்னே தேரடி சித்தர் செல்லப்பா சுவாமிகளின் நினைவாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# முல்லைத்தீவு கல்வி வலயத்தில் வருடாந்த புத்தாண்டு விழா

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஜனாதிபதி செயலகப் பிரிவின் அனுசரணையில் முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் வருடாந்த புத்தாண்டு பெருவிழா எதிர்வரும் 8ஆம், 9ஆம், 10ஆம் திகதி காலை 8.30 தொடக்கம் மாலை 7 மணி வரை முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பல்வேறு இடங்களில் நடைபெறவுள்ளது.

இலங்கையில் வாழும் தமிழ், சிங்களம், முஸ்லிம் ஆகிய மூவின மக்களையும் ஒன்றிணைத்து கொண்டாப்படவுள்ள இந்நிகழ்வில், பிரதம அதிதிகளாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, முல்லைத்தீவு அரச அதிபர் என்.வேதநாயகன், அரச அதிகாரிகள், மதகுருமார்கள், கல்வித் திணைக்களத்தினர் மற்றும் பல்வேறு திணைக்களத் தலைவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

அத்துடன் வடமாகாண, வடமத்திய மாகாண, கிழக்கு மாகாண மூவின மாணவ, மாணவிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

மேற்படி நிகழ்வு மூவின மாணவ, மாணவிகளின் விளையாட்டுக்கள் கலை கலாசார மற்றும் பண்பாட்டு விழுமியங்களை உள்ளடக்கிய ஓர் நிகழ்வாக ஒழுங்கு செய்யப்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கடந்த காலங்களில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையினால் இப்படியான ஓர் சிறந்த வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை. எனினும் இன்று எமது நாட்டில் ஏற்பட்டு வரும் சாதகமான சூழ்நிலையின் எடுத்துக்காட்டாக தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவ, மாணவிகளின் கலை கலாசார பண்பாடுகளை அறிந்து கொளளும் வாய்ப்பும் நட்புறவை ஏற்படுத்தும் வகையில் ஓர் பெரு விழாவாக இவ்விழா நடைபெறவுள்ளதாக முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தி தெரிவித்துள்ளார். (116)







**பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் திவிநெகும வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் மரநடுகை வைபவம் நேற்று நடைபெற்றது. இதில் கோப்பாய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற வைபவத்தில் பிரதேச செயலர் இ.பிரதீபன் தேசியக் கொடியை ஏற்றிவைப்பதையும், ஈ.பி.டி. பி.யின் கோப்பாய் பிரதேச அமைப்பாளரும், வலி.தெற்கு கோப்பாய் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான இ.ஜங்கரன் மரம் நாட்டுவதையும் காணலாம். (135)**

# ஆரம்ப சுகாதார நிலையங்களை தீவகத்தில் அமைக்க முன்வரவேண்டும்

(அல்லைப்பிட்டி)

தீவகத்தின் சகல பிரதேசங்களிலும் ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையங்களை அமைக்க அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்வரவேண்டும் என ஈ.பி.டி.பி. யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தீவக பிரதேசங்களின் அபிவிருத்திக்கான ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சிலவேஸ்திரி அலெண்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

யுனிசெப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட அல்லைப்பிட்டி கிராமிய சுகாதார பராமரிப்பு நிலைய திறபபுவிழா நிகழ்வு கடந்த 31 ஆம திகதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வின் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மிகவும் பின்தங்கிய பிரதேசமெனக் குறிப்பிடுகின்ற தீவகப் பிரதேசங்களை படிப்படியாக முன்னேற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்ற எமது பணிக்கு, மேலும் வலுச்சேர்க்கும் வகையில் அரசசார்பற்ற நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டுள்ள இக் கிராமிய சுகாதார பராமரிப்பு நிலையத்தினை அமைத்துதவிய யுனிசெப் நிறுவனத்திற்கு கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் சார்பாகவும் எமது கட்சியின் சார்பாகவும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதேவேளை தீவகப் பிரதேசங்களிலும் பூகோள ரீதியாக



தனித்து இருக்கின்ற தீவுகளிலும் கிராமிய சுகாதார நிலையங்களை அமைக்க யுனிசெப் போன்ற அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வரவேண்டும். போக்குவரத்திற்கு இடையூறாகவுள்ள இப் பிரதேசங்களிலுள்ள மக்களுக்கு மிகவும் அவசியமான மருத்துவத் தேவைகளை நிறைவு செய்வதற்கு ஏற்ற வகையில் கிராமிய சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுவதுடன் வைத்திய அதிகாரிகள் நியமிக்கப்பட்டு சிறந்ததொரு மருத்துவ சேவை முன்னெடுக்கப் படவேண்டும் என்றார்.

இங்கு தமது கருத்துக்களை யுனிசெப் நிறுவனத்தின் யாழ். மாவட்ட வெளிக்களத் தலைமை அதிகாரி டமஸ்கஸ் மச்சேரி, வைத்திய அதிகாரி அருணா புண்ணிய மூர்த்தி, ஈ.பி.டி.பி வேலணை பிரதேச அமைப்பாளரும் வேலணை பிரதேச சபைத் தலைவருமான சின்னையா சிவராசா (போல்), வேலணை பிரதேச செயலாளர் திருமதி மஞ்சுளாதேவி சதீஸன் ஆகியோர் நிகழ்த்தினர்.

முன்பதாக கிராமிய சுகாதார நிலைய கட்டட அமைப்புப் பலகையினை யுனிசெப் தலைமை அதிகாரி திரைநீக்கம் செய்து வைத்ததுடன் கட்டடத்தின் நினைவுக் கல்லினை நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

85 இலட்சம் ரூபா செலவில் இக் கிராமிய சுகாதார நிலையம் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க ஓர் வரப்பிரசாதமாக அமைந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (05,85)

# ஹாட்லிக் கல்லூரிக்கு நிதி ஒதுக்கீடு

(வடமராட்சி)

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் அபிவிருத்திக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு பிரார்த்தனைக் கூட மண்டபம், சைக்கிள் பாதுகாப்பு நிலையம், நூல் விஸ்தரிப்பு நிலையம் ஆகிய கட்டடத்துக்கென பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பாடசாலை அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் 16 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சைக்கிள் பாதுகாப்பு நிலையம் மற்றும் நூல் விஸ்தரிப்பு நிலையத்தின் கட்டட வேலைகள் யாவும் முடிவுற்ற நிலையில் கூட்ட மண்டபத்தின் வேலைகள் இம் மாத நடுப்பகுதியில் முடிவுறுவதோடு எமது மாணவர்களின் கல்விச் செயற்பாட்டில் இதுவும் ஓர் அங்கமாகவுள்ளது.

குறிப்பாக கூட்டமண்டபமும், நூல் விஸ்தரிப்பு நிலையமும் முக்கியமானது. இதனூடாக மாணவர்களது கல்விச் செயற்பாட்டை ஓரளவு நிவர்த்தி செய்ய முடியும் என பாடசாலை அதிபர தெய்வேந்திரராஜா தெரிவித்துள்ளார். (116)

## முரசின் இன்றைய பலன்

(06.04.2012 –வெள்ளிக்கிழமை)

கர வருஷம் பங்குனி 24 ஆம் திகதி. பூரணை பின்இரவு 1.45 வரை. நட்சத்திரம் அத்தம் பின்னிரவு 1.36 வரை. அமிர்தசித்தம். பூரணை விரதம், இராகுகாலம் 10.38 - 12.08 வரை. சுபநேரம் 6.08 - 7.38 வரை. எமகண்டம் 3.08 - 4.38 வரை. குளிகைகாலம் 7.38 - 9.08 வரை. பெரியவெள்ளி

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | புகழ்ச்சி, வெளிநாடு செல்லும் பலன், சகோதரரால் உதவி, சுபகாரியங்கள் கூடிவரும். |
| ரிஷபம் | பயண நிறைவு, புத்திரமேன்மை, புத்திர பாக்கியம், மறைமுகவருவாய்கள். |
| மிதுனம் | செலவினங்கள், அவசரம் கூடாது, பெற்றோரால் ஆலோசனை, தடைதாமதம் விலகும். |
| கடகம் | இருப்பிடவசதி, புத்திரால் கவலை, குடும்பத்தில் ஒற்றுமை, வைத்தியச் செலவுகள். |
| சிம்மம் | காரிய வெற்றி, சகோதரரால் உதவிகள், தொழில மூலமான பணவரவு, ஸ்திரிகளால் தொல்லை. |
| கன்னி | சோதனைகள், தாய் தந்தையார் உதவி, அயலவர் தொல்லை, சொத்துக்கள் விரயம். |
| துலாம் | குடும்பசுகம், கருத்து வேறுபாடு, பறிபோகும் பதவியுயர்வு, பேச்சில் நிதானம் நன்று. |
| விருச்சிகம் | திடீர் நன்மை, போட்டி பொறாமை அகலும், எதிர் பாராத பணவரவு, கூட்டுத்தொழிலில் வெற்றி. |
| தனுசு | ஏமாற்றங்கள், புத்திர வழியில் மகிழ்ச்சி, பொன்பொருள் சேரும், பணவரவு தாராளம். |
| மகரம் | முதியோர் ஆசிகள், நண்பர்களால் அனுகூலம், குடும்பத்தில் ஒற்றுமை, சிக்கனம் நன்று. |
| கும்பம் | பொருள் விருத்தி, பணியில் திருப்தி, தேவையற்ற இடமாற்றம், சுப காரியங்கள். |
| மீனம் | பொருள் சேர்க்கை, செலவுகள் அதிகரிப்பு, பேச்சில் நிதானம் நன்று, வீண்பழி கேட்டல். |




பாழ்.எயிட் நிறுவனத்தினால் நாவாந்துறை நித்திய முன்பள்ளி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது.

இதில் அவுஸ்ரேலிய மெல்பேர்ன் நகரிலிருந்து வருகை தந்த நித்திய ஒளி அறக்கொடை அமைப்பினைச் சேர்ந்த பிரதிநிதிகள் முன்பள்ளி மாணவர்களுக்கான உபகரணங்களை வழங்கி வைத்தனர். அவர்களுடன் மாணவர்கள் நிற்புதனை காணலாம்.

# நிலாப் விழா

(வடமராட்சி)

GAZ நிறுவனத்தின் அனுசரணையில் முல்லைத்தீவு கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் "நிலாப் விழா" இன்று வெள்ளிக்கிழமை 9 மணிக்கு தண்ணீரூற்று முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் தண்ணீரூற்று இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, தண்ணீரூற்று முஸ்லிம் வித்தியாலயம், வவுனியா அக்கபோதி சிங்கள வித்தியாலயம் ஆகிய பாடசாலையின் முஸ்லிம், இந்து, பௌத்தம் போன்ற மூவின மாணவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மூவின மதம் சார்ந்தவர்களின் சமாதானத்தையும், உறவுப்பாலத்தையும் உருவாக்கும் நோக்குடன் மாபெரும் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளதாக முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தி தெரிவித்துள்ளார். (116)

# நடன ஆசிரியர் இல்லாததால் கலைப் பாடத்தைக் கற்க முடியாத நிலை

–மாணவர்கள் கவலை தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் முக்கிய பாடசாலைகளில் ஒன்றான கிளிநொச்சி இந்துக்கல்லூரியில் நடன ஆசிரியர் இன்மையால் மாணவர்கள் பல்வேறு சிரமங்களுக்குள்ளாவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இப்பாடசாலையில் முன்னர் கடமையாற்றிய நடன ஆசிரியர் கடந்த வருடம் இடமாற்றம் பெற்று சென்ற நிலையில், இதுவரை பதில் நியமனம் எதுவும் செய்யப்படாததால் கலைத்துறைப் பாடத்தை கற்க முடியாது மாணவர்கள் சிரமப்படுவதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இது குறித்து பாடசாலை அதிபர் பல தடவைகள் சம்பந்தப்பட்டவர்களிடம் முறையீடு செய்தும் இன்றுவரை மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பதுடன் இதே மாவட்டத்தில் ஒருசில பாடசாலைகளில் நடன ஆசிரியர்கள் தேவைக்கு மேலதிகமாக இருந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அடுத்த தவணைக்காவது ஒரு நடன ஆசிரியர் நியமனம் செய்யவேண்டியது சம்பந்தப்பட்டவர்களின் கடமையாகும்.

இப் பாடசாலை மாணவர்களது கலைத்துறை வளர்ச்சியில் கவனம் செலுத்துவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை கல்வி வலயம் மேற்கொள்ள வேண்டும் எனப் பெற்றோர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (142)

# சங்கிலியன் வீதி புனரமைப்பு



(யாழ்ப்பாணம்)

நல்லூர் - சங்கிலியன் வீதி தார் ஊற்றி புனரமைக் கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக இவ்வீதி திருத்தப்படாமல் இருந்தமையால் இவ்வீதிப்பகுதியில் வாழும் குடும்பங்கள் போக்குவரத்துச் செய்யமுடியாமல் பல்வேறுசிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.

மேலும் இவ்வீதி குண்டும் குழியுமாகச் சேதமடைந்திருந்த நிலையில் மழைகாலங்களில் வெள்ளநீர் தேங்கி மக்கள் பயணம் செய்யமுடியாத நிலை காணப்பட்டது.

இந்தநிலையில் பொதுமக்களின் போக்குவரத்து தேவையைக கருத்தில் கொண்டு யாழ்.மாநகரசபையினால் இவ்வீதி புனரமைப் பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இப்புனரமைப் புப்பணிகள் யாழ்.மாநகரசபை முதல் வருடைய செயலாளரின் மேற்பார்வையின் கீழ் இடம்பெற்றது.

# நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ் - கிளிநொச்சி முஸ்ஸிம் சம்மேளனம் புதிய தலைவர், உப தலைவரை தெரிவு செயதுள்ளன.

கடந்த வாரம் யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி மண்டபத்தில் எம்.ஏ.ஸி.எம்.அமீன் தலைமையில நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் புதிய தெரிவுகள் நடைபெற்றன.

தலைவராக எம்.நிலாம், செயலளராக எம்.எம்.எம்.றமீஸ் (உதவி மேயர்), பொருளாளராக எம்.எஸ்.எம்.சுபுஹான், உப செயலாளராக ஆர். என்.சுவர்கான், உபதலைவராக எம்.எல்.லாபிர்(ஊடகவியலாளர்) மற்றும் யாழ்.பள்ளிவாசல் நிர்வாகிகளும், யாழ்.முஸ்ஸிம்களின் 13 சமூக சேவை நிறுவனங்களும் சம்மேளனத்தில் இணைந்து செயற்பட்டுவருகின்றன.

எதிர் காலத்தில் மீள்குடியேற்ற நடவடிக்கைகளில் துரிதமாக ஈடுபடுவதை பிரதான,நோக்கமாகக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (105)



# பரிந்துரைகளில் முக்கியமானவற்றை விரைவாக அமுல்படுத்த வேண்டும்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் முக்கியமானவற்றையும் முடியுமானவரை விரைவாக அமுல்படுத்த வேண்டும்.

குறிப்பாக அரசியல் தீர்வுடன் சம்பந்தப்பட்ட பரிந்துரைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழு என்பது எமது அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட குழுவாகும். எனவே அதன் பரிந்துரைகளை அமுல்படுத்தும் கடப்பாடு எமக்கு உள்ளது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுவின் பரிந்துரைகளும் அடங்கிய அறிக்கையை நான் ஒரு முற்போக்கான அறிக்கையாகவே பார்க்கின்றேன். அந்த ஆணைக்குழுவுக்கு நானும் எனது யோனைகளைச் சமர்ப்பித்திருந்தேன். அந்த வகையில், நான் முன்வைத்த பல பரிந்துரைகள் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், எமது அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தும் கடப்பாடு எமக்கு இருக்கின்றது.

அதேவேளை நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை விரைவாக அமுல்படுத்தவேண்டும் என்று நான் எண்ணுகின்றேன். அறிக்கையில் பொருத்த மற்ற சில பரிந்துரைகளும் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. அவ்வாறு சில பரிந்துரைகள் இருப்பதாக நானும் உணர்கின்றேன்.

ஆனால், அரசியல் தீர்வு சம்பந்தப்பட்ட பரிந்துரைகள் மிக விரைவில் நடைமுறைப்படுத்தப்படுவது அவசியமாகும். காரணம் அரசியல் தீர்வு என்ற விடயமானது மிகவும் அவசியமாக முன்வைக்கப்படவேண்டிய விடயமாகும். எனவே, இது குறித்து அனைத்துத் தரப்பினரும் ஆழமாக செயற்படவேண்டியது முக்கியமாகும்.

60 வருட பிரச்சினைக்கு 30 நாட்களிலோ அல்லது 30 வாரங்களிலோ தீர்வுகாண முடியாது. இது நீண்டகால செயற்பாடாகவே இருக்கும். எனவே அனைத்து விடயங்களையும் புரிந்து கொண்டு பரிந்துரைகளை விரைவாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்பதே நான் வலியுறுத்தும் விடயமாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

# வெள்ளைக்கார பயங்கரவாதம் முடியவில்லை என்கிறார் விமல்



(கொழும்பு)

இலங்கையில் விடுதலைப்புலிகளின் பயங்கரவாதம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டாலும், சகல பயங்கரவாதங்களும் இன்னும் முடிவுக்கு வரவில்லை எனவும் கழுத்து பட்டியணிந்த வெள்ளைக்காரப் பயங்கரவாதம் இன்னும் செயற்பட்டு வருவதாகவும் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஜெய்க் ஹில்டன் விடுதியில் அண்மையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சில துறைகளில் சம்பிரதாயமான பயணத்தை மாற்றி கட்டமைப்பை மாற்றியமைக்க முயற்சிக்கும் போது, வெள்ளைக் கழுத்துப் பட்டி மாபியாக்களிடமிருந்து பாரிய அழுத்தங்கள் கொடுக்கப்படுவதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

# அரசியல் தீர்வினை ஏற்படுத்த அரசுக்கு சம்பந்தன் ஒத்துழைப்பு

## சுரேஷ் குழப்பவாதி என்கிறார் சஜின்

(கொழும்பு)

அரசியல் தீர்வு காண்பதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தலைவர் ஆர். சம்பந்தன் உண்மையான அக்கறையுடன் அரசுக்கு ஆதரவு வழங்கி வருகின்ற போதிலும், சுரேஷ் பிரேமச்சந்திரன் தீவிரவாத கண்ணோட்டத்துடன் இச்செயன்முறைக்கு இடையூறு ஏற்படுத்துவதுடன் அரசுக்கு எதிராகச் செயற்படுகிறார் என ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஜெனிவா தீர்மானம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுரேஷ் பிரேமச்சந்திரன் போன்றவர்கள் தமிழ் சமூகத்தை தீவிரவாதத்தை நோக்கி தள்ளுகிறார்கள் என்றும் சஜின் வாஸ் குணவர்தன குற்றம் சாட்டினார். இவ் ஆணைக்குழுவின் சிபாரிகள் அமுல்படுத்தப்பட மாட்டாது என அரசாங்கம் ஒருபோதும் கூறவில்லை என்றும் அவர் கூறினார்.

ஜெனிவா தீர்மானமானது நிறைவேற்றுவதற்கான கடப்பாடு இல்லாத தீர்மானம் என்றபோதிலும், அது இலங்கை அரசாங்கத்தை கவிழ்க்க விரும்பும் சர்வதேச சமூகத்தின் ஒரு பகுதியினரின் தந்திரோபாயத்தில் ஒரு முன்னோக்கியபடியாக அமையலாம். நாம் அதை அறிவோம் என்றும் அவர் கூறினார்.

# அழுத்தங்களுக்கு அடிபணியோம்

வெளிநாட்டு அழுத்தங்களுக்கு அடிபணியப் போவதிலலை என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்துள்ளார்.

எந்தக் காரணத்திற்காகவும் நாட்டின் இறைமை தொடர்பில் விட்டுக்கொடுப்புக்கள் செய்யப்படமாட்டாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவளித்த காரணத்தினால் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் விரிசல் ஏற்பட வாய்ப்பில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பாம்புகள் படையெடுப்பு



(திருகோணமலை)

கிண்ணியா - குட்டிகாராச்சி பாலத்தின் இருமருங்கிலும் இலட்சக்கணக்கான பாம்புகள் குவிந்தவண்ணமுள்ளன. இப்பாம்புகளைப் பார்வையிட பலபிரதேசங்களிலிருந்தும் ஏராளமான மக்கள் வருகை தந்த வண்ணமுள்ளனர். இரவு வேளைகளிலும் இவற்றைப் பார்வையிட மக்கள் வருவதனால் வீதிகளில் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் கடந்த வெள்ள அனர்த்தம் ஏற்படுவதற்கு முன்னர் மட்டக்களப்பு கல்லடிப்பாலத்தில் இவ்வாறு பாம்புகள் படையெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் குறைகளைத் தீர்க்க உதவாது



(கொழும்பு)

இலங்கைக்கு எதிரான ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் யுத்தத்தால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களின் குறைகளைத் தீர்க்க உதவாது என கனடாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சித்திராங்கனி வாகீஸ்வர் தெரிவிததுள்ளார்.

இலங்கையில் மீண்டும் தீவிரவாதிகள் தலைதூக்க இலங்கை மக்கள் ஒருபோதும் இடமளிக்க மாட்டார்கள் என கனேடிய பத்திரிகை ஒன்றிற்கு அளித்துள்ள செவ்வியில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட உள்நாட்டு தயாரிப்பு எனவும் கடந்த காலங்களில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் மீண்டும் இடம்பெறாது தடுப்பது மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது இக்குழுவின் நோக்கம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆணைக்குழுவின் பரிந்துரையின்படி பொருளாதார அபிவிருத்தி, மீள்குடியேற்றம், வாழ்வாதார வளர்ச்சி என்பன செய்யப்பட்டு வருவதோடு அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தையும் இடம்பெற்று வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

30 வருட கால யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில், இலங்கை அரசாங்கம் அதன் மக்களுடன் இணைந்து நல்லிணக்கம் மற்றும் சமரசத்தை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முல்லையில் குடியேற்றம்

(வவுனியா)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேற்றப்படாதிருந்த 6000 பேர் எதிர்வரும் ஜூன் மாதம் 30 ஆம் திகதி மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பி.எம். எஸ்.சால்ஸ் தெரிவித்துள்ளார்.

கண்ணிவெடி அகற்றும் பணியில் ஏற்பட்ட தாமதமே மீள்குடியேற்றம் செய்யப்படாமைக்கான காரணம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதே கண்ணிவெடி தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம் பெற்ற நிகழ்வில் உரையாற்றிய அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கில் கண்ணிவெடி அகறறும் பணிகளில் 12 குழுக்கள் ஈடுபட்டு வருவதாகவும், கண்ணிவெடியில் அகப்பட்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2009 ஆம் ஆண்டே அதிகமாக காணப்பட்டதாகவும் அவர் கூறினார்.

# பாகிஸ்தானுடன் வர்த்தக உறவு; மேம்படுத்த அதிக ஆர்வம்

(கொழும்பு)

பாகிஸ்தானுடனான வர்த்தக உறவுகளை மேம்படுத்திக் கொள்ள இலங்கை அதிக ஆர்வம் கொண்டுள்ளதென பாகிஸ்தானுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் ஜயலத் வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளும் அரசியல் ரீதியில் சிறந்த நட்புறவைக் கொண்டு இயங்கி வருவதாகவும் வர்த்தக நடவடிக்கையிலும் இதனைக் கடைப்பிடிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தான் ராவல்பண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பாகிஸ்தான் வர்த்தக சங்கத் தலைவர் ஜவாத் அக்தார் பாத்தியுடனான சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தெற்காசிய வலயத்தில் உள்ள நாடுகளான பாகிஸ்தான் - இலங்கைக்கு இடையிலான வர்த்தக உறவுகள் வலய மட்டத்தில நன்மைகளை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும் என ஜயலத் வீரக்கொடி கூறியுள்ளார்.

இலங்கை -பாகிஸ்தானில் முதலீடுகளை செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் பாகிஸ்தான் வர்த்தகப் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்து சந்தை கேள்விகள் குறித்து ஆராய வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானும் இலங்கையும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள போதும் இரு நாடுகளுக்கும் இடையில் மிகக் குறைவான $344 மில்லியன் தொகை வர்த்தகமே இடம்பெற்று வருவதாக பாகிஸ்தான் வர்த்தக சங்கத் தலைவர் ஜவாத் அக்தார் பாத்தி இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

# கடும்போக்கான அமைப்புக்களால் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது

## அமைச்சர் ஹக்கீம் கூறுகிறார்



(கொழும்பு)

கடும்போக்குடைய அமைப்புக்கள் தொடர்ந்தும் இயங்கி வருவதாகவும் அவர்களின் நடவடிக்கைகளினால் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

தமிழ் புலம்பெயர் மக்கள் தொடர்ந்தும் புலிகளை வலுப்படுத்த முயற்சிக்கின்றனர். தனி இராச்சிய கோட்பாட்டையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது. முதலில் அந்தக் கோட்பாடு இல்லாமல் செய்யப்பட வேண்டும்.

கடும்போக்குடன் கூடிய கோட்பாடுகள் நிலவும் வரையில் கற்றுக கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்மொழிவுகளை அமுல்படுத்த முடியாது. ஜெனிவாவில் இலங்கையின் நிலைப்பாடு தொடர்பில் தெளிவான விளக்கம் அளிக்கப்பட்டது.

ஜெனிவா அமர்வுகளின் போது ஒத்துழைப்பு வழங்கிய நாடுகளிடம் நாம் அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் என அமைச்சர் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.



# முத்தரப்பு

## பேச்சுவார்த்தை சாத்தியமா?

**இனப்பிரச்சினைக்கு** தீர்வு காண முத்தரப்பு பேச்சுவார்த்தை மூலம் முயல வேண்டும் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சுரேஷ் பிரேமச்சந்திரன் கருத்து தெரிவித்துள்ளார். ஒருவிதத்தில் இது நியாயமாகத் தோன்றினாலும் இன்றைய சூழ்நிலையில் முத்தரப்பு பேச்சுவார்த்தை சாத்தியமா என்ற கேள்வியும் உடன் எழுகிறது.

முத்தரப்பு பேச்சுவார்த்தை என்று கூறும்போது, அதில் அரசு தரப்பு, கூட்டமைப்பு மற்றும் சர்வதேச சமூகத்தின் பிரதிநிதியோ அல்லது தனியொரு நாடோ பங்கு பெறும் என்ற அர்த்தத்திலேயே பிரேமச்சந்திரனின் கருத்தை காண வேண்டும். இதுதான் முன்பு நடைபெற்ற முத்தரப்பு பேச்சுவார்த்தைகளின் முறையாகவும் இருந்து வந்துள்ளது. இன்று ஜெனிவா வாக்களிப்புக்கு பின் அத்தகைய சூழ்நிலை நிலவுகிறதா என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

வாக்களிப்பிற்கு முன்னரும் சரி, பின்னரும் சரி, உள்நாட்டு பிரச்சினையில் சர்வதேச “தலையீட்டை” அரசு தொடர்ந்து எதிர்த்து வருகிறது. கூட்டமைப்பை பொறுத்தவரையில் வேண்டுமென்றால் அது சர்வதேச பங்களிப்பாக இருக்கலாம். ஆனால், அரசு மற்றும் சிங்கள அரசியல் கட்சிகளில் பெரும்பாலானவற்றின் எண்ணம் மாறாகவே இருக்க வாய்ப்புள்ளது. “சிங்கள பேரினவாத” கட்சிகளின் தாக்கீதும், தாக்கமும் ஒரு புறம் என்றால், கடந்த காலம், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அளித்துள்ள ‘பாடம்’ மறு புறம்.

எண்பதுகளில் இந்தியாவின் பங்களிப்பை ஏற்றுக்கொண்ட அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனா, அதற்கு தனது கட்சியில் இருந்து வந்த எதிர்ப்பை சமாளிக்க முடியாமல் தவித்தார். இன்றுபோல் அல்லாமல், அன்று சிங்கள பேரினவாதக் கட்சிகளின் தாக்கமும் வீச்சும்

- என்.சத்தியமூர்த்தி

அப்போது அதிகமாகவே இருந்தன. அவரது ஐக்கிய தேசியக்கட்சியையே சார்ந்த அப்போதைய பிரதமர் பிரேமதாசவின் ‘கொள்கை ரீதியான’ எதிர்ப்பும் அவரைக் குழப்பியது.

அதிலும் குறிப்பாக, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்து, பிரதமர் பிரேமதாச நாடாளுமன்றத்தைப்புறக்கணித்தது, ‘நிறைவேற்று ஜனாதிபதி’ ஆட்சிமுறையிலும் பல்லில்லாத பிரதமர் கையில் இருக்கும் அரசியல் ஆயுதத்தின் வலிமையைத் தெளிவுபடுத்தியது. பின்னர், ஒப்பந்தத்தை எதிர்த்து அவர் வெளிப்படையாகவே பிரசாரம் செய்தது, அதன் அடிப்படையிலேயே ஜனாதிபதித் தேர்தலில் வென்றது என்பன போன்ற நிகழ்வுகள் இன்னும் நினைவில் இருந்து அகலவில்லை. ஜனாதிபதியாக அவர் பதவியேற்ற பின், விடுதலைப் புலிகள் இயக்கத்தினரோடே ஒப்பந்தம்செய்துகொண்டு, இந்திய அமைதிப் படையை திருப்பி அனுப்பியது என்பன போன்ற இராஜகீய அனர்த்தங்களும் அப்போது தான் அரங்கேறின.

> **பேச்சுவார்த்தை என்று வரும் போது பழைய பல்லவி பாடுவதும், தங்களது சமூகம் பல்வேறு காலகட்டங்களில் வஞ்சிக்கப்பட்ட கதைகளை எல்லாம் கூறி பொருமுவதும் தமிழ் அரசியல் தலைமைக்கு பழக்க தோஷத்தால் ஓர் அரசியல் கட்டாயமாகவே மாறிவிட்டது. ஆனால், அதுபோன்ற கடந்த கால அரசியல் அனுபவங்கள் அரசுக்கும், சிங்கள அரசியல் தலைமைகளுக்கும் இருக்கும் என்று யாருமே கருதி செயல்படுவதாக தெரியவில்லை.**

அதாவது, உள்நாட்டில் தங்களுக்குள்ளேயே எத்தனை தூரம் மாறி மாறி தாக்கிக் கொண்டாலும், அல்லது தாக்கி கொன்றாலும், வெளிநாட்டு சக்திகளுக்கு இடம் கொடுக்க மாட்டோம் என்ற தத்துவார்த்த ரீதியிலான நிலைப்பாடு அப்போதுதான் தோன்றியது. பின்னர், நோர்வே இடைப்பட்டு போர் நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தாலும், அது விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு சாதகமாகவே அமைந்தது என்று அதனை அன்று ஆதரித்த சிங்கள அரசியல் கட்சிகளில் பலவும், இலங்கை அரசு எந்திரமும் இப்போது கருதுகின்றன.

இலங்கையின் இருபெரும் கட்சிகளான ஜனாதிபதி சந்திரிகாவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைக்கு மாறிய ஐக்கிய தேசிய கட்சியும் நோர்வே நாட்டுப் பங்களிப்பில் ஒன்றுபட்டு நின்றாலும், அந்த இரு தலைவர்களின் போட்டி மனப்பான்மை, அந்த முயற்சிக்குப் பின்னடைவைக் கொடுத்தது. இவற்றை எல்லாம் அரசியல் போட்டா போட்டியாக மட்டுமே கருதியிருக்க வேண்டிய தமிழ் அரசியல் கட்சிகளும் விடுதலைப் புலிகள் இயக்கமும் அதனை எல்லாம் பேரினவாதத்தின் ஒரு பகுதியாகவே சித்திரித்து,அதனை சர்வதேச சமூகம் ஓரளவிற்காகவேனும் ஏற்றுக்கொள்ள வைப்பதில் வெற்றியும் பெற்றது.

ஜெனிவா வாக்கெடுப்பில் உலக நாடுகள் இலங்கையைத் தர்ம - நியாயங்களுக்கு அப்பாற்பட்டு அரசியல் ரீதியாக குறிவைக்கின்றன என்ற எண்ணம் சிங்கள அரசியல் கட்சிகள், மற்றும் இலங்கை அரசு இயந்திரம் ஆகியவற்றின் இடையே நிலவுகிறது. இதனையும் பேரினவாதத்தின் ஒரு பகுதியாக மட்டுமே காணப்படுவதும் பரப்பப்படுவதும் அவர்களது நியாயமான கவலைகளையும் கொச்சைப் படுத்துவதாகும். அதனால், அன்றாட அரசியலில் ஏதாவது ஆதாயங்கள் கிடைக்கலாம். ஆனால், இலங்கையின் ‘தேசிய பிரச்சினை’ என்று அனைத்து தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட இனப் பிரச்சினைக்கு அதனால் தீர்வு கிடைத்துவிடாது.

இந்தப் பின்னணியில், இலங்கை அரசு எந்திரமும் கூட்டமைப்புஅல்லாத, சிங்கள - தமிழ் கட்சிகளும் சர்வதேச சமூகத்தை சந்தேகக் கண்களுடனேயே பார்க்கும். கடந்த காலத்தை வைத்து பார்க்கும் போது, அந்த சந்தேகத்தை தீர்த்து வைத்து, புதிய ஒரு சர்வதேச பங்களிப்பை ஏற்றுக்கொள்வதற்கு முன் காலம் கடந்து விடும். இது தமிழர்களுக்கோ தமிழ் இனத்தின் பிரச்சினைகளுக்கோ நல்லதொரு முடிவை ஏற்படுத்தி விடாது. மாறாக இடைப்பட்ட காலத்தில் இப்போது இருக்கும் பிரச்சினைகளுக்கும் புதிய வடிவத்தையும் வடிவமைப்பையும் வழங்க மட்டுமே செய்யும்.

பிரேமச்சந்திரன் ஆகட்டும், அவர் சார்ந்த கூட்டமைப்பின் பிற தலைவர்கள் ஆகட்டும், முத்தரப்பு பேச்சுவார்த்தை என்று கூறும் போது, அதில் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளாக தங்களை மட்டுமே முன்னிலைப் படுத்தி பேசிவந்துள்ளார்கள். இது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சித்தாந்தத்தின் அடிப்படையிலேயே அமைந்துள்ளதாக கூட்டமைப்பின் எதிராளிகள் கூறி வருகின்றனர். அரசு எந்திரமோ, கூட்டமைப்பு, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மாற்றாக மட்டுமே கூட்டமைப்பு தன்னைக் கருதி செயல்பட விரும்புவதாக எண்ண இடம் இருக்கிறது.

கடந்த காலங்களில், ‘தமிழ் பேசும் மக்களின் ஏக பிரதிநிதியாக’ விடுதலைப்புலிகள் இயக்கம் தன்னை காட்டிக் கொண்டது. இது ‘இலங்கை தமிழ் மக்களிடையே’ பங்களிப்பு அல்லது மாற்றுத்தலைமை இல்லை என்ற எண்ணத்தை சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் ஏற்படுத்த துணை நின்றது. அதனால்,நோர்வே பேச்சுவார்த்தையில் தமிழ் மட்டுமே பேசும் முஸ்லிம் இனம்சார்ந்த அரசியல் கட்சிகளுக்குகூட இடம் இல்லை என்ற நிலையை உருவாக்கியது.



மற்றபடி பேச்சுவார்த்தை தடம் புரளாமல் பயணித்திருந்தால், முஸ்லிம் பிரச்சினை ஒன்றே பிற்காலத்தில் அந்த பேச்சுவார்த்தையை தடம் புரள வைத்திருக்கும்.

அது மட்டுமல்ல, எண்பதுகளில் இனப் பிரச்சினைக்கான தீர்வு வரைவில் இந்தியா கையெழுத்திட அவசியமே இருந்ததில்லை. மிதவாத அரசியல் கட்சிகளே இந்தியாவைக் கட்டாயப்படுத்தி கையெழுத்திடவைத்தன. தங்களுக்கு ஒப்பாக விடுதலைப் புலிகள் இயக்க தலைவர் பிரபாகரனும் இலங்கை அரசோடான ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதை அந்த தலைவர்களாலும் அவர்கள் சார்ந்த கட்சிகளாலும் ஏற்றுக்கொள்ள முடியாமையே அதற்கான காரணம். பின்னர், இருசாராருமே போட்டிபோட்டுக் கொண்டு இலங்கை அரசுடனான ஒப்பந்தம் குறித்து இந்தியாவை குறை கூறி, அதில் வெற்றியும் கண்டனர்.

இலங்கை தமிழ் மக்களின் ஏகோபித்த பிரதிநிதியாக கூட்டமைப்பை மட்டுமே இலங்கை அரசும் சர்வதேச சமூகமும் ஏற்றுக்கொண்டு செயல்பட வேண்டும் என்பதுபோன்ற மாயைக்கு தொடர்ந்து உயிரூட்டம் கொடுக்கும் முயற்சிகள், இனப்போர் முடிந்த காலம் தொட்டும் தொடர்ந்தே வந்துள்ளன. தேர்தல் முடிவுகள்தான் இதற்கான சட்டபூர்வமான அடிப்படை என்ற வகையில் வாதங்கள் அவ்வப்போது முன் வைக்கப்படுகின்றன. இனப் போருக்கு பிந்தைய காலகட்டத்தில் இந்த வாதம் சரியானால், ஒரு குறுக்கு வழியில், கூட்டமைப்பு அல்ல, கடந்த 2010 ஜனவரி மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அவர்களது ஆதரவைப் பெற்ற சரத் பொன்சேகாவே வடக்குப் பிராந்தியத்தில் வாழும் தமிழ் மக்களின் பிரதிநிதியாக முடியும்.

வடக்குப் பிராந்தியத்தில், மூன்று மாதங்களுக்குப் பின்னர் நடைபெற்ற நாடாளுமன்றத்தேர்தலில் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற மற்றும் தோல்வி அடைந்த வாக்காளர்கள் பெற்ற மொத்த வாக்குகளை விட பொன்சேகா கிட்டத்தட்ட இரண்டு பங்கு வாக்குகள் பெற்றதே இதற்குக்காரணம். ஏன்,அந்த நாடாளுமன்ற தேர்தல்களில் அமைச்சர்கள் டக்ளஸ் தேவானந்தா, ரிஷாத் பதியூதீன் போன்றோர் பெற்ற வாக்குகள், வடக்கு பிராந்தியத்தில் ஒரு குறிப்பிட்ட சாராரின் பிரதிநிதியாக அவர்களை எடுத்துக் காட்டியது என்றுகூட கூறலாம். ஏன், முஸ்லிம் வாக்காளர்கள் அதிகமில்லாத தொகுதியில், அமைச்சர் ரிஷாத் பெற்ற வாக்குகள் பல்வேறு கேள்விகளை எழுப்புகின்றன.

இந்தப் பின்னணியில், உள்நாட்டு அரசியல் சக்திகளின் பங்களிப்பை ஏற்றுக் கொள்ளாமல், சர்வதேச சமூகத்தின் பங்களிப்புடன் மட்டுமே முத்தரப்பு பேச்சுவார்த்தை தொடங்கப்படுமேயானால், அந்த முயற்சியும் இவ்வாறான தோல்வியில் முடிவதற்கான வாய்ப்புகளே அதிகம். பின்னர் அது குறித்து, இலங்கை அரசையும் சிங்களப்பேரினவாத மற்றும் மிதவாத அரசியல் கட்சிகளையும் தமிழ் அரசியல் தலைமை மீண்டும் குறை கூறும் தன்மையே தொடரும். பிற்காலத்தில் அவர்கள் சார்பில் இடைப்பட்ட சர்வதேச சமூகமும் அவர்களுடைய சாபங்களுக்கு தப்பாது. இது சரித்திரம் கூறும் உண்மை.

பேச்சுவார்த்தை என்று வரும் போது பழைய பல்லவி பாடுவதும், தங்களது சமூகம் பல்வேறு காலகட்டங்களில் வஞ்சிக்கப்பட்ட கதைகளை எல்லாம் கூறி பொருமுவதும் தமிழ் அரசியல் தலைமைக்கு பழக்க தோஷத்தால் ஓர் அரசியல் கட்டாயமாகவே மாறிவிட்டது. (18ஆம் பக்கம் பார்க்க)

# இன்று வீரர்களின் போர்

## மகாஜனாக் கல்லூரி அணியினர்



அமர்ந்திருப்போர் இடமிருந்துவலமாக
க.கபிலன் (உதவிபயிற்றுனர்) இ.சிறிதரன் (பயிற்றுனர்) சு.அஜித் (அணித்தலைவர்) த.வேல்சிவானந்தன் (அதிபர்) ர.மதுசன் (உதவிஅணித்தலைவர்) க.மயில்வாகனம் (விளையாட்டுதுறைமுதல்வர்)
முதல்வரிசையில் நிற்போர் இடமிருந்துவலமாக
த.நிமல்ராஜ் கி.திலக்சன் த.கஜேந்திரன் ஜெ.பிரணவன் அ.பிரசாந் ச.ரமேஸ்குமார் த.சாரங்கன்
இரண்டாம் வரிசையில் நிற்போர் இடமிருந்துவலமாக
ஜெ.பிரதீபன் சி.டிலக்ஷ்சன் ஜெ.ஜனந்தன் ம.துவாரகன் க.பிரராஜ் த.சுபதீபன் த.டிலோசன்

## ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணியினர்



அமர்ந்திருப்போர் விபரம்:
திரு.தி.கோவ்சிகன் (பயிற்றுனர்), திருமதி.சா.நாகராசா (உபஅதிபர்), திரு.த.சிவகுமார் (விளையாட்டுத்துறைமுதல்வர்), செல்வன்.சி.சஞ்சயன் (அணித்தலைவர்), கலாநிதி. ஆறு. திருமுருகன் (அதிபர்), செல்வன். தே.சிந்துஜன் (உபஅணித்தலைவர்), திரு.த.தவராஜா (பிரதி அதிபர்), திரு.க.கஜேந்திரன் (அணிப் பொறுப்பாசிரியர்)
நிற்பவர் இடமிருந்துவலமாக:
க.கதியோன், ப.சுஜிதரன், ல.குமுதன், கே.றெபேட்றிசாந், கே.சஜந்தன், கே.பிரசாத், சி.கோபிநாத், த.நிறோஜன், க.துவிசன், ச.செந்தூரன், க.துவாரகன், க.நிலக்சன், கெ.பிரதீப்சங்கர்.

## எதிர்பார்ப்பை பூர்த்திசெய்வோம்



(யாழ்ப்பாணம்)

துடுப்பாட்டம், பந்து வீச்சு என அனைத்திலும் எமது அணி வீரர்கள் சிறந்து விளங்குகின்றனர். இதன் மூலம் மகாஜனாக் கல்லூரி அணிக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்துவோம் என ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணித் தலைவர் சி. சஞ்சயன் தெரிவித்தார்.

ஸ்கந்தவரோதயா மற்றும் மகாஜனாக் கல்லூரி அணிகளுக்கிடையிலான 12ஆவது வீரர்களின் போர் இனிங்ஸ் போட்டி குறித்து எமது செய்தியாளருக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த முறை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் இப்போட்டி இடம் பெறவிருப்பது எமக்கு சற்று நெருக்கடிதான். இருப்பினும் எமது அணியில் சிறப்பான வீரர்கள் பலர் உள்ளனர். அத்துடன் அணித் தெரிவும் வலுவானதாக அமைந்திருக்கின்றது.

இவற்றைக் கொண்டு மகாஜனாக் கல்லூரி அணிக்கு நெருக்கடிகளை ஏற்படுத்துவோம். போட்டிக் களத்தில் ஏற்படும் சவால்களை சிறப்பான முறையில் எதிர்கொண்டு அதனை முறியடிப்போம்.

கடந்த ஆண்டு இடம்பெற்ற போட்டியில் அடைந்த தோல்வி ஏமாற்றமே. இருப்பினும் இந்த முறை வலுவான நெருக்கடியை எதிரணிக்கு ஏற்படுத்தும் அதேவேளை, எங்கள் மீதிருக்கும் எதிர்பார்ப்பையும் பூர்த்தி செய்வோம் என்ற நம்பிக்கையும் எமக்குண்டு எனவும் அவர் தெரிவித்தார்.(93)

## வெற்றி பெறுவதற்கு ஒருங்கிணைந்த முயற்சி

(யாழ்ப்பாணம்)



இந்த வருடம் இதுவரை இடம் பெற்ற பல போட்டிகளில் சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்தியிருப்ப தால் வீரர்களின் போர் என வர்ணிக்கப்படுகின்ற இந்த இரண்டு நாள் இனிங்ஸ் போட்டியில் எமது அணி வெற்றி வாகை சூட ஒருங்கிணைந்து ஓர் அணியாகப் போராடுவோம் என்று மகாஜனாக் கல்லூரி அணியின் தலைவர் க. அஜித் தெரிவித்தார்.

ஸ்கந்தவரோதயா மற்றும் மகாஜனாக் கல்லூரி அணிகளுக்கிடையிலான 12ஆவது வீரர்களின் போர் இனிங்ஸ் போட்டி குறித்து எமது செய்தியாளருக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், எமது அணியின் பயிற்றுவிப்பாளர் எமக்கு சிறந்த பயிற்சிகளையும், நுட்பங்களையும் கற்றுத் தந்திருக்கின்றார். இதனை இந்த வருடம் இடம்பெற்ற பல பாடசாலை மட்டப் போட்டிகளில் வெளிப்படுத்தி அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றிருக்கின்றோம்.

அத்துடன் இம்முறை எமது பாடசாலையில் இப்போட்டி நடைபெறவுள்ளமையால் பல அனுகூலமான விடயங்கள் எமக்கு உண்டு. துடுப்பாட்டத்தில் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்துவதுடன் பந்து வீச்சிலும் சிறப்பான உபாயங்களைக் கையாண்டு எதிரணிக்கு அதிக நெருக்கடி கொடுப்போம். அதன் மூலம் இப்போட்டி வெற்றிவாகைசூட இறுதி வரை ஒருங்கிணைந்து ஓர் அணியாகப் போராடுவோம் எனவும் அவர் தெரிவித்தார். (93)

(யாழ்ப்பாணம்)

மகாஜனாக் கல்லூரி அணிக்கும், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணிக்குமிடையில் இடம் பெறும் வீரர்களின் போர் என வர்ணிக்கப்படுகின்ற இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி இன்றைய தினம் மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

12ஆவது ஆண்டாக இடம் பெறவுள்ள இப்போட்டித் தொடரில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி மூன்று வெற்றிகளையும், மகாஜனாக் கல்லூரி அணி இரண்டு வெற்றிகளையும் பதிவாக்கியுள்ளன. அத்துடன் ஆறு போட்டிகள வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்துள்ளது.

கடந்த ஆண்டில் வெற்றியீட்டியதுபோன்று இந்த ஆண்டும் வெற்றியீட்டும் முனைப்புடன் மகாஜனாக் கல்லூரியும், கடந்த ஆண்டில் அடைந்த தோல்வியை ஈடு செய்து அதிக வெற்றிகளைப் பதிவாக்கிய அணி என்ற சிறப்பைத் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்ளும் முனைப்புடன் களமிறங்கும் என இரு அணி ஆதரவாளர்களால் எதிர்பார்க்கப்படுகின்றது.

எனவே, இப்போட்டி பரபரப்புக்கு பஞ்சமில்லாத அதே வேளை, உள்ளூர் கிரிக்கெட் ரசிகர்களுக்கு பெரும் விருந்தாக இப்போட்டி அமையும் என்று நம்பலாம்.

## இளவாலை மெய்கண்டான் கரப்பந்தாட்டத்தில் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலய 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய அணி சம்பியனானது.

இப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் இளவாலை மெய்கண்டான் ம.வி. அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பமாகி முடிவுமவரை மிக அற்புதமாக ஆடிய இளவாலை மெய்கண்டான் ம.வி. போட்டியில் முழு ஆதிக்கம் செலுத்தியது.

இறுதியில் 25-15, 25-21 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று வலய மட்ட சம்பியனானது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் சங்கானை சிவப்பிரகாசம் ம.வி. அணியும், மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் மோதின.

இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 25-22, 25-19 என்ற நேர் செட் கணக்கில் வென்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.(93)

## அளவெட்டி அருணாசலம் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலய 15 வயதுப் பிரிவு பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் அளவெட்டி அருணாசலம் ம.வி. சம்பியனானது.

இப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இந்த இறுதி ஆட்டத்தில் அளவெட்டி அருணாசலம் ம.வி அணியை எதிர்த்து வசாவிளான் மத்திய மகா வித்தியாலய அணி மோதியது.

வலிகாம வலயத்தில் கரப்பந்தாட்டப் போட்டிகளில் தனக்கென ஒரு தனியிடத்தை தக்க வைத்துக்கொண்டிருக்கும் அளவெட்டி அருணாசலம் ம.வி. அணி அந்த நிலையை இந்த ஆட்டத்திலும் வெளிப்பத்தியது.

ஒருங்கிணைந்த, நேர்த்தியான ஆட்டத் திறனை வெளிப்படுத்திய அருணாசலம் ம.வி. முதல் செட்டை மிக இல்குவாக 25-07 என கைப்பற்றியது.

தொடர்ந்தும் அதே பாணியில் ஆடிய அருணாசலம் ம.வி. இரண்டாவது செட்டையும் 25-18 என்ற செட் கணக்கில் வென்று வலய மட்ட சம்பியனானது.

இதன் மூலம் தொடர்ந்து மூன்றாவது தடவையாகவும் வலய மட்டத்தில் சம்பியன் பட்டம் வென்ற சிறப்பை அளவெட்டி அருணாசலம் ம.வி பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அணியும், பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அணியும் மோதின.

இதில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வென்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. (93)

## மாகாண அரை மரதன்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணப் பாடசாலை மாணவர்களிற்கிடையிலான அரை மரதன் போட்டி நாளை மறுதினம் வவுனியா - ஈரப் பெரியகுளம் சிங்கள மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு கல்வி வலயங்களிலிருந்தும் பத்து வீரர்கள் இப் போட்டியில் பங்குபற்ற அழைக்கப்பட்டுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் அவர்களுக்கான தங்குமிட வசதிகளும் ஒழுங்கு செய்துகொடுக்கப்படும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (06)



## நடுவரிசை சரிவே தோல்விக்குக் காரணம்

(சென்னை)

ஆரம்ப வீரர்கள் சிறப்பாக ஆடியபோதிலும் நடுவரிசையில் ஏற்பட்ட சரிவே தோல்விக்குக் காரணம் என சென்னை சூப்பர் கிங்ஸ் அணித் தலைவர் டோனி தெரிவித்தார். நாங்கள் வழக்கமாக விளையாடும் சென்னை ஆடுகளம் இது இல்லை. எங்களது துடுப்பாட்டம் தொடக்கத்தில் நன்றாகவே இருந்தது. கடைசி சில ஓவர்கள் சிறப்பாக அமைய வில்லை. எனவே தொடக்கமே சரியில்லை என்று தான் சொல்ல முடியும்.

இந்த ஆடுகளத்தில் எவ்வளவு ஓட்டங்கள் சேஸ் செய்ய இயலும் என்று கணிப்பது கடினமே. 150 முதல் 160 ஓட்டங்கள் ஒரு நல்ல ஓட்ட எண்ணிக்கை என்று சொல்லலாம். ஆனால் இந்த ஆடுகளத்தில் 140 – 145 ஓட்டங்கள் மிகவும் கடினமானதாக இருக்கலாம் என்று நினைக்கிறேன். மும்பை அணியில் லெவியின் ஆட்டம் அபாரமாக இருந்தது எனத் தெரிவித்தார்.

5ஆவது ஐ.பி.எல். ருவென்ரி – 20 ஓவர் கிரிக்கெட் போட்டி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் முதல் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் 8 விக்கெட் வித்தியாசத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியைத் தோற்கடித்தது. முதலில் விளையாடிய சென்னை சூப்பர் கிங்ஸ் 19.5 ஓவரில் 112 ஓட்டங்களுக்குள் சுருண்டது. பதிலுக்கு 113 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆடிய மும்பை இந்தியன்ஸ் 16.5 ஓவரில் 2 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

## ஆதவன் முன்பள்ளி விளையாட்டு விழா நாளை

கிளிநொச்சியில் பிரபலமான ஆதவன் முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழா நாளை பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.கிளிநொச்சி கனகபுரத்தில் அமைந்துள்ள முன்பள்ளியின் விளையாட்டு மைதானத்தில் மிகவும் சிறப்புற இடம்பெறும்இவ்விளையாட்டு விழாவுக்கு ஆசிரியரும் முன்பள்ளியின் நிர்வாகியுமான சி. மகேந்திரன் தலைமை தாங்குகின்றார். கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு என இரு பிரிவுகளைக் கொண்ட இந்த முன்பள்ளியில் மேற்பிரிவைச் சேர்ந்த இருநூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் இரு இல்லங்களாகப் பிரிக்கப்பட்டு விளையாட்டுக்களில் கலந்து கொள்கின்றனர். மேலும் சிறார்களின் சிறப்பு மகிழ்வூட்டும் நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ள அதேவேளை, வண்ணமயமான பல விளையாட்டுக்களும் இடம்பெறவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## குண்டு வெடிப்பில் பலி

சோமாலியாவில் நடத்தப்பட்ட குண்டுவெடிப்பில் ஒலிம்பிக் கமிட்டியின் தலைவர் மற்றும், ஃபுட்பால் பெடரேஷனின் தலைவர் ஆகியோர் கொல்லப்பட்டனர். அவர்களுக்கு அருகே நின்றிருந்த சுமார் 10 பேரும் இந்தக் குண்டு வெடிப்பில் பலி யானார்கள். தலைநகர் மொகாதிசுவில் புதிதாக திறக்கப்பட்ட நேக்ஷனல் தியேட்டர் கலையரங்கத்தில், இசை நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்திலேயே இக்குண்டுவெடித்தது.

சோமாலியாவில் தங்கியுள்ள ஆபிரிக்க யூனி யன் அமைதிப்படை அதிகாரிகள், இளம் பெண் ஒருவர் மனித வெடிகுண்டாக வந்து வெடித்துச் சிதறினார் என்று கூறியுள்ளனர்.



## மகாராஷ்டிர அரசும் பரிந்துரை

(மகாராஷ்டிரா)

கிரிக்கெட்டில் தொடர்ந்து பல சாதனைகளை நிகழ்த்திய சச்சினுக்கு பாரத ரத்னா விருது வழங்க வேண்டும் என மகாராஷ்டிர அரசு, மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

இது தொடர்பாக சட்டசபையில் நேற்று முன் தினம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சமீபத்தில் சர்வதேசப் போட்டிகளில் 100 சதங்களைக் கடந்த ஒரே வீரர் என்ற பெருமை பெற்ற சச்சின் பல்வேறு தொழிற்துறையினருக்கும், இந்தியர்களுக்கும் முன்னோடியாக உள்ளார் என மகாராஷ்டிர அரசு கூறியுள்ளது.

மகாராஷ்டிர அரசின் பரிந்துரையையடுத்து, பிரதமர் மன்மோகன் சிங் குடியரசு தலைவருக்கு பரிந்துரை செய்வார். அதற்குப் பிறகு குடியரசுத் தலைவர் முடிவெடுப்பார். மேலும், முன்னாள் முதல்வர் யஷ்வந்தராவுக்கும் பாரத ரத்னா வழங்க வேண்டும் என்று மகாராஷ்டிர அரசு பரிந்துரை செய்துள்ளது.




## மெஸ்சி சாதனை

(கேடலோனியா)

மெஸ்சியின் அசத்தல் சாதனைக் கோல் கைகொடுக்க, சம்பியன்ஸ் லீக் அரையிறுதிக்கு பார்சிலோனா அணி முன்னேறியது.

சம்பியன்ஸ் லீக் க்கால்பந்துத் தொடரின், காலிறுதி இரண்டாவது லீக் போட்டியில் பார்சிலோனா, ஏ.சி.மிலன் அணிகள் மோதின. போட்டியின் தொடக்கத்தில் இருந்தே மிலன் அணியினர் முரட்டு ஆட்டம் ஆடினர். இதனால், 11ஆவது நிமிடத்தில், பார்சிலோனா அணிக்கு கிடைத்த "பெனால்டி" வாய்ப்பில், மெஸ்சி முதல் கோல் அடித்தார். 32ஆவது நிமிடம் இதற்கு மிலன் அணியின் நாசரினோ பதிலடி கொடுத்தார். முதல் பாதி முடிய சற்று முன் (41ஆவது) மெஸ்சி, "பெனால்டி" மூலம் மற்றொரு கோல் அடித்தார். 53ஆவது நிமிடம் இனியஸ்டா, தன்பங்கிற்கு ஒரு கோல் அடிக்க, பார்சிலோனா அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, அரையிறுதிக்கு முன்னேறியது.

இப்போட்டியில் 2 கோல் அடித்த மெஸ்சி, சம்பியன்ஸ் லீக் தொடரில் குறைந்த (24) வயதில், அரைச்சத (51) கோல், ஒரே சீசனில் அதிக கோல் (14) அடித்த வீரர் என்ற சாதனையைப் படைத்தார். இதற்கு முன் லா லிகா வீரர் ரூடு வான் நிஸ்டல்ரூய் (நெதர்லாந்து) ஒரு தொடரில் 12 கோல் அடித்து இருந்தார். இந்தச் சாதனை மகிழ்ச்சி அளிக்கின்றது என போட்டியின் பின் மெஸ்சி தெரிவித்தார்.

## கிரிக்கெட்டி வரப்பிரசாதம் டோனி

(சென்னை)

2011ஆம் ஆண்டு உலகக் கோப்பை போட்டியின் வெற்றிக் கொண்டாட்டம் என வாழ்நாளில் மறக்க இயலாது. மும்பை தெருக்களில் மக்கள் விடிய விடிய வெற்றியைக் கொண்டாடினார்கள். இதற்கு முன்பு நான் இப்படி பார்த்தது இல்லை. இந்திய கிரிக்கெட்டின் வரப்பிரசாதம் டோனி ஆவார். கவாஸ்கர், டெண்டுல்கர் ஆகியோரது ஆட்டம் என்னை மெய்சிலிர்க்க வைத்தது. இருவருமே எனக்கு மிகவும் நெருக்கமானவர்கள் என அமிதாப்பச்சன் தெரிவித்தார்.

## முதலாவது டெஸ்ட் நாளை ஆரம்பம்

(பிரிஜ்ரெளண்)

அவுஸ்ரேலிய, மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி நாளை பிரிஜ்ரெளணில் ஆரம்பமாகவுள்ளது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த டெஸ்ட் தொடரில் சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்தித் தொடரைக் கைப்பற்றுவோம் என அவுஸ்ரேலிய அணித்தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவித்தார்.

இரு அணிகளுக்குமிடையில் நடைபெற்ற ருவென்ரி 20, ஒரு நாள் போட்டித் தொடர் சமநிலை யில் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஏனைய தொடர்களைச் சமநிலைப்படுத்தியமையால் டெஸ்ட் தொடரை வெற்றி கொள்வதற்கு முழுமையாக முயற்சியை ஒருங்கிணைந்து மேற்கொள்வோம் என மேற்கிந்தியத்தீவுகள் அணியின் தலைவர் டரன் சமி தெரிவித்திருந்தமை சுட்டிக் காட்டத்தக்கது..

## ருவென்ரி-20 கப்டனாக மலிக் ஆதரவு தெரிவிக்கும் வட்மோர்

(லாகூர்)

பாகிஸ்தான் அணியின் ருவென்ரி 20 அணியின் தலைவராக சகலதுறை வீரர் சொய்ப் மலிக்கை நியமிக்க பாகிஸ்தான் அணியின் புதிய பயிற்றுவிப்பாளர் டேவ் வட்மோர் தனது முழுமையான எண்ணத்தையும், ஆதரவையும் வெளிப்படுத்தியுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அத்தோடு மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளில் சொய்ப் மலிக் மீண்டும் பாகிஸ்தான் அணி சார்பாக போட்டிகளில் பங்குபற்றவும் வட்மோர் தனது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளார்.

வெளியாகியுள்ள தகவல்களின் அடிப்படையில் இலங்கைக்கு பாகிஸ்தான் அணி கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்வதற்கு முன்னர் பாகிஸ்தான் அணியின் ருவென்ரி20 அணித் தலைமையில் மாற்றம் ஏற்படும் எனவும், அணித்தலைவராக மாறுவதற்கு அதிக வாய்ப்புக்கள் உள்ள வீரராக சொய்ப் மலிக் காணப்படுகிறார். அவுஸ்ரேலிய அணிக்கெதிரான தொடர் இலங்கையில் நடாத்தப்பட பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதுடன், ஓரளவுக்கு அது நிச்சயமாகியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

அண்மையில் இடம்பெற்று முடிந்த பாகிஸ்தானின் உள்ளூர் ருவென்ரி – 20 தொடரில் சொய்ப்மலிக் தலைமை தாங்கிய சியல்கொட் அணி சம்பியன் பட்டம் வென்றதுடன், அத்தொடர் முழுவதும் சொய்ப் மலிக் சிறப்பாக பிரகாசித்திருந்தார்.

தற்போதைய அணித்தலைவரான மிஸ்பா உல்ஹக் தொடர்ச்சியாக சிறப்பாக அணியை வழி நடத்தி போட்டிகளை வென்று கொடுத்து வருகின்றபோதிலும்,அவரது வயது, அவரது அணித் தலைமைப் பாணி சில ரசிகர்களையும், சில விமர்சகர்களையும் ஈர்த்திருக்கவில்லை. அதன் காரணமாக மிஸ்பாஉல்ஹக்கை டெஸ்ட் போட்டிகளுக்கு மாத்திரம் அணித் தலைவராக நியமிக்குமாறு சில கோரிக்கைகள் எழுந்திருந்தன. மற்றுமொரு புறத்தில் மிஸ்பா இற்கு ஏராளமான ஆதரவும் காணப்படுகிறது.



## முன்னிலையில் இங்கிலாந்து

(கொழும்பு)

இலங்கை அணிக்கெதிரான கொழும்பு டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 185 ஓட்டங்களினால் முன்னிலை வகிக்கின்றது.

இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி கொழும்பில் நடைபெற்று வருகின்றது.

இதில் 1ஆவது இனிங்ஸிற்காக ஆடிய இங்கிலாந்து அணி பீற்றர்சனின் சிறப்பான சதத்துடன் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் இங்கிலாந்து அதன் முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 460 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பீற்றர்சன் 165 பந்துகளை எதிர்கொண்டு ஆறு சிக்ஸர்கள், 16 பவுண்டரிகள் அடங்கலாக 151 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் குக் 94, ஸ்ரோஸ் 61, ட்ரொட் 66 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரங்கன ஹேரத் 133 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட்டுக்களையும், டில்சான் இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

185 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய இலங்கை அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்த வேளை, விக்கெட் இழப்பின்றி நான்கு ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இன்று போட்டியின் நான்காம்நாளாகும்.

இலங்கை அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 275 ஓட்டங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# இந்தியா - இலங்கை உறவுகளுக்கு அடியிலிருந்து வெடிக்கும் அச்சுறுத்தல்கள்

ஜெனிவாவில் இந்தியா வாக்களித்ததன் பின்னர், தமிழ் நாட்டிலுள்ள போட்டித் திராவிடக் கட்சிகளான தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. என்பன முக்கியமான இலங்கைத் தமிழர் பிரச்சினை தங்கள் அதிகார விளையாட்டில் இடம் பிடித்துள்ளது என்பதை உணர்ந்து கொண்டார்கள்.

ஏற்கனவே இலங்கைக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டுகளை விசாரிக்க



ஒரு சர்வதேச விசாரணை தேவை என்பதை வலியுறுத்த இலங்கை மீது வர்த்தகத் தடைகளை விதிக்க வேண்டும் என்று வலியுறுத்தும் தமிழ்நாட்டு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் கசப்பான தாக்கங்கள் காரணமாக, இந்தியாவின் வாக்கு இந்தப் போராட்டத்தின் வடிவத்துக்குள் அடங்குகிறது என்பதை வெளிப்படுத்துகிறது.

மேலும், வயது முதிர்ந்த தலைவரான மு.கருணாநிதியின் கீழ் இழுபட்டுச் செல்லும் தி.மு.க. மிகவும் இலகுவான தெரிவாக, ஜெயலலிதாவின் கோரிக்கைகளுக்கு மேலாக உரத்த குரலில் அதன் திராவிட நம்பிக்கைகளின் இரத்த சம்பந்தத்தை நிரூபிப்பதற்காக "போராட்டம்" என்று அறைகூவல் விடுத்தது.

இரும்புப் பெண்மணியினை எதிர்கொள்வது பயனற்ற நகர்வு என்பதை புரிந்து கொண்ட கலைஞர், சுதந்திரத் தமிழீழத்தைக் காண்பதே தனது வாழ்வின் பேரவா எனப் புலம்பித் தள்ளினார். அநேகமாக இவையாவும் பலவீனமான சாதுர்யம் மிக்க பதில்களாக நினைத்தாலும் கூட, தி.மு.க - அ.தி.மு.க போட்டியின் மோசமான வெளிப்பாடுகளையே அது சுட்டிக்காட்டுகிறது.

செல்வீ ஜெயலலிதாவின் கோரிக்கைகளில் சிலவற்றுக்கும் மனித உரிமை அங்கங்களினதும் மற்றும் புலம்பெயர் தமிழ் பரப்புரையாளர்கள் மற்றும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் போன்றவர்களின் கோரிக்கைகளுக்கும் இடையில் சில ஒற்றுமைகள் இருந்தன. மற்றும் இந்த அமைப்புகள், தமிழ்நாட்டின் ஆதரவினை திரட்டிக்கொண்டு, இந்தியாவில் கிடைக்கக்கூடிய எந்த அரசியல் வாய்ப்பையும் தவறவிடாமல் பயன்படுத்திக் கொண்டு, அவர்களின் நியாயத்தை வலியுறுத்துவதோடு, தமிழ் புலம்பெயர் போட்டிக் குழுக்கள் மத்தியில் தலைமைக்கான உள்ளகப் போராட்டத்தில் தங்களது நம்பிக்கைகளை வலுப்படுத்தியும் வருகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள உதிரிக் கட்சிகளின் ஆதரவு, இந்த சர்வதேச சக்திகளுக்கு உள்ளன. இவை வரும் ஜுலை 27இல் லண்டன் ஒலிம்பிக் விளையாட்டு நிகழ்வில், இலங்கைக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்தியாவுக்கும் இதர சர்வதேச சமூகத்துக்கும் அழைப்பு விடுக்கும் நடவடிக்கையில் இறங்கும் சாத்தியம் உள்ளது. இது தி.மு.க - அ.தி.மு.க ஆகிய இரண்டையும் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையில் தங்கள் போட்டி மனப்பாங்கான ஆர்வத்தை நிந்தையான வார்த்தைப் போராட்டத்தில் முடுக்கி விடக்கூடும்.

பிரபாகரன் உயிரோடு இருந்த போது செல்வி ஜெயலலிதா, எல்.ரீ.ரீ.ஈயின் பரம வைரியாக இருந்தார். இலங்கைப் போர்க் குற்றங்களை துருப்புச்சீட்டாகப் பாவித்து தமிழ்நாட்டு தேர்தல்களில் கவர்ச்சிகரமான வெற்றியைப் பெற்றபின்னர், அவர் ஈழப் பரப்புரையாளர்களின் பிரியத்துக்குரியவராக மாறியிருக்கிறார். எனவே 2014 நாடாளுமன்றத் தேர்தல்களில் அதி உயர்ந்த பட்ச வெற்றியினை அறுவடை செய்யும் வரைக்கும், வருகின்ற இரண்டு வருடங்களும் இலங்கைத் தமிழர் பிரச்சினை முழு வேகத்தில் அவரால் முடுக்கி விடப்படும்.

தேசிய கதாபாத்திரத்தை இலக்கு வைத்து வெளிவிவகாரக் கொள்கை உட்பட்ட தேசியப் பிரச்சினைகளில் அவர் அதிக ஆர்வம் காட்டி வருகிறார். தேசிய அரசியல் அரங்கில் அவரது காட்சித்தன்மை அதிகரித்து வருகிறது. எனவே இலங்கையைக் குறித்த இந்தியாவின் நகர்வுகள் யாவும் தொடர்ந்து அவரது முக்கியமான கண்காணிப்பின் கீழ் இருக்கும்.

இலங்கை விடயத்தில் இந்திய அரசாங்கத்துக்கு உள்ள தெரிவுகள் மிகச் சில மட்டுமே. ஏனெனில் ஜெனிவாவில் இந்தியா செய்த துரோகத்தை மறக்க அல்லது மன்னிக்க இலங்கைக்கு சிறிது காலம் எடுக்கும். ஆனால் அதிர்ஷ்டவசமாக இருநாட்டு மக்களும், இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இருநாடுகளும் வெற்றி - வெற்றி உறவைக் காப்பாற்றுவதற்காக அத்தகைய உறவின் சேதங்களை மிஞ்சும் வகையில் போராட வேண்டும் என நம்புகிறார்கள். இதைக் கருத்தில் கொண்டு இருநாட்டுத் தலைவர்களும் கையில் ஒரு தெளிவான பணியினை வைத்திருக்க வேண்டும்.

இலங்கைக்கு ஒருவேளை இது மிகவும் எளிதான ஒரு பணியாக இருக்கும். ஏனெனில் அதன் இராணுவம் தமிழ் பிரிவினைவாதத்தை முளையிலேயே கிள்ளி எறியக்கூடியதாக சகலதையும் முழுக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது.

எனினும், அது போதுமானதல்ல. இலங்கை தேசிய நல்லிணக்கப் பிரச்சினைக்கு விரைவான தீர்வை காணும்வரை மற்றும் அதன் மனித உரிமைகள் சம்பந்தமான பதிவுகளின் நிலைகளில் முன்னேற்றம் ஏற்படுத்தும் வரை, அது தொடர்ந்து தமிழ் பிரிவினைவாதம் முளைவிட்டு தழைத்தோங்கி வளர்வதற்கான இடைவெளியை ஏற்படுத்திக் கொண்டேயிருக்கும்.



அது இதற்கான நேர்மையான ஒரு பணியினை நிறைவேற்றுமானால், புலம் பெயர் தமிழர்களிடையே உள்ள எதிர்ப்பாளர்களினால் தண்டனை எதுவும் வழங்க முடியாததால் அவர்கள மேற்கொள்ளும் பிரசாரத்தையிட்டு கவலைப்படத் தேவையில்லை.

உடனடியாக இந்தியா, ஈழப் பிரிவினைவாதிகள் ஆதரவு தேடுவதற்காக அல்லது ஆயுதப்பயிற்சி பெறுவதற்காக தமிழ் நாட்டில் தஞ்சம் புகுகிறார்களா என்பதைப் பற்றிய அறிக்கையில் தீவிர அவதானிப்பை மேற்கொள்ள வேண்டும். பிரிவினைவாதம் புத்துயிர் பெறுவதை தடைசெய்யும் நடவடிக்கைகளை அது இறுக்கமாக மேற்கொள்ள வேண்டும். சந்தேகத்துக்கிடமான சக்திகளை களையெடுக்கும் நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்.

இந்த முயற்சியில் வெற்றி பெறுவதற்கு புதுடில்லிக்கு செல்வி ஜெயலலிதாவின் ஆதரவு மிகவும் அவசியம். எனவே இந்த விடயம் வெறும் வெளிநாட்டுக் கொள்கைக்கான ஒரு சவால், அல்லது உள்துறை அமைச்சர் சம்பந்தப்பட்ட (அவரும் தமிழ் நாட்டவர்தான்) ஒரு பிரச்சினை என்று கருதாமல் கூட்டு முயற்சியாக கையாளப்பட வேண்டும்.

சுருக்கமாகச் சொல்வதானால் இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரண்டும் அவர்களின் உறவுகளுக்கு அடியில் இருந்து எழும் அச்சுறுத்தல்களை உடனடியாக கவனிக்க வேண்டும். ஜெனிவா மோதலில் ஏற்பட்ட காயம் மோசமடைவதற்கு முன்னர் அவற்றின் நடவடிக்கைகளை பழுதுபார்த்து புதுப்பிக்க வேண்டும்.

- கேணல் ஹரிஹரன் கட்டுரையிலிருந்து.

## பறக்கும் கார் சந்தைக்கு வருகிறது!

பறக்கும் கார் இன்னும் ஓர் ஆண்டுக்குள் சந்தைக்கு விடப்படும் என அதனை உற்பத்தி செய்த அமெரிக்காவின் டெர்ரபுகியா நிறுவனம் அறிவித்துள்ளது. இந்தப் பறக்கும் கார் வெள்ளோட்டமாக 8 நிமிடங்கள் வானில் பறக்க விடப்பட்டது வெற்றியளித்துள்ளது. இதனைத் தொடர்ந்தே இந்தக் காரை ஒரு வருடத்திற்குள் சந்தைக்கு விட முடியும் என மேற்படி நிறுவனம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

தரையிலும் ஓடும் இந்தக் கார் வேண்டும் போது திடீரென மேலெழுந்து பறக்கவும் செய்யும். இந்தக் காரை வாங்க ஏற்கனவே 100 க்கும் மேற்பட்டோர் 10,000 டொலரை முற்பணமாக செலுத்தியுள்ளனர். சாதாரண காரொன்றின் அளவு கொண்ட இந்த வாகனத்தில் பறக்கும் போது விரிவுபடும் வகையில் சிறகுகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் இரண்டு ஆசனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.



இந்தப் பறக்கும் கார் வீதியில் மணிக்கு 70 மைல் வேகத்திலும் வானில் 115 மைல் வேகத்திலும் பயணிக்கக் கூடியதாக அமைக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த வாகனத்தை ஓட்டுவதற்கு வாகன அனுமதிப்பத்திரம் மற்றும் விமான ஓட்டிக்கான அனுமதிப் பத்திரங்களைப் பெற்றிருத்தல் வேண்டும்.

- கங்காருவும் கைகளால் சண்டை போடும்
- பானையும் குறட்டை விட்டுத் தூங்கும்
- கொரில்லாவிற்கு 32 பற்கள் உண்டு
- பெங்குயின் பறவை நடந்து செல்லும்
- குரங்கு பேன் பார்க்கும்
- துவாரீன் பறவை மல்லாந்து தூங்கும்
- துக்குபெர்ரா பறவை சிரிக்கும்
- உகாரி குரங்கு கைகளைக் கட்டிக் கொண்டு நடக்கும்
- சிங்கம் குடும்பமாய் சேர்ந்து வாழும்



## மனிதர்களைப் போல

# சினிமா சினிமா

☯ "தி ஆர்ட்டிஸ்ட்" படத்துக்காக சிறந்த நடிகர் விருது பெற்ற ழான் டுஜார்டினுக்கு ஒஸ்கார் விருதை வழங்கியவர் ஹொலிவுட்டின் பிரபல நடிகை நடாலியா போர்ட்மன். அந்த விருது வழங்கும் விழாவின்போது நடாலியா அணிந்திருந்த சிவப்பு நிற அங்கி போன்று தோற்றமளித்த உடை அரங்கிலிருந்தவர்களையும் தொலைக்காட்சி மூலம் நிகழ்ச்சியைப் பார்த்த பலரையும் கவர்ந்தது. அந்த உடையை லண்டனைச் சேர்ந்த ரசிகர் ஒருவர் 50 ஆயிரம் டொலருக்கு (ரூபா 60 இலட்சம்) ஏலத்தில் எடுத்துள்ளார்.







☯ அஜித்தின் "பில்லா 2" படத்தின் ஓடியோ தயாராகிவிட்டது. இருந்தாலும் பாடல் சி.டி.யை ரஜினிதான் வெளியிட வேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கிறார் அஜித். இதற்காக ரஜினியிடமும் பேசியிருக்கிறார். "கோச்சடையான்" படத்துக்காக லண்டன் சென்றுள்ள ரஜினி சென்னை திரும்பியவுடன் பாடல் வெளியீட்டு விழா விமரிசையாக நடக்கும் என்கிறது படக்குழு.




☯ தொடர்ந்து மூன்று வெற்றிப்படங்களைத் தந்த மகிழ்ச்சியில் இருக்கும் விஜயின் அடுத்த படம் துப்பாக்கி. இந்தப் படத்தை ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கி வருகிறார். விஜய் மற்றும் ஏ.ஆர்.முருகதாஸ் கூட்டணி இணைந்திருக்கும் முதல் படம் என்பதால் இந்த படத்துக்கு எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. இந்தப் படத்தில் விஜய் கேட்டுக்கொண்டதன்படி சிறிய வேடத்தில் நடித்துமுள்ளார் இயக்குனர் முருகதாஸ்.






☯ சுரேஷ்கிருஷ்ணா இயக்கத்தில் ரஜினி, நக்மா, ரகுவரன் நடித்து 1995ஆம் ஆண்டு வெளியான "பாட்ஷா" படம், தமிழிலும் தெலுங்கிலும் பெரும் வெற்றி பெற்றது. தற்போது இந்தப் படம் "டிஜிட்டல் கலர் டெவலப்பிங்" முறை மூலம் நவீனமயமாக்கப்பட்டு ஹிந்தியில் வெளியாகிறது. இந்தப் படத்துக்காக டைட்டில் இசையை பிரத்தியேகமாக அமைத்துக் கொடுத்துள்ளார் இசையமைப்பாளர் தேவா.

# பொருளாதார வளர்ச்சி மட்டும் அபிவிருத்தியாகுமா?

- க.வேல்தஞ்சன் -

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் (Economic growth) தனியார் துறை (private sector) இயந்திரமாகவும் (Engine) அரசதுறை (State sector) அதன் சாரதியாகவும் (Driver) நவீன பொருளியலாளர்களால் விபரிக்கப்படுகிறது. இது சாத்தியமா?

மரபுவழி வந்த மாக்சிசவாதிகளால் வளர்ச்சி என்பது உற்பத்தி முறைமையில் (Modes of production) ஏற்படும் மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கப்படுகின்றது. தொழிநுட்ப வளர்ச்சியின் காரணமாக ஏற்படும் சமூக உறவுகள், உற்பத்தி, பரிமாற்றம் ஆகியவற்றின் கட்டமைப்பு ரீதியான மாற்றங்களை மாக்சிய பொருளியல் பார்வையுள்ளோர் வலியுறுத்துவர். மானிட வரலாற்றில் பூர்வீக பொருளாதார முறைமை வளர்ச்சியடைந்து ஒரு கட்டத்தில் முதலாளிய பொருளாதார முறைமையாகி, சோஷலிஸ பொருளாதாரத்தினைத் தழுவி இறுதியில் கொம்யூனிஸ் பொருளதாரமாக முழுமையடையும் என்பதே அவர்களது வாதம். இது நீண்ட காலமெடுக்கத்தக்க வரலாற்றியல் பார்வை.

எனினும் வோல்ற்றர் றொஸ்றொவ், மாக்ஸிய கோட்பாட்டை எதிர்த்தார். "The Stages of Growth –A Non Communist Manifesto" எனும் வெளியீட்டில் நாடுகள் அனைத்துக்கும் பொதுவான அபிவிருத்திக் கட்டங்கள் உள்ளன என வாதிட்டார். அவர் ஐந்து கட்டங்களை வெளியிட்டார். முதலில் மரபுவழி சமூகங்கள், இரண்டாவதாக மாறுநிலைக்கட்டம், மூன்றாவதாக அபிவிருத்திப் பாதையில் புறப்படுதல், நான்காவதாக அபிவிருத்தியில் முதிர்ச்சி நிலை, ஐந்தாவதாக உயர்ந்தளவிலான நுகர்வுக்கட்டம் என்கிறார் றொஸ்றொவ் (Rostow).

இவரைப் பின்பற்றிய பொருளியலாளர்கள், இவரை விமர்சித்த - மீண்டும் மாக்சிய கண்ணோட்டத்துடன் பொருளாதார வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் ஆராய்ந்த ஏனைய பொருளியலாளர்கள் என அனைவரும் அபிவிருத்தி பற்றிய பல்வேறு கோட்பாடுகளை உருவாக்கினர். நவீனமயமாக்கமும், நவீனமயமாகுதலுமே அபிவிருத்தி என்றும் வாதாட முற்பட்டனர் சிலர்.

பொருளாதார வளர்ச்சியின் பொருள் சார் நன்மைகள் அடிமட்ட மக்களிடமும் முழுமையாகச் சென்றடைந்து அவர்களின் தேவைகளும், நலன்களும் பூர்த்தி செய்யப்படுதலே பொருளாதார அபிவிருத்தி எனப்படும் என்பதை அனைத்துக் கோட்பாடுக்களுக்காகவும் "பாடுபடும்" பொருளியலர்ளர்களும் முழுமையாக ஏற்றுக்கொள்கின்றனர்.

இக்கட்டத்தில் தெளிவாக எமக்கு விளங்கும் விடயம் பொருளாதார வளர்ச்சி ஒரு நாட்டிலோ அதன் ஒரு பிரதேசத்திலோ ஏற்படுத்தப்பட்டாலும் அது அபிவிருத்தியாகப் பரிணமிக்க வேண்டுமெனில் அங்கு வாழும் அடிமட்ட மக்கள் மத்தியில் பொருட்களும் சேவைகளும் உரியமுறையில் நேர்மையாகவும் சரியாகவும் பங்கிடப்பட வேண்டும் என்பதாகும். அதாவது



அபிவிருத்திக்கு பொருளாதார வளர்ச்சி ஏற்படுதல் அவசியமானதுதான். ஆனால் அது மட்டும் போதுமானதல்ல - வளர்ச்சியின் நன்மைகள் அடிமட்ட மக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். பொருளாதார வளர்ச்சியின் 99% ஐயும் 1% ஆன "மேலோங்கிகள்" அனுபவிக்க, மிகுதி 1 வீதத்தை மட்டுமே ஏனைய 99 வீதமான ஏழைமக்கள் அனுபவிக்கும் நிலை அபிவிருத்தியாகி விடாது. இது பணக்காரர்களாக்கி விடுவதுடன் ஏழைகளை மேலும் பரம ஏழைகளாக்கி வறியவர்களாக்கி விடும்..

இந்த இடத்திலேதான் தனியார் துறையை இயந்திரமாகவும் அரசதுறையை சாரதியாகவும் உருவகப்படுத்துவதில் உள்ள பலவீனம் புரியத் தொடங்கும். அரசதுறையும் தனியார் துறையும் கோட்பாட்டளவில் வெவ்வேறாக வரையறுக்கப்பட்டாலும் ஒரு ஜனநாயக தாராண்மைவாத பொருளாதார முறைமைகொண்ட நாட்டில் அல்லது கலப்புப் பொருளாதார முறைமைகொண்ட நாட்டில் நடைமுறை அவ்வாறு இல்லை.

அரசியல் வாதிகளும் உயர் அரச அதிகாரிகளும் பாரியளவில் நேரடியாகவும் மறைமுகமாகவும் தனியார் துறை முதலீடுகளைக் கொண்டிருக்கிறார்கள். அபிவிருத்தியடைந்த அமெரிக்க ஐக்கிய நாடு தொடக்கம் மாலைதீவு போன்ற சிறிய ஏழை நாடுகள் வரை இதுவே நடைமுறையாக உள்ளது.

இவ்வாறான நிலையில் சாரதியே இயந்திரமாகிவிடுவதும் அல்லது தத்தமது "சுயநல இயந்திரங்களை" சம்பந்தப்பட்ட சாரதிகள் புதுப்பித்து மேம்படுத்தி, ஏழைக் குடித்தொகைக்குள் வேகமாக ஓட்டுவதும் நிகழ்ந்தேறுகிறது. குடிமக்கள் காயப்படவோ சேதப்படவோ அழியவோ இது வழிகோலும்.

அதனால்தான் அரசதுறை, தனியார் துறை மட்டுமல்ல சிவில் சமூகமும் முழுமையாகப் பங்குபற்றும் வகையில் (தற்காலத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களும்-N.G.O) ஜனநாயகத்தோடு நல்லாட்சி வலியுறுத்தப்படுகிறது. பொறுப்புக்கூறுதலும் வகை கூறுதலும் (Responsibility and Accountability) வெளிப்படைத்தன்மையும் (Transparency) நல்லாட்சியில் இன்றியமையாதனவாகின்றன.

பொருளாதார வளர்ச்சியென்பது வறுமை ஒழிப்பு (அல்லது தணிப்பு), உட்கட்டுமானங்களும் சேவைகளும், சுகாதாரம், தொழிநுட்பமும் முகாமைத்துவமும், கல்வி, பண்பாடு, சிவில் மற்றும் அரசியல் உரிமைகள், சமூகங்களுக்கிடையில் ஒற்றுமையும் சமாதானமும், சூழல் பாதுகாப்பு, பெண்கள் மற்றும் சிறுவர்கள் உரிமைகள் ஆகியவற்றினையும் உள்ளடக்கியதாக, மேம்பாடடையச் செய்வதாக அமையும்போது அபிவிருத்தி சாத்தியமாகிறது.

## இரண்டு கால் பசு!



காந்தி ஒரு சமயம் மக்கன்லால் என்பவர் வீட்டில் தங்கியிருந்தார். அப்போது காந்திக்கு தெரிந்த குடும்பத்தைச் சேர்ந்த ஒரு இளைஞனுக்குப் பெண் கொடுக்க விரும்பினார் ஒருவர். முதலில் அந்தப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதாக ஒப்புக்கொண்ட இளைஞன், திடீர் என்று மறுத்துவிட்டான்.

விவகாரம் காந்தியிடம் வந்தது.

காந்தி அந்தப்பையனை அழைத்து விசாரித்தார். சரியாக மூன்று நாட்கள் காந்தி அப்பையனிடம் பல வகைகளில் பேசி, கடைசியில் திருமணத்திற்கு சம்மதம் பெற்றார். அப்பையன் வெளியே சென்றதும் காந்தியடிகள் பெண் வீட்டாரைப் பார்த்து, "இந்தப் பையனைத் திருமணத்திற்கு ஒப்புக் கொள்ள வைக்க மூன்று நாட்கள் ஆகிவிட்டன. நாளை இவன் உங்கள் பெண்ணோடு ஒழுங்காகக் குடித்தனம் நடத்தவில்லை என்றால் மீண்டும் ஒரு மூன்று நாளோ மூன்று மாதமோ அவனிடம் பேச வேண்டிய நிலை ஏற்படலாம். குழப்பம் மிகுந்த இப்பையனுக்கு உங்கள் பெண்ணைத் தர இனிமேலும் நீங்கள் விரும்புகிறீர்களா?" என்று கேட்டார்.

பெண் வீட்டாரும் காந்தி சொல்வதும் நியாயம்தான், என்று வேறு மாப்பிள்ளை பார்ப்பதாகக் கூறிவிட்டனர்.

## கூகுளில் வெள்ளைமாளிகை!



அமெரிக்க ஜனாதிபதியின் வாசஸ்தலமான வெள்ளை மாளிகையை, இணையத்தளத்தின் மூலம் எளிதாக பார்க்க ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி உள்ளது கூகுள்.

வெள்ளை மாளிகை என்பது தலைவர்களுக்கு மட்டும் அல்ல, பொதுவான மக்களுக்கும் சேர்த்துதான் என்று மிஷேல் ஒபாமா வீடியோ மூலம் தெரிவித்து இருக்கிறார்.

360 டிகிரி ஸ்ட்ரீட் வியூ கமெரா தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்தி கூகுள் இந்த வசதியினை ஏற்படுத்தி உள்ளது. மிகத் தத்ரூபமாக, நிஜமாகவே பயணித்துப் பார்ப்பதைப் போல உணர முடிகிறது.

இந்த முகவரியில்: http://www.googleartproject.com/collection/the-white-house/museumview/

# சர்வதேசம் ஏற்கும் பட்டங்களை தேசிய கல்வி நிறுவனம் வழங்கும்

## கல்வி அமைச்சர் பந்துல தெரிவிப்பு



(கொழும்பு)

1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க நாடாளுமன்ற சட்டத்தின் கீழ் 1986 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட தேசிய கல்வி நிறுவகம் சட்ட ரீதியான முறையில் பட்டங்களையும் பட்டப்பின் படிப்புப் பட்டங்களையும் வழங்கக்கூடிய அதிகாரம் கொண்ட நூறு வீத அரசாங்க உரிமையுடைய அரசாங்க கல்வி நிறுவனமாகும். எதிர்காலத்தில் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளக்கூடிய பட்டங்களை வழங்க கூடிய கல்வி நிறுவனமாக தேசிய கல்வி நிறுவனம் அமையுமென கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் பந்துல அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது,

ஐந்து வருடங்களின் பின்னரே தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டமளிப்பு விழா நடைபெறுகிறது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனையின்படி கல்வி அமைச்சர் என்ற ரீதியில் எனக்குள்ள அதிகாரத்தின் கீழ் பேராசிரியர் அபேரத்ன பண்டாரவின் தலைமையில் பேராசிரியர்கள், பீடாதிபதிகள், முன்னாள் பீடாதிபதிகள், பல்வேறு துறைகளைச் சார்ந்த நிபுணர்கள் ஆகியோரை கொண்ட குழுவொன்றை அமைத்தேன். அதன் பிரதிபலன்களில் ஒன்றாகவே இந்த பட்டமளிப்பு விழா கடந்த வருடங்களின் பின்னர் நடைபெறுகிறது. இனிமேல் ஒவ்வொரு வருடமும் பட்டமளிப்பு விழா நடைபெறும் .

மீப்பேயில் உள்ள தேசிய கல்வி நிறுவகத்தின் தலைமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிலையத்தை சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையமாக அமைப்பதற்கு எமது வலயத்தில் உள்ள நாடுகளிடம் உதவிகள் கேட்கப்பட்டன. இதற்காக 47 நாடுகள் எமக்கு வாக்களித்து ஆதரவு வழங்கியுள்ளன.

எமது எதிர்காலம் இருண்டதாக இல்லை. தேசிய கல்வி நிறுவகம் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிறுவகமாக அமைவதற்கு ஆசிய அபிவிருத்தி எமக்கு உதவவுள்ளது. இன்று எமது நாட்டில் உள்ள 20 இலட்சம் பேர் வரை கடல் கடந்து வெளிநாட்டுக்குச் செனறு தொழில் புரிகின்றனர். எமது கல்வித்திட்டம் நாட்டின் தேசிய நோக்கத்தையும் தேசிய தேவைகளையும் பூர்த்தி செய்வதாக அமைய வேண்டும் என்றார்.

# பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு 6300 கோடி ரூபா நிலுவை



(கொழும்பு)

அரச மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த 21 நிறுவனங்களிடமிருந்து பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 6300 கோடி ரூபாவை இன்னும் வசூலிக்க வேண்டியுள்ளதாக பெற்றோலியத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

சிறிலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் மாத்திரம் 1200 கோடி ரூபாவைச் செலுத்த வேண்டியிருப்பதாக அமைச்சர் கூறினார்.

இலங்கை மின்சார சபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, ரயில்வே திணைக்களம், இலங்கை போக்குவரத்துச் சபை, இலங்கை இராணுவம், கடற்படை, பொலிஸ் திணைக்களங்களிடமிருந்து பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குரிய பணம் கிடைக்க வேண்டியுள்ளதாக அவர் கூறினார்.

கடந்த டிசெம்பர் 31 ஆம் திகதி 9 தனியார் மின்சாரஉற்பத்தி நிறுவனங்களிடமிருந்து பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குரிய பணம் நிலுவையில் இருந்ததாகவும் பெரும்பாலான நிறுவனங்கள் இவ்வருடம் பெப்ரவரி 29 ஆம் திகதியே கொடுப்பனவுகளைச் செலுத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

# 13 பேர் காயம்

ஏ-9 வீதியின் ஓமந்தை பரண்நட்டகல் பகுதியில் மூன்று வாகனங்கள் ஒன்றோடொன்று மோதி விபத்துக்குள்ளானதில் 13 பேர் காயமடைந்துள்ளனர்.

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த வான் ஒன்றும், வவுனியா நோக்கிப் பயணித்த லொறியும், வான் ஒன்றும் நேற்று முன்தினம் பிற்பகல் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

காயமடைந்தவர்களில் மூன்று வாகனங்களினது சாரதிகளும் அடங்குவதோடு இவர்கள் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# பேருந்துக் கட்டணங்களை இடை நிறுத்துமாறு மனு



அமுலிலுள்ள பேருந்துக் கட்டணங்களை இடைநிறுத்துமாறு கோரி மக்கள் விடுதலை முன்னணி உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு வொன்றை தாக்கல் செயதுள்ளது.

பேருந்துக் கட்டணங்கள் தொடர்பில் அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய கொள்கைக்கு முரணாக இம்முறை பேருந்துக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளதாக, நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்னெத்தி மற்றும் முன்னாள் நகரசபை உறுப்பினர்கள் சுமித் பத்மபெரும ஆகியோர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

தேசிய கொள்கையின் பிரகாரம் 15.8 வீதத்திற்கு மேற்படாத பேருந்துக் கட்டணத் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், இறுதியில் 20 வீத பேருந்துக் கட்டண அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐந்து மாதங்களுக்கு இந்தக் கட்டண அதிகரிப்பு அமுல்படுத்தப்படுமாயின், சுமார் 920 மில்லியன் ரூபாவை மக்கள் மேலதிக கட்டணமாக செலுத்த நேரிடும் என்றும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன் காரணமாக நடைமுறையில் உள்ள பேருந்துக் கடடணங்களை இடைநிறுத்துவதற்கான இடைக்கால உத்தரவொன்றை பிறப்பித்து, மீண்டும் பேருந்துக் கட்டணத் திருத்தத்தை மேற்கொள்ளுமாறு மனுதாரர்கள் தமது மனுவில் தெரிவித்துள்ளனர்.

# உயர்கல்வியின் தரத்தை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை

## மருத்துவபீட மாணவர்கள் குற்றச்சாட்டு



(கொழும்பு)

உயர்தரக் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுப்பதில்லை எனவும் மாறாக உயர்கல்வி முறைமையை தனியார்மயப்படுத்த முயன்று வருவதாகவும் மருத்துவபீட மாணவர்கள் குழு குற்றஞ்சுமத்தியுள்ளது.

கொழும்பு-கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்னால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மருத்துவமாணவர்கள் பங்கு பற்றிய ஆர்ப்பாட்டமொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது அரசாங்கத்தின் பல்வேறு தோல்விகள், மாலபேயில் தனியார் மருத்துவக் கல்லூரி ஒன்றை அமைத்தமையால் உயர்கல்வி முறைமைக்கு விளைந்துள்ள கேடு என்பவற்றை விளக்கும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிககப்பட்டன.

மாலபே மருத்துவக் கல்லூரியில் ஒவ்வொரு வருடமும் மாணவர்கள் சேர்க்கப்பட்டு வருகின்றனர். அவர்களின் பெற்றோர்கள் இதுவரை அங்கீகரிக்கப்படாத மருத்துவப் பட்டத்திற்காக பல மில்லியன் ரூபாய்களை செலவழித்து வருவதாக ஆர்ப்பாட்டம் தொடர்பாக ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கு நட்டஈடு வழஙக வேண்டுமென நாம் அரசாங்கத்திடம் வலியுறுத்துகின்றோம்.

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியை சட்டபூர்வமாக அங்கீகரிப்பது ஆரம்பத்திலிருந்தே பெரும் பிரச்சினையாக இருந்து வருகின்றது.

தற்போதுள்ள மருத்துவ பீடங்களை அபிவிருத்தி செய்து அங்கு வெளிவாரி மாணவர்களை இணைத்து அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் காணப்படும் மருத்துவ பீடங்களை முன்னேற்ற முடியும் என்றார்.

சுகாதார அமைச்சினால் கடந்த செப்ரெம்பரில் மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியால் வழங்கப்படவுள்ள எம்.பி.பி.எஸ். பட்டத்தின் சட்டவலு, தரம் என்பன குறித்து ஆராயவென நியமிக்கப்பட்ட குழு தனது அறிக்கையை அண்மையில் கையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கண்ணிவெடி அபாயம் நீங்க நீண்ட காலம் செல்லும்



(கொழும்பு)

இலங்கையில் நிலக் கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ள போதிலும், கண்ணிவெடி அபாயம் முழுமையாக நீங்குவதற்கு நீண்டகாலம் செல்லுமென பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் தேசிய மிதிவெடிச் செயற்பாட்டு நிலையப் பணிப்பாளர் மொன்டி ரனதுங்க தெரிவித்துள்ளார்.

மிதிவெடிகள் பற்றிய விழிப்புணர்வுக்கான சர்வதேச தினத்தை யொட்டி வவுனியாவில் நடைபெற்ற வைபவத்தில் அவர் இத் தகவலை வெளியிட்டார்.

2020 ஆம் ஆண்டில் இலங்கையை கண்ணிவெடி அபாயமற்ற நாடாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருந்த பகுதிகளில் 90 வீதமான இடங்கள் துப்புரவு செய்யப்பட்டு, இடம்பெயர்ந்திருந்த 3 இலட்சம் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டிருக்கின்றனர்.

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் 1.5 மில்லியன் வெடி பொருட்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று கடந்த 2002 ஆம் ஆண்டு மதிப்பிடப்பட்டிருந்தது.

எனினும் புலிகளினால் எத்தனை மிதிவெடிகள், கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டன என்பது பற்றிய விபரங்கள் தெரியாத காரணத்தினால், இந்தப் பிரதேசங்களில் உள்ள வெடிபொருட்களின் சரியான எண்ணிக்கையை அறிய முடியாதிருக்கின்றது. இதனால் கண்ணிவெடி அகற்றும் பணி கடினமாகியிருக்கின்றது.

கடந்த 2010 ஆம் ஆண்டு மிதிவெடிகளினால் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவில் குறைந்திருக்கின்றது.

கண்ணிவெடிகள், மிதிவெடிகளினால் ஏற்படும் அபாயம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக மிதிவெடி அபாயக் கல்வித் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது என்றார்.

# விடைத்தாள் மதிப்பீட்டு ஊதியம் கிடைக்கவில்லை

(கொழும்பு)

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்த ஆசிரியர்களுக்கான ஊதியங்களை அரசாங்கம் வழங்கத் தவறியமைக்கு இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இப்பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்பட்ட பின்னரும் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளைப் பரீட்சைகள் திணைக்களம் வழங்கவில்லை என அச்சங்கத்தின் பொதுச் செயலாளர் மகிந்த ஜயசிங்க கூறினார்.

பரீட்சைகள் திணைக்களத்திற்கான சுமார் 300 மில்லியன் ரூபாவை திறைசேரி வழங்கவில்லை என நாம் அறிந்துள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார்.

பரீட்சை நடைபெற்ற காலத்திலும், விடைத்தாள்களை மதிப்பீடு செய்த காலத்திலும் ஆசிரியர்களும் அதிபர்களும் உணவு, போக்குவரத்து மற்றும் ஏனைய செலவுகளுக்கு தமது சொந்தப் பணத்தைச் செலவிட வேண்டியிருந்தது.

அதிக செலவினங்களுக்காக அறியப்பட்ட இந்த அரசாங்கம் இவர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்கத் தவறியமை குறித்து வெட்கப்பட வேண்டும் எனவும் அவர் கூறினார்.

2500 ரூபாவுக்குள் எவரும் இறக்காமல் வாழக்கை நடத்த முடியும் என்பதைப் போனற கருத்துக்களைக் கூறாமல் சிங்கள, தமிழ்ப் புத்தாண்டுக்கு முன்னர் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்க வேண்டும் எனவும் அச்சங்கம் கோரியுள்ளது.

33.


1. EYEE
2. EYE
3. EYYE

34.



1. FIVE
2. FIEV
3. FIWE

**பின்வரும் சொற்றொடரினை வாசித்து அதற்குப் பொருத்தமான சொல்லைக் கொண்டு இடைவெளியை நிரப்புக.**

35. எமது நாட்டில் இன்றைய ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்தில் வெளியிடப்பட்ட புதிய தாள் காசு ரூபா ..................... ஆகும்.

36. 'கோயில்' என்பதைக் குறிக்கும் வேறு ஒரு சொல்........................................ ஆகும்.

37. 'பூனை' என்பதன் பன்மை........................................ ஆகும்.

38. அவன் புத்தகத்தைத் தூக்கினான் என்பதில் பயனிலை........................................ ஆகும்.

**உணவுப் பொருட்களின் பெயர்கள் A பகுதியிலும் அவை பழுதடையாமல் பாதுகாக்கும் முறைகள் B பகுதியிலும் உள்ளன. அவற்றில் சரியானவற்றை அம்புக்குறி மூலம் தொடர்புபடுத்துக.**

| பகுதி A (உணவுப் பொருள்) | பகுதி B (பாதுகாக்கும் முறை) |
|---|---|
| 39. மீன்கள் | 1. உப்பு, புளியில் ஊறவிட்டு ஊறுகாய் ஆக்கல் |
| 40. தேசிக்காய் | 2. வெய்யில் காயவைத்து கருவாடு ஆக்கல் |
| 41. மாம்பழம் | 3. வெய்யில் காயவைத்து புழுக்கொடியல் ஆக்கல் |
| 42. பனங்கிழங்கு | 4. காய்ச்சி போத்தலில் அடைத்து பழப்பாகு ஆக்கல |

**கீழ்வரும் வினாக்களில் இருசொற்கள் ஒத்தகருத்துடையவை. அவ்விரு சொற்களின் கீழ் கீறிடுக.**

43. ஆசி, வேண்டுகோள், கோரிக்கை, வெகுமதி
44. புஷ்பம், புனல், காசினி, அகிலம்
45. பழைமை, வேழம், சன்மானம், தொன்மை

## கடந்த புதன்கிழமை வெளியான வெளியீடு - 49 கேள்விகளின் விடைகள்

01) 1) மாம்பழக் குருவி, பாம்பு
2) மலரப்போகும் ஒரு மொட்டைப் போன்று
3) மரத்தின் மேல் / மரக்கிளையில் / மாம்பழக் குருவியின் அருகில்
4) 1. மேலே 2. துரதிர்ஷ்டம்
5) 1. அரும்பு 2. வர்ணம்
6) 1. கிளைகள் 2. தலைகள்
7) 1. Tree 2. Black colour 3. Snake 4. Flower

2) 1) 1 2) 1 3) 3 4) 3
5) 3 6) 2 7) 2 8) 3
9) 3 10) 2

3) 1) சுற்றாடல் 2) கணிதம்
3) 4 4) 22 5) 64
6) கணிதம், ஆங்கிலம், சிங்களம், தமிழ், சுற்றாடல் 7) 4

04) 1) ஆசிரியர் பொன் பெறவில்லை
ஆசிரியர் பொருள் பெறவில்லை
2) நாதன் கோழி முட்டையை விற்றான்
நாதன் பணம் பெற்றான்
3) தம்பி பாடசாலைக்குப் போனான்
நான் பாடசாலைக்குப் போனேன்
4) வீட்டின் ஜன்னல்கள் உடைந்திருந்தன
வீட்டின் கதவுகள் உடைந்திருந்தன
5) எல்லோரும் வரிசையாக வாருங்கள்
எல்லோரும் ஆசனத்தில் அமருங்கள்

05) 1) 3 2) 25 3) 2006 4) புதன் 5) 5 நிமிடம்

06) 1) கிராமம் 2) காடு 3) கற்கள்
4) புகைவண்டி 5) கூடு 6) தச்சன்
7) பள்ளிவாசல் 8) வானவில் 9) வலைப்பந்து
10) கரண்டி

07) 1. கதிரை
2) அப்பா
3) பாய்
4) பாற்சோறு
5) வெள்ளை நிறம்
6) சிவப்பு நிறம்

08) 1) 2
2) 2
3) 1
4) 3
5) 2



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

பகுதி - I
1 மணி

# கல்வி முரசு

வெளியீடு 50



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

**கீழ்வரும் பாடலைப் படித்து அதன் கீழ் வரும் வினாக்களுக்கு விடைதருக.**

"வெள்ளத்தால் போகாது, வெந்தணலால் வேகாது,
கொள்ளத்தான் முடியாது, கொடுத்தாலும் குறைபடாது,
கள்ளர்க்கோ மிக அரிது, காவலோ மிக எளிது - கல்வி என்னும்
உள்ளத்தே பொருளிருக்க, உலகெல்லாம் பொருள் தேடி உழல்வதேனோ?

01. இப்பாடலுக்குப் பொருத்தமான தலைப்பு
1. கல்வியின் சிறப்பு 2. செல்வத்தின் சிறப்பு 3. வீரத்தின் சிறப்பு

02. "கள்ளர்க்கோ மிக அரிது" என்பதன் பொருள்
1. களவெடுக்க முடியாது 2. கள்ளரிடம் இருக்காது 3. களவெடுப்பது சுலபம்

03. இப்பாடலுக்குப் பொருத்தமாக பின்வரும் எக்குறளைக் கூறலாம்?
1. "அரம்போல கூர்மையரேனும் மரம் போல்வர் மக்கட் பண்பில்லாதவர்"
2. "ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவர்க்கு எழுமையும் ஏமாப்புடைத்து"
3. "தோன்றிப் புகழோடு தோன்றுக, அன்றில் தோன்றாமை நன்று"

04. "கொடுத்தாலும் நிறைவொழியக் குறைபடாதது" என்பதன் பொருள்
1. கொடுக்க கொடுக்க செல்வம் குறையாது
2. கல்வியை யாருக்கு கற்றுவித்தாலும், கற்பவனின் கல்வி ஒருபோதும் குறையாது
3. கல்வியை கற்பிப்பதால் கல்வியறிவு குறையும்

05. "உள்ளதே பொருளிருக்க" என்னும் கூற்றில் பொருளாக கருதப்படுவது எது?
..............................................................................................................

**பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்தில் உள்ள சொற்களுக்குப் பொருத்தமான பதத்தைக் கொண்ட கூற்றைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

06. ஆடுகள் மலைப் பகுதியை நோக்கிப் போகின்றன.
1. குன்று, நிகழ்காலம் 2. மேடு, எதிர்ப்பு
3. மண், சிரமம் 4. குன்று, இறப்பு

07. ஒரு சிங்கம் படுத்திருப்பது போல இந்த மலை தெரிகிறதே.
1. கரி, குன்று, நிகழ்வு 2. அரி, குன்று, இன்று
3. அரி, மலை, எதிர் 4. அரி, குன்று, நிகழ்வு

**பின்வரும் தரவுகளை அவதானித்து கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக. கோயில் திருவிழா ஒன்றில் பலூன்வியாபாரி 5 நாட்கள் விற்பனை செய்த பலூன்களின் விபரம் வருமாறு-**

| பலூன்கள் | 1 ஆம் நாள் | 2 ஆம் நாள் | 3 ஆம் நாள் | 4 ஆம் நாள் | 5 ஆம் நாள் |
|---|---|---|---|---|---|
| பச்சை | 15 | 18 | 21 | 24 | 27 |
| சிவப்பு | 20 | 25 | 30 | 35 | 40 |
| மஞ்சள் | 17 | 21 | 25 | 29 | 33 |
| நீலம் | 36 | 31 | 26 | 21 | 16 |
| ஊதா | 02 | 00 | 07 | 06 | 04 |

08. மூன்றாம் நாள் கூடுதலாக விற்பனை செய்யப்பட்ட பலூனின் நிறம் யாது?

.................................................................................................

09. சிவப்பு பலூன் விற்பனை நாளுக்கு நாள் எத்தனையால் அதிகரித்துச் செல்கின்றது?

.................................................................................................

10. விற்பனையில் முதலில் ஆகக்கூடுதலாக விற்பனை செய்யப்பட்டு பின்பு நாளுக்கு நாள் குறைந்து செல்லக் காணப்படும் பலூன் யாது?

.................................................................................................

11. பலூன்களில் அதிகமாக விற்பனை செய்யப்பட்ட நாள் எது?

.................................................................................................

**அருகில் தரப்பட்ட உருவில் நிழற்றப்பட்ட துண்டுகளின் அளவினைக் காட்டும் பங்கினை பின்னத்தில் காட்டும் சரியான விடையின் கீழ் கீறிடுக.**

12. (1) 3/8 (2) 6/8 (3) 2/8 (4) 3/4



**கீழ்வரும் வினாக்களுக்கு முதலில் தரப்பட்டுள்ள சொற்களின் தொடர்பை அவதானித்து மூன்றாவது சொல்லிற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிந்து கீறிடுக.**

13. நிமிடம் : நேரம், கிராம் : (கிலோ, அளவு, நிறை)

14. 8:7, புதன் : (வியாழன், செவ்வாய், வெள்ளி)

15. DOG : GOD, TAE : (TEA, TAE, ETA)

16. TON : NOT NET: (TEN, ENT, TNE)

**(17 - 21) வரையான வினாக்களுக்கு விடை எழுத கீழ்வரும் தொடர்பை அவதானிக்குக.**




ரூபா 9.50 ரூபா 8.00 ரூபா 16.50 ரூபா 20.00

17. ஒரு எலுமிச்சம் பழத்தின் விலை என்ன?

.................................................................................................

18. ஒரு தக்காளிப் பழத்தின் விலை என்ன?

.................................................................................................

19. ரூபா 50.00 கொடுத்து 3 அன்னாசிப் பழங்கள் வாங்கும் ஒருவருக்குக் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு?

.................................................................................................

20. எலுமிச்சம் பழம், அன்னாசிப் பழம், தக்காளிப் பழம் ஆகியவற்றில் ஒவ்வொன்று வாங்கும் ஒருவர் செலுத்த வேண்டிய பணம் எவ்வளவு?

.................................................................................................

21. இரண்டு எலுமிச்சம் பழங்களும் 10 கிராம் முந்திரிகைப் பழங்களும் வாங்கும் ஒருவர் செலுத்த வேண்டிய பணம் எவ்வளவு?

.................................................................................................



**சரியான விடையின் கீழ் கீறிடுக.**

22. இன்றிலிருந்து நான்கு நாளையின் பின் வருவது புதன்கிழமை. இன்று என்ன கிழமை

1. செவ்வாய் 2. வெள்ளி 3. ஞாயிறு 4. சனி

23. எனது வயது 12. என்னைவிட மூன்று வயது மூத்தவன் அண்ணா. மூன்று வருடங்களின் பின்னால் அண்ணாவின் வயது என்ன?

1. 20 2. 18 3. 17 4. 21

24. ஒரு பையில் 50 கிலோகிராம் மரக்கறி இருந்தது. இதில் பூசணிக்காய் தவிர்ந்த ஏனைய மரக்கறிகளின் நிறை 27 கிலோகிராம் 250 கிராம் ஆகும். பூசணியின் மொத்த நிறை எவ்வளவு?

1. 23 kg 750 g 2. 22 kg 250 g 3. 22 kg 750 g 4. 23 kg 250 g

25. கடல் நீரில் இருந்து கிடைப்பது

1. மீன் 2. முத்து 3. உப்பு 4. சிப்பி

26. காலை 7 மணியளவில் ஒருவர் தனது நிழலை நோக்கியவாறு நடந்து சென்றார். இவர் நடக்கும் திசை

1. வடக்கு 2. கிழக்கு 3. தெற்கு 4. மேற்கு

**பாடசாலை ஒன்றில் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியில் 120 பக்கங்களைக் கொண்ட புத்தகங்களை வாசித்து முடிக்க 5 மாணவிகளுக்கு எடுத்த காலம் வருமாறு-**

| | | |
|---|---|---|
| கமலா | - | 1 மணி 30 நிமிடங்கள் |
| தேவிகா | - | 1 மணி 20 நிமிடங்கள் |
| விமலா | - | 1 மணி 3/4 மணித்தியாலங்கள் |
| ராதிகா | - | 1 மணி 1/4 மணித்தியாலங்கள் |
| சுமணலதா | - | 60 நிமிடங்கள் |

27. குறைந்த நேரத்தில் புத்தகத்தைப் படித்து முடித்த மாணவி யார்?

.................................................................................................

28. புத்தகத்தைப் படித்து முடிக்கக் கூடிய காலம் எடுத்த மாணவி யார்?

.................................................................................................

29. போட்டியில் வேகமாகப் படித்ததில் இரண்டாவது இடத்தைப் பெற்றது யார்?

.................................................................................................

30. புத்தகத்தைப் படித்து முடிப்பதற்குக் குறைந்த நேரத்திலிருந்து கூடிய நேரம் வரை எடுத்த மாணவிகளின் பெயர்களை ஒழுங்குபடுத்தி எழுதுக.

.................................................................................................

**கீழ்வரும் ஒவ்வொரு படத்திலும் காட்டப்பட்டவைகளுக்குரிய ஆங்கிலப் பெயரைத் தரப்பட்ட விடைகளில் சரியான விடையின் கீழ் கீறிடுக.**

31. 

1. TELEPHONE
2. TALEPHONE
3. TELEPONE

32 

1. ELEPHANT
2. ELEPANT
3.ELEEPHANT

# மோட்டார் வாகன விபத்து; வாய்க்காலுக்குள் சாரதி!



(கிருசானந்)

யாழ். நல்லூர் பழம் வீதிச் சந்தியில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் முச்சக்கர வண்டியுடன், பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில், கழிவு வாய்க்காலுக்குள் தூக்கி வீசப்பட்ட மோட்டார் சைக்கிளின் சாரதி சிறுகாயங்களுடன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ். நல்லூர் வீதியால் வந்துகொண்டிருந்த முச்சக்கரவண்டி பழம்வீதியால் திரும்ப முற்பட்டபோது, அதே வீதியால் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் முச்சக்கரவண்டியை முந்திக கொண்டு செல்ல முற்பட்டபோது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

முச்சக்கரவண்டியின் சிக்னல் சரியாக செயற்படாமையினாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (சி)

# பரவைக்குளம் சிவனுக்கு இன்று மகா கும்பாபிஷேகம்

(பகீ, கிரிசானந்)



யாழ்ப்பாணம்- திருநெல்வேலி ஶ்ரீ நீலாயதாட்சி அம்பிகா சமேத ஶ்ரீ காயாரோகண சுவாமி கோயில் என அழைக்கப்படும் பரவைக்குளம் சிவன் ஆலய மகாகும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.27 மணி தொடக்கம் 10.27வரையுள்ள சுப வேளையில் நடைபெறவுள்ளது.

மகா கும்பாபிஷேகத்தினைத் தொடர்ந்து ஆலயத்தின் மண்டலாபிஷேகம் கால் மண்டலப் பூசைகளாக 15 நாட்கள் நடைபெற்று எதிர்வரும் 21ஆம் திகதி நிறைவடையவுள்ளது.

மகா கும்பாபிஷேக தினமான இன்று வெள்ளிக்கிழமை விநாயகர் பூஜை, அபிஷேகம் என்பவற்றினைத் தொடர்ந்து மாலை 4.00 மணிக்கு மூலஸ்தான பூஜையின் பின் திருக்கல்யாணம், திருவூஞ்சல் என்பன நடைபெற்று சுவாமி வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (சி)

# திருப்பாடுகளின் புனித வெள்ளி



இன்று திருப்பாடுகளின் வெள்ளி, பரிசுத்த நாள், ஆண்டவர் இயேசு உலக மாந்தர்களுக்காகத் தனது ஜீவனை சிலுவையில் துறந்த உன்னத நாள். மனுக் குலத்தை மீட்பதற்கு ஒரு கன்னித் தாயான பரிசுத்த மரியாளின் உதரத்தில் மனுவுரு எடுத்த ஆண்டவர் இயேசு தனது மீட்புத் திட்டத்தை வெளிப்படுத்த 33 ஆவது வயதில் இறக்கிறார்.

"தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை" என்று கூறிய இயேசு நம்மீது கொண்ட அன்பின் மிகுதியால் தம் உயிரையே சிலுவையில் கையளிக்கிறார்.

"சிலுவை" இது ஒரு அவமானத்தின் சின்னம் என்று அக்காலத்தில் கருதப்பட்டது. பெரிய பெரிய குற்றங்கள் செய்வோருக்கு இந்தச் சிலுவை மரணம் கொடுக்கப்பட்டது.

அப்படி இயேசு என்ன பெரிய குற்றம் செய்தார். அவர் பல குற்றங்களைப் புரிந்து உலகை நாசம் செய்யவா பரலோக தந்தை தனது ஒரே சுதனை அனுப்பினார்? ஆனால் இதை அறியாத உலகம் அவருக்கு அவமானத்தின் சின்னமான சிலுவை மரணத்தை பரிசளித்தது. அவர் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் பல பல புதுமைகளை நிறைவேற்றினார், பல அற்புதங்களை வெளிப்படுத்தினார், தனது சீடர்கள் முன்னிலையில் பரலோக தந்தையோடு உரையாடினார். தனது சீடர்கள் முதல் உலக மக்கள் வரை எல்லோரையும் அன்பு செய்தார். இப்படி தெய்வ சாயலை வெளிப்படுத்திய இயேசு சிலுவை மரணத்தில் இருந்து தப்பித்துக் கொள்ள முடியாமல் போனது ஏன் என்று எல்லோருக்கும் பல கேள்வி கள் எழும்?

த்ந்தையே! முடியுமானால் இந்தத் துன்பக் கிண்ணம் என்னை விட்டு அகலட்டும். ஆனால என் சித்தப்படி அல்ல உமது சித்தப்படியே அனைத்தும் நடக்கட்டும் என்று திருவுளம் பற்றினார் இயேசு. ஆம்! அவர் இந்த உலகத்தில் மனிதனாகப் பிறந்து வளர்ந்து தனது உயிரை அர்ப்பணிக்கும் அனைத்துமே வானகத் தந்தையின் சித்தப்படியே அவை நடந்தன. கிறிஸ்து தமது சிலுவை மூலம் உலகை இரட்சிக்க வேண்டும் என்பது இறைவனின் திட்டம், அதுவே அங்கு நிறைவேறியது. அதுவும் கடவுள் தனது சுய இலாபத்துக்காக அல்ல, இந்த உலக மக்கள் பாவ வாழ்வில் இருந்து விடுதலை பெறவேண்டும், அடிமைத் தனங்கள் அகற்றப்பட வேண்டும் என்பதால் தனது மகனை சிலுவை சுமக்க வைக்கிறார். அதன் மூலம் உலகுக்கு புது வாழ்வைப் பெற்றுத்தந்தார் இறைவன்.

கடவுள் நினைத்திருந்தால் இந்த உலகம் எப்படியாவது கெட்டுப்போகட்டும், இந்த மக்கள் ஒரு திருந்தாத ஜென்மங்கள். இவர்களுக்கு நான் பல அரும்பெரும் அற்புதங்களை நிகழ்த்திக் காட்டியும் இவர்கள் மனம் மாறவில்லை. இறை வாக்கினர்களை அனுப்பினேன், புனிதர்கள் மூலம் எனது திட்டத்தை வெளிப்படுத்தினேன். சிறிது நாட்கள் ஏற்றுக்கொண்டு விட்டு மீண்டும் பாவ வாழ்க்கைக்குச் செல்கிறார்கள்.

ஆதனால்தான் இந்த மக்களைத் திருத்த ஒரேவழி எனது மகனை உலக்கு அனுப்புவதுதான். ஆதலால் தனது மகனை ஒரு கன்னி மூலம் பிறக்க வைத்து உலக மீட்பை இயேசு மூலம் பெற்றுத்தந்தார்.

சற்று சிந்திப்போம்! வருடா வருடம் வரும திருச்சடங்கு என்று நினைத்துக் கொண்டு நாங்கள் இந்த நாட்களை அனுசரித்து வருகின்றோம். ஒவ்வொரு ஆண்டும் திருச்சபையானவள் 40 நாட்களைத் தந்து அதிலும் விசேடமாக பரிசுத்த நாட்களையும் தந்து இறுதியில் ஆண்டவரின் திருச்சிலுவை மரணத்துடனும், அவருடைய உத்தானத்துடனும் இந்த நாட்களை அனுசரித்து வருகின்றோம்.

ஆனால் எமது வாழ்வில் இந்த நாட்களில் நாம் என்னத்தை எடுத்துக் கொள்கின்றோம், ஏதாவது ஒரு ஒறுத்தல் முயற்சிகளில் எம்மை நாங்கள் ஈடுபடுத்திக் கொள்கின்றோமா? அல்லது் மற்றவர்களுக்குத் துன்பங்களை விளைவிக்காது நாங்கள் வாழ்ந்திருக்கின்றோமா? இயேசுவின் சிலுவை மரணத்தை நாங்கள் பரிசுத்தமாக அனுசரித்து அவர் கொண்டு வந்த மீட்பை தகுதியான முறையில் நாங்கள் கடைப்பிடிக்கின்றோமா? இப்படி எல்லாக் கேள்விகளையும் நாங்கள் எங்களுக்குள் கேட்டுக்கொண்டு போனால் ஒன்றுக்கும் பதில் இல்லை. காரணம் அத்தனை அழுக்கான செயற்பாடுகளும் எம்மில் நிறைந்திருக்கும் போது நாம் எப்படி எம்மால் நீதிமான்களாக நடந்து கொள்ள முடியும். இயேசு கொண்டுவந்த சமாதானம், மீட்பு அத்தனையும் எமது செயற்பாடுகளால் மழுங்கடிக் கப்படுகின்றது. சாத்தான் எம்மில் இருந்து கொண்டு அத்தனை செயற்பாடுகளையும் செய்கிறான். சாத்தானின் செயற்பாடுகளுக்கு இடம் கொடுக்கின்றோம். கடவுளின் செயற்பாடுகளுக்கு அறவே எம்மால் இடம்கொடுக்க முடியவில்லை. ஆனாலும் வருடா வருடம் வரும் அத்தனை புனித நாட்க ளையும் நாங்கள் வெளிவேடக்காரர்கள்போன்று நிறைவேற்றிக் கொள்கின்றோம.

இன்று ஒரு சந்தியும் மாமிசத்தை தவிர்க்கும் படியும் திருச்சபை எம்மை அழைக்கின்றது. இந்த ஒரு சந்தி நாளில் உபவாசம் செய்து நாம் எம்மில் ஒறுக்கும் ஒரு செயலை மற்றவர்களுக்கும் பயனுள்ள தாக்குவோம.

-ஆர்.மதுசன், பாசையூர்.

# பதிவிறக்கப் பெட்டகம்

மனிதன் பாம்பை வணங்கியதும் மயிலை வணங்கியதும் மூடநம்பிக்கை என்று கருதுவது நவீன மனிதனின் மூடநம்பிக்கையே ஆகும். இயற்கையை விட்டு வெகுதூரம் திரும்பி வந்துவிட்ட மனிதனின் முட்டாள்தனம் அது.

**– நாஞ்சில் நாடன்**

மதங்கள் போதிப்பது அன்பையே என்றாலும், அவ்வம் மதத் தவர்கள் தம் மதத்துக்காக வளர்ப்பது வெறுப்பையே!

**– ஹோஸெ ஸரமாகோ**

மதம் ஒரு ஸ்தாபனத்தைப் போல இறுக்கமான கட்டுப்பாடுகளும் விதிகளும் கொண்டிருக்கிறது. அதில் பிரார்த்தனை என்பது கூட கட்டாயமான ஒரு சடங்காக மாறிவிட்டது.

**– டொஸ்ரோயெவ்ஸ்கி**

மனிதனுக்கு ஒரு புழுவைப் படைக்கச் சக்தி கிடையாது. கணக்கில்லாக் கடவுளரைப் படைத்துக் கொண்டேயிருக்கிறான்.

**– மான்டெலின்**

ஓ, நண்ப! கடவுளைத் தூஷிக்கும் வேலையை நாத்திகனுக்கு விட்டுவிடு. மதத்தை சநாதனிக்கு விட்டுவிடு. ஆயின், உன் அனுபவத் தூசிகளுள் உண்மையைத் தேடி அறி!

**– ஜேகே**

கடவுள் இருக்கிறாரா இல்லையா என்பது ஒருபுறமிருக்கட்டும். நான் சொல்வது: வாழ்க்கைக்கு அப்பாலில் நம்பிக்கைகளை நிறுத்தும் ஒரு கோட்பாடு அறிவுபூர்வமாக வாழ்க்கையைப் புரிந்துகொள்ளும் முயற்சியிலிருந்து மனிதனைத் தடம்புரள வைக்கும் என்பதுதான். **– அல்பேர் காம்யூ**

மதம் – வாழ்க்கை சார்ந்த கவலைகளும், ஆன்மீகமான குழப்பங்களும் கொண்டவர்களுக்கு, திட்டவட்டமான விடைகள் மூலம் ஆறுதலும் வாழ்க்கை நெறிகளும் அளிக்கும் ஓர் அமைப்பு. நம்பிக்கை, சடங்குகள், முழுமுற்றான சில கோட்பாடுகள் ஆகியவை கலந்தது மதம். அது சிந்திப்பவர்களுக்கு நிறைவு தராது. உண்மையான ஆன்மீகத் தேடல் கொண்டவன், அத்தேடல் தொடங்கிய கணமே, மதத்தை விட்டு வெளியே செல்ல ஆரம்பித்துவிடுவான். **– ஜெயமோகன**

கடவுள் இல்லை என்று தெரிந்துபோனதால் பயமாயிருக்கிறது. **– சாரு சிறுகதையில்**

மனக்குழப்பத்திற்கு மருந்து இருக்கிறது. ஒன்று, தன்னை மறக்கும் அபார தெய்வபக்தி. அதாவது கேள்வி கேட்காமல், ஆவேசப்படாமல் ஆடுகள் போல் எல்லாம் அவன் செயல் என்று இருப்பது. இன்னொன்று மூளை சலித்து களைத்துப் போகும்படி அதற்கு வேலை கொடுப்பது. இப்படி இரண்டில் ஒன்றைப் பழக்கத்திற்குக் கொண்டுவந்தால்தான் நம்மால் தப்ப முடியும். **– புதுமைப்பித்தன்**

உணர்ச்சிகளில் அலைபடும்போது சமன்நிலை காத்துக் கொள்ள தனக்கு அப்பாற்பட்ட சக்தியின் மீது கொள்ளும் நம்பிக்கை அவசியமானது என்று சிலர் கருதலாம்.

**– சுந்தர ராமசாமி**

கடவுளை இழப்பதில் உள்ள துக்கம் இதுதான்: கடவுள் இல்லாவிட்டால் எப்படி மனிதர்கள் நல்லவர்களாவார்கள்? அப்போது யாருக்காக மனிதர்கள் நேசிப்பார்கள்? யாரிடம் நன்றியுள்ளவர்களாக இருப்பார்கள்?

**– டொஸ்ரோயெவ்ஸ்கி**

ஆத்திகர்கள் அனைவருமே அவர்களுடைய கடவுளைத் தவிர மற்றெல்லாக் கடவுள்களையும் நம்பாமல்தான் இருக்கின்றனர். நாத்திகன் என்பவன் ஆத்திகர்களை விடக் கூடுதலாக மேலும் ஒரு கடவுளை நம்பாதிருப்பவன்.

**– சல்மான் ருஷ்டி**

எந்த ஒரு இறை நம்பிக்கையாளரும் மற்றொரு வகையில் 'இறை மறுப்பாளரே' என்பது வெளிப்படையான ஒன்று. எந்த ஒரு மதமும் தனக்கான கடவுளை ஏற்று மற்றவற்றின் கடவுளை மறுக்கிறது. எந்த ஒரு இறை நம்பிக்கையாளரும் அதேபோல் பிற தெய்வங்கள் என்ற வகையில் மறுப்பாளராக – நாத்திகராகவே இருக்கிறார். தனது தெய்வங்கள் என்பவற்றின் புராணங்களும் தொன்மங்களும் 'உண்மையானதாக'; மறுக்கப்படவும் ஐயப்படவும் ஏதுமற்ற எதார்த்தங்களாக உள்ளபொழுது பிற தெய்வங்கள் பற்றிய அனைத்தும் கட்டுக்கதைகளாக வெறும் புனைவுகளாக அவருக்கு இருக்கிறது. நாத்திகம் தொடங்கும் இடம் இதுதான். இரு வேறு நம்பிக்கைகளின் மோதலில் ஏற்பும் மறுப்பும் தொடங்கி விடுகிறது. பிறரின் கடவுள் கொல்லப்பட வேண்டிய ஒன்றாக மாறும் இடம் இது. **– பிரேம் ரமேஷ்**

# தென்கடல் கச்சா எண்ணெய்; இந்தியாவை எச்சரிக்கிறது சீனா

சீனாவின் தென்கடல் பகுதியில் இந்தியா கச்சா எண்ணெய் எடுப்பதற்கு சீனா கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

சீனாவின் தென்கடல் பகுதியில் கச்சா எண்ணெய் எடுக்க இந்தியாவிற்கு கடந்த ஆண்டு நடந்த ஆசியான் உச்சி மாநாட்டின் போது ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இதைத்தொடர்ந்து இந்தியா, எண்ணெய் இயற்கை எரிவாயு விதேஷ் (ஓ.என்.ஜி.சி) நிறுவனம் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இதேவேளை நேற்று முன்தினம் கம்போடியாவில் ஆசியான் நாடுகளின் அரசியல் விவகாரம் தொடர்பாக நடந்த மாநாடு நிறைவுபெற்றது.

இது குறித்து தென்சீனா தேசிய இன்ஸ்டியூட் தலைவர் ஷுசிஹுன் கூறுகையில், இந்தியாவுடன் சீனா எந்த வகையிலும் சர்வதேச கடல் பகுதி ஒப்பந்தம் மேற்கொள்ளவில்லை.



சர்ச்சைக்குரிய தென்கடல் பகுதியில் 54 தீவுகள் உள்ளன. இவை மலேஷியா, வியட்நாம், பிலிப்பைன்ஸ், தைவான் ஆகிய நாடுகளை உள்ளடக்கியுள்ளன.

எனவே இங்கு இந்திய எண்ணெய் நிறுவனம் கச்சா எண்ணெய் எடுக்க இந்தியாவிற்கு தார்மீக உரிமை இல்லை.

இப்பகுதியில் 40 சதவீத கச்சா எண்ணெய் எடுப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. உடனடியாக இந்தியா தென்கடல் பகுதியிலிருந்து வெளியேற வேண்டும். இல்லையெனில் கடும் விளைவுகளை சந்திக்க நேரும் என்று தெரிவித்தார்.

# ஆந்திர அரசியலில் நடிகை ஜெயப்பிரதா

(ஆந்திரா)

பிரபல நடிகை ஜெயப்பிரதா உத்திரப்பிரதேச மாநிலம் ராம்பூர நாடாளுமன்றத் தொகுதியில் சமாஜ்வாடி கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

பின்னர் சமாஜ்வாடி கட்சி தலைவர் அஜத்கான் என்பவருடன் அவருக்கு கருத்து வேறுபாடு ஏற்பட்டதையடுத்து அக்கட்சியிலிருந்து வெளியேறி அமர்சிங் கட்சியில் இணைந்தார்.

இந்நிலையில் சமீபத்தில் நடந்து முடிந்த உத்திரப்பிரதேச தேர்தலில் சமாஜ்வாடி கட்சி வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது.

இதனால் ஜெயப்பிரதா உத்திரப்பிரதேச அரசியலில் இருந்து விலக முடிவு செய்துள்ளார். இந்நிலையில் அவர் திருப்பதி கோவிலுக்கு தரிசனம் செய்ய வந்தார்.

அப்போது அவர் ஊடகத்தினருக்கு அளித்த பேட்டியில், நான் உத்திரப்பிரதேச அரசியலில் இருந்து விரைவில் விலகி விடுவேன். அதன் பின்பு, எனது சொந்த மாநிலமான ஆந்திரா அரசியலுக்கு திரும்புவேன் என்றார்.

ஆனால் எந்த கட்சியில் சேருவது என்பது பற்றி முடிவு செய்யவில்லை. தொடக்கத்தில் நான் தெலுங்குதேசம் கட்சியில் இருந்தேன். அப்போது எனக்கு என்.டி.ராமாராவ் ஆதரவாக இருந்தார் என்று குறிப்பிட்டார்.

# மோடி ஒரு மோசடி; கணக்கெடுப்பில் தெரிவிப்பு




(ஆமதாபாத்)

உலகின் சக்தி வாய்ந்த 100 மனிதர்களைத் தெரிவு செய்யும் "டைம்" இதழின் தற்போதைய கணக்கெடுப்பில் குஜராத் முதல்வர் நரேந்திர மோடி மோசடி செய்துள்ளார் என்று காங்கிரஸ் தலைவர் ஒருவர் குற்றம் சாட்டியுள்ளார்.

குஜராத் மாநிலத்தின் காங்கிரஸ் கட்சித் தலைவராக அர்ஜுன் மோத்வாடியா உள்ளார். இவர் ஆமதாபாத்தில் ஊடகத்தினருக்கு அளித்த பேட்டியில் மோடியின் மோசடி பற்றி குறிப்பிட்டார்.

குஜராத் அரசின் பல்வேறு இணையதளங்களில் இருந்து பொதுமக்களுக்கு நூற்றுக் கணக்கான மின்னஞ்சல்களை நரேந்திர மோடி அனுப்பியுள்ளார். அதில் டைம் இதழின் ஒன்லைன் கணக்கெடுப்புக்கு தனக்காக வாக்களிக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார் எனத் தெரிவித்தார்.

உலகில் எந்தத் தலைவரும் மோடியைப் போன்று செய்ததில்லை. இதெல்லாம் டைம் இதழின் பட்டியலில் வரவேண்டும் என்ற சாதாரண காரணத்துக்காகத்தான் என மோத்வாடியா குற்றம்சாட்டினார்.

டைம் இதழின் ஒன்லைன் கணக்கெடுப்பில் மோடிக்கு தற்போது 96, 741 வாக்குகள் கிடைத்துள்ளன. இந்தப் பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

Reddit.com பொது மேலாளர் எரிக் மார்ட்டின் 1,23,840 வாக்குகளுடன் முதலிடத்தில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கூடங்குளம் அணு உலையில் விரைவில் எரிபொருள் நிரப்பப்படும்

(நெல்லை)

கூடங்குளம் அணு மின் நிலையத்தில் விரைவில் மின் உற்பத்தியை தொடங்குவதற்காக முதல் அணு உலையில் எரிபொருள் நிரப்புவதற்கான ஏற்பாடுகள் தயார் நிலையில் உள்ளதாக இந்திய அணு சக்தி கழக தலைவர் எஸ்.கே. ஜெயின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கூடங்குளம் அணு மின் நிலையத்தின் மூலம் எஸ்.கே.ஜெயின் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது,

இந்திய அணு சக்தி கழகம் நாடு முழுவதும் 19 அணு உலைகள் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்து வருகிறது. கடந்த ஆண்டு 26, 473 மில்லியன் யூனிட்களாக இருந்த மின் உற்பத்தி இந்த ஆண்டு 32, 455 மில்லியன் யூனிட்களாக அதிகரித்துள்ளது. இதன் மூலம் மின் உற்பத்தி 23 சதவீதம் அதிகரித்துள்ளது.

ஃபுகுஷிமா அணு உலை விபத்திற்கு பிறகு நிலநடுக்கம், சுனாமி, இயற்கை சீற்றம் இடர்பாடுகளால் பாதிக்காத வகையில் அணு உலைகள் கட்டப்பட்டு வருகின்றன. உயர் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக கூடுதல் பாதுகாப்பு அம்சங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. கூடங்குளம் அணு மின் நிலையத்தில் முதல் அணு உலையில் கடந்த ஜூலை மாதம வெப்ப நீர் சோதனை ஓட்டம் நடந்தது. கூடங்குளம் அணு உலை மூலம் விரைவில் மின் உற்பத்தியை தொடங்குவதற்காக எரிபொருள் (யுரேனியம்) நிரப்புவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன. இதற்காக அணு சக்தி ஒழுங்குமுறை ஆணையத்தின் படிப்படியான ஆய்வுகளும் நடந்து வருகின்றன.

கூடங்குளத்தில் 1ஆவது அணு உலையைத் தொடர்ந்து 2ஆவது அணு உலையும் இயக்கப்படும். தற்போது இந்திய அணு சக்தி கழகத்தின் மூலம் 4,680 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. கட்டுமான பணிகள் நடந்து வரும் அணு உலையின் பணிகள் முடிந்தால் 2017ஆம் ஆண்டு இறுதியில் 9,580 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும். அதற்கான திட்டங்கள் தொடங்கியுள்ளன என்று அவர் அதில் தெரிவித்துள்ளார்.




இந்தியச் செய்திகள்

# இராணுவப்புரட்சி என்ற பேச்சுக்கே இடமில்லை என்கிறார் தளபதி



(காத்மாண்டு)

இராணுவப் புரட்சிக்கு இராணுவம் திட்டமிட்டது, இராணுவ வாகனங்கள் புதுடில்லியில் குவிக்கப்பட்டன என்று கூறப்படுவது முட்டாள்தனமானது என்று இராணுவத் தலைமைத் தளபதி வி.கே.சிங் கூறியுள்ளார்.

புதுடில்லியில் ஜனவரியில், இராணுவ நடமாட்டம் வழக்கத்திற்கு விரோதமாக இருந்ததாக நாளிதழ்களில் செய்திகள் வெளியாகின. தனது வயதுப் பிரச்சினை தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் தளபதி வி.கே.சிங் வழக்குத் தொடர்ந்த நாளில் நடந்த இந்த இராணுவ நடமாட்டமானது புரட்சிக்கான முயற்சியா என்றும் செய்திகள் வெளியானதால் பரபரப்பானது.

இருப்பினும் இதை உடனடியாக பிரதமரும், பாதுகாப்பு அமைச்சரும் மறுத்தனர். அதே போல இராணுவமும் மறுப்பு தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் நேபாளத்திற்கு வந்துள்ள இராணுவத் தலைமைத் தளபதி வி.கே.சிங்கிடம் இதுகுறித்து செய்தியாளர்கள் கேட்டதற்கு, இது முட்டாள்தனமான பேச்சு. இதைத் தவிர சொல்வதற்கு வேறு ஒரு வார்த்தையும் இல்லை என்றார் கோபமாக.

காத்மாண்டுவில் நடைபெறும் 3 நாள் இயற்கைப் பேரிடர் நிர்வாகம் மற்றும் மனிதாபிமான உதவிகள் தொடர்பான பிராந்திய கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக வி.கே.சிங் நேபாளம் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# என்னை நானே பார்த்தேன்; மகளைப் புகழ்ந்தார் அப்பா

3 படத்தில் ஸ்ருதியின் நடிப்பை பார்த்து வெகுவாகப் பாராட்டியிருக்கிறார் நடிகர் கமல்ஹாசன். ஐஸ்வர்யா தனுஷ் இயக்கத்தில், தனுஷ்-ஸ்ருதி ஹாசன் நடிப்பில் உருவாகி இருக்கும் கொலவெறி புகழ் 3 படம், கடந்த 30ஆம் திகதி முதல வெளியாகி ஓடிக் கொண்டு இருக்கிறது. இரசிகர்கள் மத்தியில் ஒருபக்கம் நல்ல விமர்சனமும், மற்றொரு பக்கம் எதிர்பார்த்த அளவுக்கு படம் இல்லை என்றும கூறப்பட்டு வருகிறது. இந்நிலையில் இப்படத்தினை நடிகர் கமல்ஹாசனுக்கு பிரத்யேகமாக திரையிட்டு காட்டியுள்ளார் தனுஷ். படத்தை பார்த்துவிட்டு கமல்ஹாசன், தனது மகளை புகழ்ந்து தள்ளியுள்ளார்.



# "நான் பைத்தியக்காரனல்ல" சொல்கிறார் அந்தோணி

ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடுவீர்களா? என்று கேட்டதற்கு, "நான் பைத்தியக்காரனல்ல" என்று பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோணி பதிலளித்தார்.

ஜனாதிபதி பிரதிபா பாட்டீலின் பதவிக்காலம் ஜூலை மாதத்துடன் முடிகிறது. இந்நிலையில், விசாகப்பட்டினத்தில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பாதுகாப்பு அமைச்சர் அந்தோணியிடம், ஜனாதிபதி பதவிக்கான போட்டியில் இருக்கிறீர்களா? என்று நிருபர்கள் கேட்டனர்.

இதற்கு அந்தோணி அளித்த பதிலில், "நான் பைத்தியக்காரனல்ல. குறிக்கோளுக்கும் ஒரு எல்லை உண்டு. எனது எல்லை எனக்கு தெரியும். நான் நடைமுறையை உணர்ந்தவன்" என்றார். இதன் மூலம் ஜனாதிபதி பதவிப் போட்டியில் தான் இல்லை என்பதை அந்தோணி உணர்த்தியுள்ளார்.

# விவாகரத்தில் தமிழகம் சம்பியன்

(புதுடில்லி)

இந்தியாவில் 2010ஆம் ஆண்டில் கணவன் அல்லது மனைவியை இழந்தோர், விவாகரத்து ஆனவர்கள் மற்றும் பிரிந்து வாழ்பவர்கள் பட்டியலில் 8.8 சதவீதத்துடன் தமிழகம் முதலிடத்தில் உள்ளது. இந்தப் பட்டியலில் டில்லி 4.1 சதவீதத்துடன் கடைசியில் உள்ளது.

இந்தப் பட்டியலில் தமிழகத்தைத் தொடர்ந்து 8.2 சதவீதத்துடன் ஆந்திரா, கேரளா, கர்நாடகா ஆகிய மாநிலங்களும், 7.2 சதவீதத்துடன் ஒரிசாவும், 7.1 சதவீதத்துடன் இமாச்சல பிரதேசமும், 7 சதவீதத்துடன் மகாராஷ்டிராவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## செப்ரெம்பர் - 11 தாக்குதல் சம்பவம் உத்தியோகபூர்வ வழக்கு விசாரணை



செப்ரெம்பர் -11 இரட்டைக் கோபுரத்தாக்குதல் சந்தேகநபர்களை உத்தியோகபூர்வ வழக்கு விசாரணைகளுக்கென, அமெரிக்கா அனுப்பி வைத்துள்ளது. பிரதான சந்தேகநபரான காலித் சேஷ் மொஹமட் உள்ளிட்ட ஐவர் இராணுவ ஆணைக்குழுவினால் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பயங்கரவாதம், கடத்தல், சதி, கொலை மற்றும் சொத்துக்களை அழித்தமை போன்ற குற்றச்சாட்டுக்கள் சந்தேகநபர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ளன.

குறித்த ஐவர் மீதான குற்றங்கள் நிரூபிக்கப்படும் பட்டசத்தில் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சுறு சுறுப்பாக இயங்குவதற்கு ஊழியரை குறைக்கிறது யாகூ

(வொஷிங்டன்)

2000 ஊழியர்களை தங்களது நிறுவனத்திலிருந்து பணிநிறுத்துவதாக பிரபல இணைய நிறுவனமான யாகூ உறுதிப்படுத்தியுள்ளது. தங்களது நிறுவனத்தை சிறியதாக, சுறுசுறுப்பானதாக, அதிக இலாபமுடையதாக, பாவனையாளர்கள் விரும்பும் விதத்தினுடையதாக, புத்தாக்க சிந்தனையுள்ளதாக மாற்றுவதற்காக இந்த நடவடிக்கையை மேற்கொள்வதாக யாகூ நிறுவனம் அறிவித்துள்ளது.

ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த இணையத்தளமான யாகூ நிறுவனம், மின்னஞ்சல் சேவை, தேடுதல் சேவை, செய்திச் சேவை, குழுமக் கலந்துரையாடல் சேவை, விளம்பரசேவை, வீடியோ பகிரல், விளையாட்டுகள், சமூக இணையத்தள சேவைகள் உட்பட ஏராளமான சேவைகளை வழங்குகிறது.

1994ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட யாகூ நிறுவனம், ஓர் ஆண்டுக்கு 700 மில்லியன் மக்களை தனது தளத்திற்கு வருகைதரச் செய்கிறது.

யாகூ நிறுவனத்தின் இந்த நடவடிக்கை தொடர்பாக கருத்துத் தெரிவித்த யாகூ நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஸ்கொட் தொம்ஸன், தங்களுடைய நிறுவனத்தின் இலக்கான பாவனையாளர்களையும் விளம்பரதாரர்களையும் முன்னிறுத்துதல் என்பதை நிறைவேற்றுவதற்காக கடினமான முடிவுகளை எடுக்க வேண்டியுள்ளதாகத் தெரிவித்தார். தங்களுடைய இலக்கை நிறைவேற்ற ஆக்ரோஷமான முடிவுகளை எடுக்கத் தயாராக இருப்பதாகவும் எனினும் தங்களுடைய நிறுவனத்தின் ஊழியர்கள் தங்களுக்கு வழங்கிய சேவைகளை தாங்கள் மிகவும் நன்றியுடன் நினைவுகூருவதாகவும் தெரிவித்தார்.

2000 ஊழியர்களை பணி நிறுத்துவதன் மூலம் யாகூ நிறுவனம் 375 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை வருடந்தோறும் சேமிக்க எதிர்பார்ப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அத்தோடு இந்த 2000 ஊழியர் பணிநீக்கம் இறுதியானதாக அமைய வாய்ப்பில்லை எனவும், இது தொடர வாய்ப்புக்கள் காணப்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

உலகச் செய்திகள்

## அமெரிக்கா மீது போர்; எச்சரிக்கின்றது ஈரான்

(தெஹ்ரான்)

தமது நாட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் அமெரிக்கா மீதும் தாக்குதல் நடத்தப்படும் என ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஈரானின் புரட்சிப் பாதுகாப்புப படையின் கட்டளைத் தளபதியொருவரை மேற்கோள்காட்டி இந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தமது சர்ச்சைக்குரிய அணுத்திட்டம் காரணமாக ஈரானுக்கும் மேற்குலக நாடுகளுக்கும் இடையில் முரண்பாடுகள் அதிகரித்துள்ளன.

அணுசக்தி செயற்பாடுகளை ஈரான் கைவிடாத பட்சத்தில் ஈரான் மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா ஆகியன எச்சரித்துள்ளன.

அணுத்திட்டங்களைப் பயன்படுத்தி ஈரான் அணு ஆயுதங்களை உருவாக்க முயற்சிப்பதாக அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் குற்றஞ்சாட்டி வருகின்ற நிலையில், அமைதிச் செயற்பாடுகளுக்காகவே அணுத்திட்டங்களைப் பயன்படுத்துவதாக ஈரான் கூறி வருகின்றது.

இந்த விடயத்தில் இணக்கப்பாடு ஒன்றை எட்டும் பொருட்டு ஈரானுக்கும் வல்லரசு நாடுகளுக்கும் இடையில் இந்த மாதம் பேச்சுவார்த்தை நடை பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

யூரேனிய செறிவூட்டல் செயற்பாடுகளை ஈரான் நிறுத்துவற்கு மறுப்பு தெரிவித்ததை அடுத்து அண்மையில் நடைபெற்ற பேச்சுவார்தைகள் தோல்வியடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது

## தற்கொலைக் குண்டுத் தாக்குதல்; ஆப்கானிஸ்தானில் 10 பேர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் வட பிராந்தியத்தில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 10 பேர் கொல்லப்பட்டனர்.

உயர் அதிகாரிகள் பலர் கலந்துகொண்ட கூட்டம் ஒன்றை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதலை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தத் தாக்குதலில் பலர் காயமடைந்துள்ளதாகவும் இதில் வெளிநாட்டுப் படையினரும் அடங்குவதாகவும் கூறப்படுகின்றது.

ஆப்கானிஸ்தானில் உள்ள வெளிநாட்டுப் படையினர் மீது தொடர்நதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வடகொரியா மீது தடை; நீடித்தது ஜப்பான்

(ரோக்கியோ)

வட கொரியா ஏவுகணை திட்டதை செயற்படுத்தவுள்ள நிலையில், அந்த நாட்டிற்கு எதிரான தடையை ஜப்பான் மேலும் நீடித்துள்ளது.

ஏவுகணைத்திட்டத்தால் சர்வதேச விமர்சனத்தை எதிர்நோக்கியுள்ள வட கொரியாவிற்கு எதிரான தடையை மேலும் ஒரு வருடத்தால் ஜப்பான் நீடித்துள்ளது.

2006 ஆம் ஆண்டு தடை செய்யப்பட்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஏவுகணைப் பரிசோதனை நடத்தியதை அடுத்து, வட கொரியாவிற்கு எதிராக ஜப்பான் முதல் முறையாக தடைவிதித்திருந்தது.

எனினும், விண்வெளிக்கு செய்மதியைக் கொண்டு செல்வதற்காகவே இந்த ஏவுகணைப் பரிசோதனையை தாம் நடத்தவுள்ளதாக வட கொரியா கூறியுள்ளது.

இந்த ஏவுகணைத் திட்டத்தில் ஐக்கிய நாடுகள் சபையால் தடைசெய்யப்பட்ட தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தலாம் என அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

இந்த ஏவுகணைத்திட்டம் மூலம் மேலும் தனிமைப்படுத்தப்பட்ட, முன்னேற்றமடையாத நாடாக வட கொரியா மாற்றம் அடையும் என அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

## சேர்பிய ஜனாதிபதி இராஜினாமா



சேர்பியாவின் ஜனாதிபதி பொரிஸ் டடிக் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

அவரின் பதவிக்காலம் நிறைவடைவதற்கு இன்னும் 10 மாதங்கள் உள்ள நிலையில் ஜனாதிபதி பதவி விலகியுள்ளார்.

எனினும் ஜனாதிபதியின் இராஜினாமாக் கடிதம் இன்று உத்தியோகபூர்வமாக சபாநாயகரிடம் கையளிக்கப்படவுள்ளது.

இந்த நிலையில் எதிர்வரும் மே மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவுள்ளது.

அத்துடன் இந்தத் திகதியில் நாடாளுமன்றத் தேர்தலும் நடத்தப்படவுள்ளதாக கூறப்படுகின்றது.

எதிர்க்கட்சிகளின் எதிர்ப்புகள் காரணமாக ஜனாதிபதி பதவி விலக நேரிட்டுள்ளதாக தகவல்கள் குறிப்பிடுகின்றன.

## உலகின் நீளமான தொங்கு பாலம் சீனாவில் மக்கள் பாவனைக்கு திறப்பு

(லண்டன்)



உலகிலேயே மிகவும் நீளமான, உயரமான தொங்கு பாலம் ஒன்றை சீனா கட்டியுள்ளது. இதன் திறப்பு விழா நேற்று முன்தினம் நடந்தது. சீனாவின் ஹூனான் மாகாணத்தில் அன்ஹியாட் நகரில் மிகவும் உயரமான மலைத்தொடர்கள் உள்ளன. இங்குள்ள இரு மலைத்தொடர்களையும் இணைக்கும் வகையில் கடந்த 2007ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் கட்டுமானப்பணிகள் தொடங்கின.

மொத்தம் 1,102 அடி நீளம் உள்ள இந்த தொங்கு பாலம், 3,858 அடி உயரம் கொண்ட இரு மலைத்தொடர்களுக்கிடையே பிரம்மாண்டமாக கட்டி முடிக்கப்பட்டுள்ளது.. பணிகள் முற்றிலும் முடிவடைந்துவிட்டதால், நேற்று முன்தினம் போக்குவரத்திற்கு திறக்கப்பட்டது. இப்பாலம் உலகிலேயே மிகவும் நீளமானதும், உயரமானது என அழைக்கப்படுகிறது.

78 அடி அகலம் கொண்ட இப்பாலத்தில் நான்குவழிச்சாலை அமைப்பில் கட்டப்பட்டுள்ளது. இதில் இருசக்கர வாகனம், கார், கனரக வாகனங்கள் என பல்வேறு வாகனங்கள் செல்வதற்கென தனிப்பாதைகள் மற்றும் பாதசாரிகள் நடக்கவும் தனிப்பாதை அமைக்கப்பட்டுள்ளன. மணிக்கு 50 கி.மீ. வேகத்தில் தான் இப்பாலத்தின் மீது வாகனங்கள் செல்ல வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளதாக டெய்லி மெயில் எனும் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது

## இருப்பிடத்தை தெரிவிக்கிறேன் என் மீதும் தாக்குதல் நடத்துங்கள்

### - அமெரிக்காவிற்கு சயீத் சவால்



(இஸ்லாமாபாத்)

எனது இருப்பிடத்தை சொல்கிறேன், ஒசாமா பின்லேடனை தாக்கியது போல் என்னைத் தாகுங்கள் என்று லஷ்கர் இ தொய்பா தலைவர் ஹபீஸ் சயீத், அமெரிக்காவுக்கு சவால் விடுத்துள்ளார்.

சயீத் தலைக்கு 50 கோடி விலை நிர்ணயித்து அமெரிக்கா திடீரென அறிவிப்பு வெளியிட்டது. இதற்கு தீவிரவாதி சயீத் அலட்சியமாக பதிலளித்துள்ளார். பாகிஸ்தானில் உள்ள ராவல்பிண்டியில் ஒரு ஹோட்டலில் நிருபர்களுக்கு சயீத் அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஆப்கானில் உள்ள நேட்டோ படைகளுக்கு பாகிஸ்தான் அரசு பொருட்கள் விநியோகிக்கக் கூடாது என்று வலியுறுத்தி நான் போராட்டங்களை நடத்தி வருகிறேன். அதனால்தான், அமெரிக்கா எனக்கு குறி வைத்துள்ளது. இந்த விடயத்தில் இந்தியா சொல்வதை அமெரிக்கா அப்படியே கேட்கிறது.

நான் குகையிலோ, மலையிலோ பதுங்கியிருக்கவில்லை. வெளிப்படையாக வாழ்ந்து வருகிறேன். எனது இருப்பிடத்தை சொல்கிறேன். ஒசாமா பின்லேடனை தாக்கியது போல், அமெரிக்கா என் மீது தாக்குதல் நடத்தட்டும். எனக்கு நிர்ணயித்த தொகையை என்னிடமே கொடுங்கள். அதை பலுசிஸ்தான் மாகாணத்திற்கு செலவிடுகிறேன். மும்பை தாக்குதலில் எனக்கு தொடர்பு இல்லை என சயீத் கூறியுள்ளார்.

# நந்தன வருட இராசி பலன்கள்




அசுவனி, பரணி, கார்த்திகை 1ஆம பாதம் வரை.

(பெயரின் முதல் எழுத்துக்கள்: சு, சே, சோ, ல, லி, லு, லே, லோ, அ உள்ளவர்களுக்கும்)

குரு பெயர்ச்சிக்குப் பிறகு கூடுதல் இலாபம் தேடி வரும்!

மற்றவர்களின் மனம் அறிந்தும், குணம் அறிந்தும் பேசுவதில் வல்லவர்களாக விளங்கும் மேஷ ராசி நேயர்களே!

'கர' வருடம் முடிந்து 'நந்தன' வருடம் தொடங்குகிறது. வரப்போகும் நந்தன வருடம் வாழ்க்கையை வசந்தமாக்குமா? சிந்தித்ததெல்லாம் செயற்படுத்த முடியுமா? என்ற எண்ணம், வருடம் பிறக்கும் முன்பே உங்கள் மனதில் பிறந்து விடும்.

குரு பெயர்ச்சிக்குப் பிறகு நீங்கள் கொடி கட்டிப் பறக்கப் போகிறீர்கள். ராசிநாதன் செவ் வாயும், சனியும் கூடும் நேரத்தில் மட்டும் கொஞ்சம் கூடுதல் கவனம் தேவை. அதேபோல், ஜென்ம ராசி யில் கேது சஞ்சரிக்கும் போதும், சாதனை நிகழ்த்தி வந்த நீங்கள் சில தடைகளைச் சந்திக்கலாம்.

நந்தன ஆண்டு மட்டுமல்லாமல், எந்த ஆண்டும் இனிய ஆண்டாக அமையவும், தடைகள் அகன்று தன இலாபம் குவியவும், உங்கள் சுய ஜாதகத்தில் பாக்யாதிபதியின் பாத சார பலமறிந்து, அதன் நவாம்ச நிலை அறிந்து யோக பலம் பெற்ற நாளில், யோகம் தரும் கிரகத்திற்குரிய தெய்வங்களை தேர்ந்தெடுத்து, சிறப்பு வழிபாடுகளையும், பரிகாரங்களையும மேற்கொண்டால், நினைத்த காரியம் நினைத்தபடியே நிறைவேறும்.

நினைத்ததை முடிக்க வேண்டுமென்று உறுதியான மனம் பெற்றவர்கள் நீங்கள். தன்னம்பிக்கை உங்களுக்கு அதிகமாக இருப்பதால், எது நடந்தாலும் நடக்கட்டும் பார்த்து கொள்ளலாம் என்று சொல்வீர்கள்.

உங்கள் சுய ஜாதகத்தில் சுக்ர பலத்தைப் பொறுத்தே வாழ்க்கைத் துணையும் அமையும், வருமானமும் கிடைக்கும். சனியின் பலத்தை பொறுத்தே தொழில் வளம் அமையும்.

உங்களுக்கு இந்த நந்தன வருடம் சித்திரை முதல் பங்குனி வரை செய பாடுகளில் கிரக நிலைகள் சாதகமான சூழ்நிலையைக்கொடுக்குமா? என்பதைப் பற்றி பார்ப்போம்.

**ஆண்டின் தொடக்கம் முதல் வைகாசி 3 வரை**

ஆண்டின் தொடக்கம் தனுசு ராசியில் நிகழ்கிறது. உங்கள் ராசிக்கு ஒன்பதாமிடத்தில் சந்திரன் உலா வந்து ஆண்டு தொடங்குவதால், பொன், பொருட்கள் சேரும் விதத்தில் நந்தன வருடம் உங்களுக்கு நற்பலன்களைக் கொடுக்கப்போகிறது. ராசிநாதன் செவ்வாய் பஞ்சம ஸ்தானத்தில் இருந்தபடி குருவின் பார்வையைப் பெற்று கொள்வதால், குரு - மங்கள யோகம் செயற்படப் போகிறது.

சுபகாரியப்பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். தொழில் வளர்ச்சிக்கு சகோதரர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். சித்திரை 17ஆம் திகதி மேஷத்தில புதன் சஞ்சரிக்கப் போகிறார். 3, 6இற்கு அதிபதி ராசியில் சஞ்சரிக்கும் போது, உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். ஜென்ம குரு தடைகளை அகற்றவும், தனவரவைக் கொடுக்கவும், வியாழன் தோறும் தென முகக் கடவுள் வழிபாட்டினை மேற்கொள்ளுங்கள்.

**குரு பெயர்ச்சி நன்மை தருமா?**

நவக்கிரகங்களில் சுபகிரகம் என்று வர்ணிக்கப்படுவது குரு ஒன்றுதான். அந்தக்குரு பார்த்தால் கோடி நன்மை. அந்தக் குருவோடு பகைக் கிரகங்கள் சேர்ந்திருந்தால் கூட தோஷம் நிவர்த்தியாகி விடுகின்றன.

எல்லா வருடங்களிலும் பெயர்ச்சியாகும் குருவைக் காட்டிலும், இப்போது வரும் குருப்பெயர்ச்சி கொஞ்சம் வித்தியாசமானதாகவும், திடீர், திடீ ரென பலருக்கும் மாற்றங்களைக் கொடுக்க கூடியதாகவும் அமைகிறது.

காரணம், தேவ குருவான வியாழ பகவான், அசுர குருவான சுக்ரன் வீட்டில் அல்லவா சஞ்சரிக்க போகிறார். பகை கிரகத்தின் வீட்டில் குரு சஞ்சரிக்க போவதால், நமக்கு வரும் பலன்கள் நல்லதாக அமைய, குரு வழிபாட்டை முறையாகச்செய்வது நல்லது.

உங்கள் ராசிக்கு இரண்டாமிடத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை, உங்கள் ராசிக்கு 6, 8, 10 ஆகிய இடங்களில் பதிந்து, அந்த இடத்து ஆதிபத்தியங்களை துரிதமாக நடைபெற வைக்கப் போகிறது. 'இரண்டில் குரு வந்தால் இல்லத்தில் மகிழ்ச்சி வரும். திரண்ட செல்வமுடன் தேனான வாழ்வும் வரும்' என்பார்கள்.

குருவின் பார்வை பலத்தால் எதிர்ப்பு, வியாதி, கடன், இழப்பு, வழக்கு, உடல் நிலை, இடமாற்றம், தொழில் மாற்றம் போன்ற அனைத்திலும் நல்ல மாற்றங்களைக்கொடுக்க போகிறார். பட்ட கடன் தீரும். பரிதவிப்பு மாறும். கெட்டவர்களின் சகவாசம் மாறும்.

ஆதாயம் தரும் காரியங்கள் ஏராளமாக நடைபெறும். போதுமான அளவு பொருளாதாரம் வந்து சேரும். பாயில் படுத்தவரின் நோய்கள் அகலும். மாற்று மருத்துவம் மகத்தான பலன் தரும். கிளை தொழில்கள் செய்யவும் வாய்ப்புகள் கைகூடி வரும். கேட்ட இடத்தில் உதவிகளும் கிடைக்கும்.

**துயரங்களைப்போக்குமா துலாம் ராசி சனி!**

இந்த வருடம் தொடக்கத்தில் கன்னி ராசிக்குள் சஞ்சரித்த சனி, துலாம் ராசிக்குள் ஆவணி 27ஆம் திகதி வருகிறார். இதன் விளைவாக, உடல் ஆரோக கியத்திற்கு என்று ஒரு தொகையைச் செலவழிக்கும் சூழ்நிலை உருவாகலாம். உத்யோகம், தொழி லில் பற்றாக்குறை பட்ஜெட் ஏற்படலாம்.

கல்யாண வாய்ப்புகள் திடீ ரென மாறிப்போய் கவ லையை உருவாக்கலாம். குடும்ப உறுப்பினர்களை அனுசரித்து செல்லாவிட் டால், குழப்பங்களையே அதிகரிக்கச் செய்யும்.

**வக்ர குரு என்ன செய்யும்?**

புரட்டாசி 26ஆம் திகதி முதல் தை 24 வரை குரு வக்ரமாக ரிஷப ராசிக்குள் சஞ்சரிக்கிறார். உங்கள் ராசிக்கு 9, 12இற்கு அதிபதியாக விளங்கும் குரு வக்ரம் பெறும் போது, தந்தை வழியில் தனலாபம் கிடைக்கும். பூர்வீக சொத்துக்கள் சம்பந்தமான பாகப்பிரிவினை சுமுக மாக முடியும்.

சொத்துக்கள் வாங்கி சேர்க்கும் ஆர்வமும், சொந்த பந்தங்களின் ஒத் துழைப்பும் இந்தக்காலத்தில் ஏற்படலாம். புதிய வாகனங்களை வாங்கி மகிழ்வீர்கள், வீட்டுக்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களையும் ஒவ் வொன்றாக வாங்கிச் சேர்ப்பீர்கள்.

**மகர செவ்வாய் தரும் மகத்துவம்!**

வரும் நந்தன வருடத்தில் கார்த்திகை 30 முதல் தை 9 வரை மகரத்தில் செவ்வாய் உச்சம் பெறுகிறார். இந்தக் காலம் ஒரு பொற்காலமாகும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். துணையாக இருப்பவர்கள் தோள் கொடுத்து உதவுவர். வீடு கட்டும் அமைப்போ அல்லது வாங்கும் அமைப்போ உருவாகும்.

பாம்பு கிரகப் பெயர்ச்சி பக்க பலமாக இருக்குமா?

கார்த்திகை 17ஆம் திகதி துலாம் ராசியில் ராகுவும், மேஷராசியில் கேதுவும் சஞ்சரிக்க போகிறார்கள். மேஷத்தில் சர்ப்பக்கிரகம் சஞ்சரிக்கும் போது, மேன்மைகள் உருவாகும் என்பர். பொருளாதார நிலை உயரும்.

புண்ணிய நதிகளில் தீர்த்தமாடச் செல்வீர்கள். குழந்தைகளின் கல்வி நலன் கருதியும், கல்யாண முயற்சி கருதியும் செய்த செயற்பாடுகள் வெற்றி தரும். நாடு மாற்றங்கள் ஒரு சிலருக்கு நன்மையை தரும்.

கூட்டுத் தொழில் தனித்தொழிலாக மாறலாம். குடும்ப முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகள் ஒவ்வொன்றாக வெற்றி பெறும். வாழ்க்கைத் தேவைகளை ராகு, கேது பெயர்ச்சி பூர்த்தி செய்தாலும், உடல் ஆரோக்கியத்தில் சிறு, சிறு தொல்லைகளைக் கொடுக்கலாம். சர்ப்ப சாந்திகளை முறையாகச் செய்தால் சகல பாக்கியங்களும் உங்களுக்குக் கிடைக்கும்.

வக்ர சனியால் வளர்ச்சி ஏற்படுமா?

சித்திரை 1ஆம் திகதி முதல் ஆனி 6ஆம் திகதி வரை சனி வக்ர இயக்கத்தில் இருக்கிறார். அதன் பிறகு மாசி 4ஆம் திகதி முதல் பங்குனி 31ஆம் திகதிவரை மீண்டும் வக்ரத்தில் சஞ்சரிக்கிறார். இந்த வக்ர காலம் உங்களுக்கு தொழில் ரீதியான மாற்றங்களைக் கொடுக்கலாம். 10, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக விளங்கும் சனி பகவான், தொழில் மற்றும் இலாப ஸ்தானத்தை ஆதிபத்யமாக கொண்டிருப்பதால், தொழிலில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய நேரம் இது.

எதிரிகளால் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடலாம். உதிரி வருமானம் குறையலாம். நண்பர்களிடம் ஒப்படைத்த பொறுப்பு மீண்டும் உங்களிடமே வந்து சேரும். வெளிநாட்டில் இருப்பவர்கள் தாய்நாட்டை நோக்கி வரலாம். தாய் நாட்டில் இருப்பவர்கள் வெளிநாட்டை நோக்கிச் செல்லலாம். உற்றார், உறவினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. அனுமன் வழிபாட்டில் ஆர்வம் காட்டினால் அன்றாட வாழ்க்கை நன்றாக அமையும்.

செவ்வாய்க்கிழமை தோறும் அருகில் உள்ள ஆலயத்திற்கு சென்று முருகப் பெருமானை வழிபட்டு வாருங்கள்.

**மங்கையர்களுக்கான மகத்தான பலன்கள்!**

நந்தன வருடத்தில் மேஷ ராசியில் பிறந்த பெண்களுக்கு வைகாசி மாதத்திற்கு மேல் வளர்ச்சி கூடும். வாய்ப்புகள் வாயில் கதவை தட்டும். வாரிசுகள் இல்லையே என்ற கவலை தீரும். சனியின் வக்ர காலத்தில் உத்தியோகத்துறையில் உள்ளவர் களுக்கு ஊதிய உயர்வும், அதிகாரிகளின் அனுகூலமும் கிடைக்கும். ராகு- கேது பெயர்ச்சிக்குப் பின்னால் பிள்ளைகளின் சுபகாரியப் பேச்சுக்கள் திடீரென முடிவுக்கு வரலாம். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை கூடும். குருவின் வக்ர இயக்க காலத்தில் சொத்துக்கள் உங்கள் பெயரிலேயே வாங்கும் சூழ்நிலை உருவாகும். ஆனி 9 முதல் ஆடி 29 வரை செவ்வாய், சனி சேர்க்கை காலத்தில் கூடுதல் விழிப்புணர்ச்சியோடு செயறபடவேண்டும். அப்போதுதான் விரயங்களில் இருந்து விடுபட இயலும். கார்த்திகை 30 முதல் தை 9 வரை மகர செவ்வாயின் ஆதிக்க காலத்தில் நீங்கள் தொட்ட காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும். சுய ஜாதகத்தில் யோகம் தரும் கிரகத்திற்குரிய தெய்வ வழிபாட்டை மேற்கொண்டால், யோக வாய்ப்புகள் வந்து சேரும்.

(மிகுதி தொடரும்)



## முத்தரப்பு....

(07ஆம் பக்கத்தொடர்ச்சி)

தாங்கள் கூறுவதை அவர்கள் மனத்தளவிலும் நம்புகிறார்கள் என்பது என்னவோ உண்மை. ஆனால், அதுபோன்ற கடந்த கால அரசியல் அனுபவங்கள் இலங்கை அரசு எந்திரத்திற்கோ, சிங்கள அரசியல் தலைமைகளுக்கும் இருக்கும் என்று யாருமே கருதி செயற்படுவதாகத் தெரியவில்லை. அத்தகைய எண்ணம் இரு சாராரிடையேயும் தோன்றுவது வரை, முத்தரப்பு என்ன, முழு தரப்புகளும் பேச்சுவார்த்தை நடத்தினாலும், இனப் பிரச்சினைக்கு அனைவரும் ஏற்று செயற்படுத்தக் கூடிய முடிவு ஏற்படாது.

# 'லிப்ற்' வசதி வேண்டும் மீண்டும் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் புதுவருடத்திலாவது யாழ். போதனா வைத்திய சாலையின் புதிய 4 மாடிகளைக் கொண்ட மருத்துவ விடுதிக் கட்டடத்திற்கான 'லிப்ற்' வசதியை ஏற்படுத்தித்தர சுகாதார அமைச்சும், இலங்கை மின்சார சபையும் நடவடிக்கை எடுக்குமா என்று யாழ். போதனா வைத்தியசாலையினர் கேள்வியெழுப்பியுள்ளனர்.

இவ்விடயம் குறித்து அமைச்சு மட்டத்திலும் வைத்தியசாலை நிர்வாக மட்டத்திலும் இருந்து பல்வேறு தடவை கோரிக்கை விடப்பட்டும் எதுவித பயனும் ஏற்படவில்லை. மாறாக 'லிப்ற்' பொருத்தும் வேலைகளுக்கு வழங்கப்பட்ட காலஅவகாசம் நீடிக்கப்பட்டுக் கொண்டே செல்கிறது.

இதனால் வைத்தியசாலைப் பணியாளர்களும் நோயாளர்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அண்மையில் நோயாளரைச் சுமந்து செல்லும் இரு வைத்தியசாலை ஊழியர்கள் முள்ளந்தண்டு சத்திர கிசிச்சைக்குட்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் புதிய ஆண்டில் துரித நடவடிக்கை எடுத்து குறித்த மாடிக் கட்டடத் தொகுதிக்கு 'லிற்ப்' வசதியை ஏற்படுத்திக் கொடுத்து இப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

ஏற்கனவே கடந்த ஆண்டு வைத்தியசாலை நிர்வாகத்தினால் குறித்த மாடிக் கட்டடத்திற்கு லிற்ப் வசதிகளை ஏற்படுத்த சுமார் 81 இலட்சம் ரூபா இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்பட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (பா)

# வாகன உடமை மாற்றம் படிவங்கள் இலவசம்

(யாழ்ப்பாணம்)

வாகன உடமை மாற்றம் தொடர்பான பாவனையிலுள்ள MTA - 6&8 படிவங்களை பொதுமக்கள் எவ்வித கட்டணமுமின்றி தங்களுக்குரிய பிரதேச செயலகங்களிற்குச் சென்று பெற்றுக்கொள்ள முடியுமென்பதையும், வெளியிடங்களில் விற்கப்படும் படிவங்களை பெற்றுக்கொள்வதை தவிர்த்துக் கொள்ளுமாறும் யாழ். மாவட்ட அரச அதிபர் பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

அத்துடன் குறித்த படிவங்கள் எந்த நிலையிலும் தனியார் கடைகளில் விற்பனை செய்யப்பட முடியாது என்பதுடன் அவ்வாறு விற்பனை செய்யப்படுவது மோட்டார் போக்குவரத்துச் சட்டங்களின்படி தண்டைக்குரிய குற்றமாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

# தீயணைப்பு சேவை இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் தீயணைப்பு வாகனத்தின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளமையால் மறு அறிவித்தல் வரை அதனது சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது என்பதனை பொது மக்களுக்கு யாழ். மாநகர சபை அறிவித்துள்ளது.

# புத்தாண்டுச் சந்தை

(யாழ்ப்பாணம்)

வாழ்வெழுச்சி புத்தாண்டு சந்தையானது யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் இரு தினங்கள் நடைபெறவுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் நடத்தப்படுகின்ற இப்புத்தாண்டுச் சந்தையினை இலங்கை சமுர்த்தி அதிகார சபை, கமநல அபிவிருத்தித் திணைக்களம், கூட்டுறவுத் திணைக்களம் ஆகியனவும் சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களமும் ஒன்றிணைந்து செயற்படுத்துகின்றது.

இச்சந்தையானது உள்ளூர் உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திப் பொருட்களை இலகுவாக சந்தைப்படுத்துவதற்கும் பொது மக்கள் புத்தாண்டுக் காலத்தில் தங்களுக்குத் தேவையான பொருட்களை சகாய விலையில் பெற்று பயனடைவதற்கும் நல்லதொரு சந்தர்ப்பமாக அமையுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'வாழ்க்கை வாழ்வதற்கே' வதிவிட பயிற்சி முகாம்

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் சின்மயாமிஷன் சின்மய கிராம அபிவிருத்தி நிறுவன அனுசரணையுடன் நடத்தும் 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்னும் தொனிப்பொருளிலான 3 நாள் வதிவிட முகாம் இன்று முதல் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரை கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட சின்மயா மிஷன் சுவாமிகள் ஜாக்கிரத் சைதன்யா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் மேற்படி மிஷன் மூலம் உதவி பெறும் யாழ். மாவட்ட பாடசாலைகளில் தரம் 6 - 11 வரையான மாணவர்கள் கலந்துகொள்கின்றனர்.

பட்டிமன்றம், குழுப்பாடல், தனிப்பாடல், நடனம், சித்திரம், கைப்பணிப்பொருள் செயற்திறன் என்பவற்றில் பயிற்சிகளும், போட்டிகளும் நடைபெறவுள்ளன.

# ஆங்கில ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

(வடமராட்சி)

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் பகுதி நேர ஆங்கில ஆசிரியராக பணிபுரிவதற்காக தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களை வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சிவபாதம் நந்தகுமார் கோரியுள்ளார்.

அதற்கான விண்ணப்பங்களை க.பொ.த சாதாரண தரத்தில் ஆங்கில பாடத்தில் ஏ அல்லது டி சித்தியுடன் க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்கள் சித்தியைப் பெற்றவர்களும் அரசாங்க வேலையில் ஓய்வு பெற்றவர்களும் 62 வயதை பூர்த்திசெய்யாத ஆங்கிலத்தில் சிறப்புத் தேர்ச்சியுடன் நல்ல தேகாரோக்கியம் உடையவர்களும் ஆங்கில மொழிமூலம் பட்டம் அல்லது அதற்கு சமமான தகைமை பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

எனவே தகைமையுடைய விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப் படிவங்களை சி.நந்தகுமார், வலயக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி எனும் முகவரிக்கு எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டும்.

இதற்கான எழுத்துமூல தெரிவுப் பரீட்சைகள் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறுமென அவர் அறிவித்துள்ளார். (116)

## அரசுக்கு...

வழங்கிய, உறுதிமொழிகளை நிறைவேற்றினால், தமது கட்சி எதிர்காலத்தில், நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் பங்கு பற்றுவது குறித்து தீர்மானிக்கும் எனவும் சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

## தெற்காசியாவுக்கான...

எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மையத்தின் ஊடாக ஆசிரியர் துறையில் ஆசிரியர் கல்வி, ஆலோசகர்கள், பள்ளி சார்ந்த ஆசிரியர்கள் வளர்ச்சிக்கு பங்களிப்பை பெற்றுக் கொள்ள முடியும் என மேலும் எதிர்பார்க்கப்படுகிறது.

## அரச ஊழியருக்கு...

கீழ் பணியாற்றும் அரச ஊழியர்களுக்கு சீருடை வழங்குவது தொடர்பில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தகவல் வெளியாகிருந்த நிலையிலேயே இந்நடவடிக்கைககள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஏற்கனவே ஒரு பகுதி உத்தியோகஸ்தர்களுக்கு இவை வழங்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்காவின்....

சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக இலங்கை தொடர்பிலான அமெரிக்காவின் புதிய அறிக்கையொன்று வெளிவரவுள்ளதென்ற செய்தி, ஊடகங்களில் வெளிவந்திருந்த நிலையில், நேற்று முன்தினம் புதன்கிழமை மதியம் செனற் சபைக்கு அறிக்கை சம்ர்பிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைச் சபையில் இலங்கை தொடர்பில் அமெரிக்காவினால் கொண்டு வரப்பட்ட பிரேரணை, இலங்கைக்கு நெருக்கடியை ஏற்படுத்தியிருந்த நிலையில், தற்போது அமெரிக்க செனற் சபையில் மேற்படி அறிக்கை சமர்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இலங்கைக்கு பயணம் செய்து கள ஆய்வினை ஸ்ரீபன்றப் மேற்கொண்டிருந்தார்.

இலங்கை தொடர்பில் ஸ்ரீபன்றப்பினால் சமர்பிக்கபட்டுளள்ள அறிக்கை தொடர்பில் விரைவில் அமெரிக்க செனற்சபையில் விவாதம் இடம்பெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## வடக்கில்...

மத்திய வங்கீ பல இடங்களில் குறிப்பாக முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் போன்ற போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நடாத்தி வருகின்றது.

## சிறையில் நடந்த...

வவுனியா பாவற்குளத்தைச் சேர்ந்த சக்திவேல் இளங்கேஸ்வரன் (வயது - 34), வவுனியா நேரியகுளம் பகுதியைச் சேர்ந்த குணசேன சுதர்ஷினி (வயது - 32) என்ற பெண்ணை திருமணம் செய்து கொண்டார்.

இளங்கேஸ்வரனுக்கும் சுதர்ஷினி என்ற சிங்கள பெண்ணுக்கும் இடையில் 15 வருட கால காதல் தொடர்பு இருந்து வந்தது. இவர்களுடைய திருமணத்தை அடுத்து இளங்கேஸ்வரனுக்கு தண்டனை குறைக்கப்பட்டு விடுதலை கிடைக்கும் என உறவினர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, போதைப் பொருள் குற்றச்சாட்டுடன் தொடர்புபட்டு கைதாகி சிறை வைக்கப்பட்டுள்ள கொழும்பு ஜம்பட்டா வீதியைச் சேர்ந்த பாலச்சந்திரன் புஸ்பராஜா (வயது - 34) தனது காதலியான மொஹமட் ராசிக் பாதிமாவை பதிவுத் திருமணம் செய்து கொண்டார். இந்து மற்றும் முஸ்லிம் மதத்தைச் சேர்ந்த இவ்விருவருக்கும் இடையில் 10 வருட காதல் தொடர்பு இருந்து வந்துள்ள நிலையில் திருமணம் செய்து கொண்டனர்.

இந்த இரு திருமண நிகழ்வுகளையும் சிறைச்சாலைகள் திணைக்களம் ஏற்பாடு செய்திருந்த நிலையில் அரசியல் பிரமுகர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலர் இதில் கலந்து கொண்டனர்.

## இந்தியக் குழுவில்...

என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலர் டி.ராஜா, மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தொல். திருமாவளவன் ஆகியோர் தெரிவித்தனர்.

இதனிடையே இந்திய மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா ஸ்வராஜ் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு எதிர்வரும் 16 ஆம் திகதி இலங்கை வருகிறது. இலங்கை வரும் இந்த குழு 25 ஆம் திகதி வரையில் இலங்கையில் தங்கியிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவில் திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் மக்களவை உறுப்பினர் டி.கே.எஸ். இளங்கோவன், காங்கிரஸ் மக்களவை உறுப்பினர்கள் மாணிக்கம் தாகூர், கிருஷ்ணசாமி, என்.எஸ்.வி.சித்தன், மாநிலங்களவை உறுப்பினர் சுதர்சன நாச்சியப்பன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இவர்களைத் தவிர சில வடமாநிலங்களில் உள்ள கட்சிகளின் உறுப்பினர்களும் இந்த குழுவில் இடம்பெற்றுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இலங்கை செல்லும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவில் தமிழக எம்.பி.க்களையும் சேர்க்க வேண்டும் என்று பா.ஜ.க. மாநில தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு வரும் 16 ஆம் திகதி எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா ஸ்வராஜ் தலைமையில் இலங்கை செல்வது மகிழ்ச்சி என்றாலும் அந்தக் குழுவில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, ம.தி.மு.க, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஆகியவற்றைச் சேர்ந்த எம்.பி.க்கள் இல்லாததை ஏற்றுக்கொள்ள முடியாது. கருத்துக்கள் மாறுபட்டிருந்தாலும் நாடாளுமன்றக் குழுவில் அனைத்துக் கட்சிகளும் இடம்பெற வேண்டும் எனத் தெரிவித்தார்.

## தெரிவுக்குழு...

என்பதற்காகவும் இந்தியாவுடனும், அமெரிக்காவுடனும் நாம் பகைமை பாராட்டவில்லை. அவர்களும் எம்மோடு பகைமை பாராட்டவில்லை. இலங்கைக்கு எதிரான பிரேரணை கொண்டு வரப்பட்டதை அடிப்படையாகக் கொண்டு நாம் தூதரகங்களை மூடிவிடப்போவதாக தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் உண்மைக்குப் புறம்பானவை.

எமது இராஜதந்திர உறவுகளில் எந்தவித பாதிப்புகளும் இல்லை. ஆனால், புதிதாக வர்த்தக நடவடிக்கைகளுக்காக சில நாடுகளில் தூதரகங்களை திறக்கவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. அதனால், எமது வளத்துக்கு ஏற்றவகையில் சில இடங்களில் தூதரகங்களை மூடி சில இடங்களில் புதியவற்றைத் திறக்கவுள்ளோம்.

சர்வதேச சமூகம் இலங்கை போன்ற நாடுகளுக்கு அழுத்தங்களைக் கொண்டுவருவதற்கு முன்னர் அந்த நாட்டுக்கே உரிய தீர்வுகளை, முன்னெடுப்புக்களை செய்வதற்கான சந்தர்ப்பங்களை வழங்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

## வாகன இறக்குமதி....

வருடங்கள் வரை பயன்படுத்தப்பட்ட கார்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டது. இப்போது ஒரு வருடம் அல்லது அதிலும் குறைந்த காலம் பயன்படுத்தப்பட்ட கார்களையே இறக்குமதி செய்ய முடியும். வான்களுக்கான அல்லது அதிலும் பெரிய வாகனங்களுக்கான பாவனைக்காலம் ஐந்து வருடங்களிலிருந்து மூன்றரை வருடங்களாக குறைக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக 120 சதவீத தீர்வை செலுத்திய கார்களுக்கு 200 சதவீத தீர்வையும் 51 சதவீத தீர்வையுடன் இறக்குமதியான முச்சக்கரவண்டிகளுக்கு 100 சதவீத தீர்வையும் செலுத்த வேண்டியுள்ளது. 2009 இல் 3421 வாகனங்களும் 2010 இல் 37134 வாகனங்களும் 2011 இல் 54285 வாகனங்களும் இறக்குமதி செய்யப்பட்டதாக திறைசேரி அறிவித்துள்ளது.

முன்பு ஒரு குடும்பத்துக்கான காரின் விலை 1.2 மில்லியன் ரூபாவாக இருந்தது. இனிவரும் காலங்களில் அதுபோன்றதொரு கார் வாங்குவதற்கு 5 மில்லியன் ரூபா தேவைப்படும் என வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் யோகா பெரேரா தெரிவித்தார்.

இந்த நிலைமையில், எம்மால் தொழில் செய்ய முடியாது. எனவே இந்தத் துறையில் வேலை செய்யும் ஒரு மில்லியன் பேர் தமது தொழிலை இழக்கும் ஆபத்தில் உள்ளனர் என்று அவர் மேலும் கூறினார்.

# கொட்டாஞ்சேனையில் பட்டப்பகலில் கொள்ளை

(கொழும்பு)

கொட்டாஞ்சேனைப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் வங்கியொன்றிலிருந்து பத்து இலட்சம் ரூபா பணத்துடன் வந்த ஒருவரைத் தாக்கிப் படுகாயப்படுத்திய குழுவொன்று அவரிடமிருந்த பணத்தை அபகரித்துச் சென்றுள்ளது.

கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்திலிருந்து சுமார் 200 மீற்றர் தூரத்தில் முத்துமாரி அம்மன் கோவிலுக்கு அருகிலேயே பிற்பகல் 3 மணியளவில் இந்தத் துணிகர வழிப்பறிச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கொட்டாஞ்சேனை சந்திக்குப் சமீபமாகவுள்ள தனியார் வங்கியொன்றில் பத்து இலட்சம் ரூபா பணத்தை எடுத்துக் கொண்டு மாரிமுத்துப்பிள்ளை சிதம்பரம் (வயது-60) என்பவர் தனது வீட்டிற்கு நடந்து சென்றுள்ளார்.

வீட்டுக்கு அருகில் சென்றபோது, மிக வேகமாக வந்து இவரது அருகில் நின்ற வெள்ளை நிற சிறிய ரக வானிலிருந்து கீழே குதித்த இருவர் குறித்த நபரை இரும்புக் கம்பியால் தாக்கியுள்ளனர்.

அதன்பின்னர் குறித்த நபரிடமிருந்து பணப்பையை அபகரித்துக் கொண்டு வானில் வந்தவர்கள் தப்பிச் சென்று விட்டனர்.

# நிலத்தடி நீரைப் பாதுகாக்க திட்டம் எதுவும் இல்லை

## சுட்டிக் காட்டுகிறார் அமெரிக்க அதிகாரி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீரைப் பாதுகாப்பதற்குரிய சிறந்த திட்டங்கள் எதுவும் இல்லாதிருப்பது எதிர்காலத்தில் நீர்வளம் அழிக்கப்பட்டு நீருக்கு தட்டுப்பாடு ஏற்படும் நிலையை உருவாக்கிவிடும் என்று அமெரிக்க தூதரக அலுவலரும் சூழலியலாளருமான கிறிஸ்ரோபர் கோகே தெரிவித்தார்.

யாழ். சமூக செயற்பாட்டு மையத்திலுள்ள அமெரிக்கத் தகவல் கூடத்தில் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க உள்ளூர் அளவில் நடவடிக்கை எடுக்க "உலகத்தை அணிதிரட்டுவோம்'' என்ற தொனிப்பொருளில் கலந்தாயவரங்கு ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது இக்கலந்தாய்வரங்கின் போது பொது விரிவுரையை கிறிஸ்ரோபர் கோகே ஆற்றிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

யாழ்ப்பாணத்தில் சிறந்த அழகான கடற்கரைகள் இருக்கின்றன. இந்தக் கடற்கரைகளில் கழிவுப் பொருட்களை அகற்றி பாதுகாக்க வேண்டும். யாழ்ப்பாணத்தின் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதன் மூலம் நீண்ட காலத்திற்கு எமக்கு ஏற்படக் கூடிய பொருளாதாரப் பிரச்சனைகளை தடுக்க முடியும்

இலங்கையில் காடுகள் அழித்தல் பெரிய பிரச்சனையாக இருக்கிறது. இந்தப் பிரச்சினை கட்டுப்படுத்த முடியாது தொடர்ந்து நீடித்து வருகிறது. இலங்கையின் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதன் ஊடாக உல்லாசத் துறையை மேம்படுத்த முடியும் எமது சூழலைப் பாதுகாப்பாக வைத்திருந்தால் எதிர்காலத்தில் எமக்கு இயற்கையால் எந்தப் பிரச்சனையும் வராது என்றார்.

# வழக்கிற்கு வராத சி.ஐ.டி. பொலிஸ் விசனம் அடைகிறார் ஹிருணிகா

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் கொலை தொடர்பான நீதவான் நீதிமன்ற விசாரணையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் (சி.ஐ.டி) செயற்படும் விதம் குறித்தும் பாரத லக்ஷ்மனின் மகள் ஹிருணிகா பிரேமச்சந்திர அதிருப்தி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வழக்கிற்கு சமுகமளிக்காத சி.ஐ.டி. பொலிஸாரின் நடவடிக்கை குறித்து அவர் தெரிவித்ததாவது, துமிந்த சில்வா எங்கிருக்கிறார் என்பதையும் ஏன் அவர் கைது செய்யப்படவில்லை என்பதற்கான காரணத்தையும் நீதிமன்றுக்கு அறிவிக்குமாறு முந்தைய விசாரணையின்போது நீதவான் உத்தரவிட்டிருந்தார். இக்கேள்விகளுக்கு பதிலளிக்க நேரிடும் என்பதால் சி.ஐ.டி. வேண்டுமென்றே நீதிமன்றில் ஆஜராகவில்லை என நான் கருதுகிறேன்.

புத்தாண்டு விடுமுறைக்கு முன்னர் நீதிமன்ற விசாரணை நடைபெறும் கடைசி நாள் என்ற நிலையில் நேற்று முன்தினம் அதிக எண்ணிக்கையான வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்ட நிலையில், சி.ஐ.டி. உட்பட அனைத்து அரச ஊத்தியோகஸ்தர்களையும் நீதிமன்ற அறைக்குள்ளும் ஏனையோரை நீதிமன்ற அறைக்கு வெளியிலும் இருக்குமாறு அங்கு கடமையிலிருந்த பொலிஸார் கோரினர்.

ஏனைய அரச உத்தியோகஸ்தர்கள் அவர்களின் வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்படும்வரை நீதிமன்றில் இருக்க முடியுமானால் மேற்படி சி.ஐ.டி. உத்தியோகஸ்தர் ஏன் இருக்க முடியாது என ஹிருணிகா கேள்வி எழுப்பினார். மேலும் சட்ட அமுலாக்கல் அதிகாரிகள் தமது கடமைகளை தாமதித்தால் பலியானவரின் குடும்பத்தினர் எப்படி நீதியை எதிர்பார்க்க முடியும் எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

## மின்தடை இல்லை

(யாழ்ப்பாணம்)

முன்னர் அறிவிக்கப்பட்டவாறு இன்று, நாளை, நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை ஆகிய தினங்களுக் கான மின் தடைகள் யாவும் இரத்துச் செய்யப்படுகின்றன.

## மோசடி நபர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாக, இளைஞர் யுவதிகளிடம் பணம் பெற்றுக்கொண்டு தலைமறைவாகியிருந்த சுதந்திரக்கட்சி முக்கியஸ்தரை யாழ்.பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர். இவர் ஶ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் பணியாற்றிய போது, தனது அரச கட்சி என்ற பெயரை பாவித்து இளைஞர் - யுவதிகளிடம் மோசடி செய்துள்ளார்.

இலங்கை மின்சார சபை, ஶ்ரீ லங்கா ரெலிக்கொம் உள்ளிட்ட அரச நிறுவனங்களில் வேலை பெற்றுத்தருவதாக, இவர் இளைஞர் யுவதிகளிடம் பணம் பெற்றுக்கொண்டு தலைமறைவாகியுள்ளார். இது தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் பொலிஸில் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து, குறித்த நபரைப் பொலிஸார் தேடி வந்தனர். இந்நிலையில் அரியாலையிலுள்ள இவரது வீட்டில் வைத்தே நேற்று முன்தினம் பொலிஸார் இவரை கைது செய்தனர். இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளையும் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# உயர்தரப் பரீட்சை மீள்திருத்தம் பெறுபேறுகள் இன்னும் இல்லை

(கொழும்பு)

கடந்த ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மீள்திருத்தப் பெறுபேறுகள் இன்னும் வெளியிடப்படவில்லை என இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி மீள் திருத்தத்திற்காக விண்ணப்பித்த மாணவர்கள் விரக்தி மற்றும் கவலையுடன் இருப்பதாக சங்கத்தின் பிரதான செயலாளர் மகிந்த ஜயசிங்க தெரிவித்தார். உயர்தரப் பரீட்சை பெறுபேறு வெளியானதன் பின் அதில் காணப்பட்ட சிக்கல்களால் சமூகத்தில் பாரிய பரபரப்பு ஏற்பட்டது.

அதனால் விடைத்தாள் மீள் திருத்தத்திற்கு 1,40, 000 மாணவர்கள் விண்ணப்பித்திருந்தனர். இதற்கான பெறுபேறுகள் பரீட்சைகள் திணைக்களத்தால் இன்னும் வெளியிடப்படாதுள்ளமை சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.



93ஆவது பிறந்த நாளைக் கொண்டாடிய உலகப் புகழ்பெற்ற திரைப்பட இயக்குநர் கலாநிதி லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸின் இல்லத்திற்கு ஜனாதிபதி நேரில் சென்று வாழ்த்தி அவரை வியப்பில் ஆழ்த்தினார். அவருக்கு பிறந்தநாள் பரிசாக ஞாபகச் சின்னம் ஒன்றையும் ஜனாதிபதி வழங்கினார்.

## ஊருக்குள் வந்த முதலை



மட்டக்களப்பு நகரின் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பிரதேசத்துக்குள் முதலையொன்று நேற்று முன்தினம் இரவு உள் நுழைந்ததன் காரணமாக பெரும் அல்லோல கல்லோலம் ஏற்பட்டது. மட்டக்களப்பு நகரின் எல்லை வீதியிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. எனினும் இளைஞர்கள் முதலையை மிகவும் கஸ்டப்பட்டு பிடித்தனர். இந்த நிலையில் குறித்த முதலை தொடர்பில் பொலிஸாருக்கும் வன இலாகா அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டு ஸ்தலத்துக்கு வந்த அவர்கள் அவற்றைக் கொண்டு சென்றனர்.

# நோர்வேயில் கலாசார மாற்றத்தால் பிள்ளைகளைப் பிரிந்த பெற்றோர்

நோர்வேயில் வாழும் இலங்கைத் தமிழ்க் குடும்பமொன்று, தமது 12 வயது பெண் பிள்ளையை அடித்து தண்டித்த சம்பவத்தின் பின்னர், பள்ளிக்கூடத்திலிருந்து குறித்த பெற்றோரின் மூன்று பிள்ளைகளையும் நோர்வே குழந்தைகள் பராமரிப்பு அதிகாரிகள் அழைத்துச் சென்றுவிட்டனர். தமது பிள்ளைகளை தங்களிடம் திருப்பித் தரமறுப்பதாக தாயாரான ஜெக்லின் டிலாந்தினி குற்றஞ்சாட்டுகின்றார். இவர்களின் பிள்ளைகள் நோர்வே பிரஜைகள் என்ற போதிலும், குறித்த பெற்றோர் இலங்கைப் பிரஜை என்ற அடிப்படையில் நோர்வேயிலுள்ள இலங்கைத் தூதரகத்திடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், குழந்தைகளுக்கு கையால் உணவூட்டுவது, ஒரே அறையில் உறங்கச் செய்வது போன்ற பழக்கங்கள் தவறானவை என்றும் அதிகாரிகள் கூறுவதாக அவர் தெரிவித்தார்.

உள்ளூர் நீதிமன்றமொன்று, தமது பிள்ளைகளை சிறார் பராமரிப்பு நிறுவனத்திடமே ஒப்படைக்க வேண்டும் என்றும் தமிழ் கலாசார முறைப்படியே வளர்க்க வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது. தமது 12 வயது மற்றும் 8



வயது பெண்பிள்ளைகளும் 6 வயது ஆண்பிள்ளையும் இவ்வாறு 5 மாதமாக பெற்றோரிடம் இருந்து பிரிந்து வாழ்கின்றனர்.

## கலந்துரையாடல்

"இலங்கையில் பொருளாதார நெருக்கடியும் யாழ்.குடாநாட்டில் அதன் தாக்கங்களும்" என்ற தொனிப்பொருளில் நிலாமுற்றம் பகுதி 4 என்ற நிகழ்வு டாக்டர் எஸ்.சந்திரசேகரம் (பேராசிரியர் பொருளியற்துறை, யாழ்.பல்கலைக்கழகம்) தலைமையில் இன்று மாலை 3.30 மணி தொடக்கம் 5.30 மணி வரை இல.82, பிறவுண் வீதி (நீராவியடி பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக) Nation popular Travels & Tours இன் பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

## துமிந்தவுக்கு தொடர் சிகிச்சை

தற்போது சிங்கப்பூரில் சிகிச்சை பெற்றுவரும் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கும் அடுத்தவாரம் மற்றும் ஒரு சத்திரசிகிச்சை செய்யப்படவுள்ளது. சிங்கப்பூரிலுள்ள எலிஸபெத் வைத்தியசாலையில் இச்சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஏப்ரல் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.